ஸ்ரீ

ஹரி: ஓம்

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# கூளப்பாள்

என்று வழங்குகிற

# வதாருவனத்தலபுராணம்.

ம்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய

பின்னத்தூர், ப்ரம்ஹஸ்ரீ

அ. நாராயணசாமிஐயரவர்கள்

இயற்றியது.

திருக்களர்

சாமிநாத உபாத்தியாயரால்

கும்பகோணம்

ஸ்ரீவித்தியா அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

*Copyright Registered.*

இதன் விலை அணா 12.

1905

# முகவுரை.

பூவுலகத்தில் புகழ்மிக்கோங்கி மேவுறுவளம்பலமிகு சோழநாட்டில் வண்டுவராபதி மன்னார்கோவிலு (மன்னார்குடி) க்குத் தென்றிசைக்கண் ஒருநாழிகைவழிக்கப்பாலுள்ளதும் களப்பாளென்றுவழங்கப்பெற்றதுமான இந்தத்தேவதாருவன மகாக்ஷேத்திரத்தில் அர்ச்சாவதாரமாகி எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீகஜேந்திரவரதப்பெருமாளின்** புராணமொன்று வடமொழியிலிருந்ததனைத் தென்மொழியில் மொழிபெயர்க்கவேண்டுமென்று இந்தப்பெருமாள்கோயில் அர்ச்சகராகிய மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணபட்டாசாரியரவர்களும் யானும் நெடுநாளாக யோசித்துக்கொண்டிருந்தகாலத்தில் மத்தியில் யான் திருக்களர்த்தலபுராணத்தினை அச்சியற்றவேண்டிப் பின்னத்தூர் ப்ரும்ஹஸ்ரீ **நாராயணசாமிஐயரவர்களிடத்திற்** சென்று அந்தப்புராணத்தினை அச்சிட்டுத்தரும்படி கேட்டுக்கொண்டனன்; அங்ஙனமே அவர்கள் அதனைப்பரிசோதித்துத்திருத்தி அச்சிட்டு வரும்பொழுது ஷை திருக்களர்க்கோயிலுள்ள சிலாசாஸனம் முதலியவற்றை யெடுத்தெழுதுகிற நிமித்தம் அவர்கள் இங்குவந்தகாலத்தில் இங்குள்ளமுற்கூறிய பட்டாசாரியரவர்களும் இன்னும் சிலரும் இத்தேவதாருவனத்தலபுராணத்தை மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அவ்வண்ணமே இதனைத்தமிழில் செய்யுள்நடையாக மொழிபெயர்த்துக்கொடுத்தார்கள்; இது கற்றோரன்றிமற்றோர்க்கும்பயன்படுமாறு இப்புராணச்செய்யுளுக்கிணங்க வசனத்தையும் சுருக்கமாகஎழுதி இக்கோயிலில் வரைந்துள்ளசிலாசாதனங்களையும் எடுத்துச்சேர்த்துச் செய்யுளிலுள்ள சிலஅரும்பதங்களுக்குப்பொருளுமெழுதி ஷை கிருஷ்ணபட்டாசாரியரவர்களுதவியாலும் கோயிற்களப்பாள் மகா-ள-ள-ஸ்ரீ நா. பக்கிரியோந்திரியாரவர்களுதவியாலும் இன்னும் சில கனவான்களுதவியாலும் இதனை அச்சிடுவித்தனன்; இதில் ஏதேனும் எழுத்துப்பிழைகள் முதலியனகாணப்படுமாயினும் அறிவுடையோர்கள் வெகுளாது அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

3—5—1905.
திருக்களர்.

இங்ஙனம்
மு. சாமிநாத உபாத்தியாயன்.

# சூசீபத்திரம்.

| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| | புராணவசனச் சுருக்கம் ... | ... | க. |
| க. | பாயிரச் சருக்கம் ... | ... | கசு. |
| உ. | நைமிசச் சருக்கம் ... | ... | உச. |
| ௩. | தலவிசேடச் சருக்கம் ... | ... | உள. |
| ௪. | கருடச் சருக்கம் ... | ... | ௩௪. |
| ௫. | வசிட்டச் சருக்கம் ... | ... | ௪உ. |
| ௬. | முனி தீர்த்தச் சருக்கம்... | ... | ௪௪. |
| எ. | கயேந்திர வரதச சருக்கம் | ... | ௫௬. |
| அ. | தாலத்துவசச சருக்கம் . . | ... | எ௰. |
| ௯. | இந்திரயாகச் சருக்கம் | ... | எ௬. |
| ௰. | தீர்த்தமான்மியச சருக்கம். | ... | அக. |
| | சிலா சாதனங்கள் ... | ... | அ௫. |
| | அரும்பத விளக்கம் . . | ... | ௯௩. |

## பிழை திருத்தம்.

### வசனம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம |
|---|---|---|---|
| உ | உ௪ | இத்தலத் | அததலத |
| ௩ | ௩க | ஆனைக்கா | ஆனைகா |
| எ | கஉ | தன் | தம |
| க௫ | கக | என்னி | எம்மி |
| ,, | கஎ | தான் | தாம் |
| ,, | உஉ | தன்னு | தமமு |

### பாடலின் செய்யுள்.

| | எண் | | |
|---|---|---|---|
| உஉ | கஅ | கைகைகை | கைகை |
| ௩௯ | ௯அ | மிசையை | மிசையெ |
| ௩௩. | ௪௫ | தப்போர் | தப்பேர் |
| ௪க | ௫௪ | விரம்பி | விரப்பி |
| ௫அ | க௪ | மெய்யாது | மெய்யாத |
| எ௫ | ௩எ | வைபோகங் | வைபவங் |
| எ௯ | க | அ—தாலத்துவசச் சருக்கம். | ௯-இந்திரயாகச சருக்கம. |



ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# களப்பாள்

என்று வழங்குகிற

# தேவதாருவனத்தலபுராணம்.

வசனச்சுருக்கம்.

## முதலாவது பாயிரச்சருக்கம்.

இது தெய்வவணக்கமும் அவையடக்கமும் சிறப்புப்பாயிரமும் கூறுகின்றது.

## இரண்டாவது நைமிசச் சருக்கம்.

பூவுலகத்தில் தவஞ்செய்தற்குரிய இடமொன்றினை விரும்பிய முனிவர்கள் பிரமதேவரையடைந்து வணங்கித் தங்கள் கருத்தினைக்கூற அதனைக்கேட்ட பிரமதேவர் மகிழ்ந்து கையிலிருந்த தருப்பையை ஒரு வளையமாகக்கட்டி முனிவரை நோக்கி இந்த நேமி (வளையம்) எந்த இடத்தில் விழுந்ததோ அந்த இடம் மிக்க பரிசுத்தமுடையதாகும்; அவ்விடத்திலிருந்து நீங்கள் தவஞ்செய்யுங்களென்று சொல்லி அந்த நேமியைப் பூமியிற்போக்கலும் அது இமயமலையின் தென்பால் விழுந்தது; அது விழுந்த இடத்திலுண்டாகிய வனத்திற்கு நைமிசாரணியமென்று பெயராயிற்று.

அவ்வனத்தில் பிருகுமுனிவன் புதல்வனாகிய சௌனகனாதிப்பற்பல முனிவரர் ஒருங்குகூடித் தவஞ்செய்யுங்காலத்தில் ஒருநாள் வியாஸ மஹரிஷியின் சிஷ்யரான சூதமுனிவரென்பவர்

அங்கு வர அவரை எதிர்கொண்டு பணிந்து உபசாரம் புரிந்து ஒரு ஆஸனத்தின்மேலிருத்தித் தாம் அருகிலிருந்து ஐயா! பண்டொருகாலத்தில் நீர் எங்களுக்கு நிலங்கடந்த நெடுமாலின் க்ஷேத்திரமான்மியங்கள் சொல்லிவரும்பொழுது களப்பாளென்னும் தலத்தில் வீற்றிருந்தருளுகிற கஜேந்திரவரதமூர்த்தியின் திவ்ய சரித்திரத்தைச் சொல்லி எங்களை மகிழ்வித்திராயினும் மீட்டும் அதனைக்கேட்டுக் களிக்கவேண்டுகிறோமென்று வணங்கக்கண்ட சூதமுனிவர் மகிழ்ந்து அவர்களைத் தன் அருகிலிருத்தி முனிவிர்காள்! திருமாலின் திவ்யதேச சரிதமெல்லாம் பகவான் வியாஸ முனிவர் எனக்கு அருளிச்செய்து இவற்றை 'அன்பர்களுக்கு நீ சொல்லுக' என்றவண்ணம் உங்கள் பக்திக்கு யான் மிக மகிழ்ந்து சொல்லுகிறேன். முன்னாம் நாரதமகாமுனிவர் பிரமாவை அடைந்து வணங்கி எம்பெருமானுடைய க்ஷேத்திரங்களின் சிறப்பனைத்துங் கூறியருளும்படி கேட்ப, அனைத்துங்கூறவேண்டா. சிறந்த ஒரு தலத்தின் மான்மியங்கேட்டால் எல்லாவற்றையுங் கேட்டதனாலுண்டாகும் பலன் ஒருங்கு அடையலாகும். அத்தகைய தலமொன்றுளது அதன் மான்மியத்தினைக்கேட்பாயாக வென்று இக்களப்பாளின் தலமகிமையும் கருடன் பேறுபெற்றதும் வசிட்டமுனிவர் ஞானம்பெற்றதும் மார்க்கண்டேயர் முதலானோர் பயன்பெற்றதும் அங்குத் துருவாசமுனிவர்சாபத்தால் யானையும் முதலையுமாகிப் போர்புரிந்த கந்தருவர்கள் சாபநீங்கியதும் கலிங்கதேசத்து அரசன் தாலத்துவசனுற்ற பேய்வடிவம் நீங்கியதும் இத்தலத்தில் இந்திரன் அசுவமேதயாகஞ்செய்ததும் தீர்த்தமான்மியமும் ஆகிய இவற்றைக் கூறக்கேட்டவாறே யான் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

## மூன்றாவது தலவிசேடச்சருக்கம்

திருவரங்கம் முதலாகிய நாற்பதுதிருப்பதிகளைப் பெற்றதும் 'தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்' என்னும் இவர்கள் அவதரித்தற்கிடமாகியதும் இராமாயணத்தைத் தமிழிலியற்றியருளிய கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் அவதரிப்பதற்கிடமாகிய தேரழுந்தூரைத் தன்னிடத்திற்கொண்டதும் நந்தியென்னுமரிற்பிறந்த வரதனென்

னுமியற்பெயரையுடைய காளமேகனார் தமக்குத் திருமலைராயனால் கொடுக்கப்பெற்ற பரிசுகொண்டு பாம்புணிக்கூற்றத்துச் * சிற்றம்பர் என்னுமூரில் அக்கிரகாரமமைத்துப் பிராமணோத்தமர்களுக்குத் தானஞ்செய்யப்பெற்றதும் இன்னும் பற்பல சிறப்புக்களெய்தப்பெற்றதுமாகிய சோழநாட்டையாண்ட சூரியவமிசத்தரசரில் சுரகுரு முதலாகிய சோழமன்னர்களால் பல உள்நாடுகளாகப் பகுக்கப்பட்டுத் தம் முன்னோர்களின் பெயர்களாலே வழங்கப்பெற்ற அந்நாடுகளில் இராஜேந்திரசோழவளநாட்டினுள் புறங்கரம்பை நாட்டில் இவ்வூர் விளங்குவதொன்றாகும். இது கிருதயுகத்தில் தேவதாருவனமென்றும் திரேதாயுகத்தில் வசிட்டபுரமென்றும் துவாபரயுகத்தில் கருடபுரமென்றும் கலியுகத்தில் கஜேந்திரவரதபுரமென்றும்பெயர்வழங்கப்பெற்றுளது. பிற்காலத்தில் வேளாளர்குலத்திற்பிறந்த களப்பாளனென்னுமொருவன் அரசனருளால் தன் பெயரை இந்தப்பதிக்கு இட்டதனால் இது களப்பாளென்று பெயராயிற்று.

இத்தலத்திற்கு முடிவழங்குசோழவிண்ணகரமென்றும் சந்நிதி அக்கிரகாரத்திற்கு முடிவழங்குசோழசதுர்வேதிமங்கலமென்றும் பெயருள்ளன. சைவசமயத்தில் அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் கூற்றுவநாயனாரென்பவர் இங்கு அவதரித்து இதனை ஏழுகூறுபடுத்தியாண்டனரென்பது பிரசித்தம். பராந்தகசோழன்மகனை இராஜாதித்தசோழனென்பவன் இவ்வூரிற் சிவபெருமான் கோயிலெடுப்பித்துத் தன்பெயரால் ஆதித்தேச்சுரமெனப் பெயரிட்டனனென்றுஞ்சொல்லுவார்கள்.

யாங்கும் எச்சமையத்து எந்தத்தெய்வத்தைத்துதிப்பினும் அத்துதி அச்சுதப்பெருமானைச் சேர்தலால் அங்ஙனந் துதிக்கின்றவர்களுக்கு அருளும்பொருட்டு அவ்வச்சமையத்தில் அவ்வக்கடவுள்போலத் தோன்றுகிற எம்பெருமான் இங்கு விளங்குவதால் இத்தலத்தை அடைபவரே நன்மையடைபவராவார். பிறப்பையகற்றவேண்டித் துதிப்போரும் தவஞ்செய்வோரும் அரும்பொருள்காண விரும்புவோரும் எக்காலத்திலும் இங்கு வசிக்கின்றார்கள். அன்றியும் மூவாயிரமகரிஷிகள் எம்பெரு

---

* இது தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடித்தாலூகாவிலுள்ளது. சித்தாம்பூரென்று வழங்கப்படுகிறது.

மானைத்தியானித்துக்கொண்டு இத்தலத்தில் வசிக்கின்றார்கள். இதனில் ஒரு விநாடிகைப்பொழுது வசிப்பவர் அடையும்பயனை ஞானிகளாலும் அறிந்துரைப்பதரிதாகும். வைகுந்தத்தில் ஒரு மாதமும் கங்கைக்கரையில் ஐந்துமாதமும் மற்றத்தலங்களில் பற்பலகாலமும் வசிப்பதனாலுண்டாகும்பயன்களெல்லாம் இப்பதியில் ஒருபொழுது உறைபவர் அடையும் பலனுக்கு நிகராகா. இப்பதி யாவராலும் வணங்கப்பெறுகின்ற தார்க்காதேவி கோயிலையுடையதுமன்றிப் பலபல யாகசாலைகளும் கல்விபயிலுமிடங்களும் வேதசாலைகளும் அன்னசத்திரங்களும் அமையப்பெற்றது.

கள்ளுண்டோரும் உறுதிதவறினோரும் வஞ்சித்துண்டோரும் வஞ்சனையுரைப்போரும் உயிரை வதைப்போரும் பொய்யரும் வசைகூறுவோரும் நஞ்சூட்டுவோரும் கற்பழித்தோரும் வேதசாலையை இழிவுபடுத்தினோரும் ஊனுண்போரும் பெருமையிழப்பவரும் போரில் பின்னிடுவோரும்பெரியோரைப் பகைத்தவரும் ஞானிகளையிகழ்ந்தோரும் பெரியோர்சொல்லை அவமதித்தோரும் இந்தத்தலத்தையடைந்தால் தம் பாவங்களைப்போக்கினவராவார். எத்தலத்திலும் நிவர்த்தியாகாத தீமைகளும் இங்கு நிவர்த்தியாகும். எத்தகைய கீழ்மையான உயிரானாலும் இக் களப்பாளையடைந்தால் நன்மைபெறுமென்பது நிச்சயம். இந்தப்பதியை அடைந்தாலும் அடைய நினைத்திருந்தாலும் அப்படி நினைத்தவரோடு நட்புடையாரானாலும் அவர்கள் பெரும்பேறடைவார்கள். எவ்வளவுதருமம்புரிந்தவரேயானாலும் இந்தக் களப்பாளையடையாதவர் நரகத்தினையன்றி வேறிடம்பெறார். திருக்கோயிலின்கண்ணே முளைக்கும் புல்லுகளை வேரோடு நீண்டெடுப்போரும் கோயிலுக்கு வேண்டுந்திருப்பணி செய்வோரும் நந்தவனங்கள் வைப்போரும் எம்பெருமானுக்குத்திருமாலைகட்டிச்சார்த்துவோரும் இருமைப்பயனையும்அடைவார்கள்.

இவ்வளவு சிறப்புற்ற களப்பாளில் உலகந்தோன்றியகாலத்தோடொப்பத்தோன்றிய நந்தியாவருத்த விமானத்தில் எழுந்தருளியிருக்கு மெம்பெருமான் சேவடியைப்பணியாதார் பிறவிப்பிணியை அறுப்பதெவ்வண்ணமேயோ. இதன் சிறப்பினை முழுவதுங்கூறுவதரிதாகலிற் சிறிதுரைத்தேன். இனி மற்றுள்ள காதைகளைக் கூறுகின்றேன்.

## நான்காவது கருடச்சருக்கம்.

பிரமபுத்திரரில் மரீசியின் புதல்வராகிய காசியபமுனிவர் தக்ஷப்பிரமாவின் புதல்வியரிற் பதின்மூவரை மணந்து வாழுநாளில் அவர்களுள் வினதையென்பவள் கணவனைநோக்கி மகப்பேற்றைவிரும்பலும் முனிவர் இரண்டு அண்டங்களையுதவி 'ஆயிரம் யாண்டு இவற்றைக்காப்பாயாக; பின்பு புத்திரர் தோன்றுவர்'எனக்கூறித் தவத்திற்கேகினர். அவர் கூறியவாறே அண்டங்களைக் காத்துறையுங்காலத்து முனிவர்மனைவியருட் கத்துருவென்பவள் பாம்புகளையெல்லாம் தன்மக்களாக உயிர்த்தமை கண்டு வினதை பொறாளாகிப்பாதியாண்டில் அண்டங்களில் ஒன்றனை உடைத்தலும் பாதியுருவொடு அருணன்தோன்றித் தன் தாயைநோக்கி அன்னாய்! 'என்னை இங்ஙனம் முற்றுப்பெறாது கெடுத்தமையால் நீ மாற்றாளுக்கு அடிமையாகுக' என்று சபித்தனன்; மீட்டும் அன்னைவேண்ட மற்றோரண்டத்திலுள்ளவன் தீர்ப்பனென்று கூறியிட்டுச் சூரியனுக்குத் தேர்ப்பாகனாகிச்சென்றனன்.

பின்பு ஓர்நாள் கத்துருவும் வினதையும் நீராடச்சென்றவிடத்து இந்திரனது குதிரை வந்து மேய்வது கண்டு அப்பரியின் வால் வெள்ளியதுபோலுமென்று வினதை கூறக் கத்துருவென்பவள் மாறாக அது கரியதேயாமென்றனள்; இருவரும் தாம்தாம் கூறுவது பொய்ப்பின் ஒருவருக்கொருவர் அடிமையாவதென்று உறழ்ந்துசொல்லி மனையெய்தினர். அவருட்கத்துருவென்பவள் தன் மக்களிடத்திற்கூறி மற்றைய நாள் அப்பரியின் வாலிற்கருமைதோன்றச்செய்து அதனை வினதைக்குக்காட்டி அடிமையாக்கிக்கொண்டனள்.

சில நாளில் வினதை தன்கேள்வன் சொன்னகாலங்கடந்து மற்றோரண்டத்தினையுடைப்பக் கருடன் தோன்றினன். தோன்றியமைந்தன் தன் தாய் மாற்றாளுக்கு அடிமையாய்க் குற்றேவல்செய்வதும் அதன்காரணமும் நன்றாகவறிந்து மீட்கும் வழி நாடித் தாயோடு கூற அவளும் கத்துருவின்பாற்சென்று தன்னை விடுவிக்குமாறு வேண்டலும் கத்துரு தன் மக்களொடு யோசித்து வினதையை நோக்கித் 'தேவாமுதம் இங்குத் தந்தால் நீ மீட்கப்படுவாய்' என அதனைத்தன் மைந்தனுக்குக்கூறியவளவில் யான் அமுதம் கொண்டுவருகிறேனென்று அவளால் தன் தந்தை

கந்தமாதனத்திலிருப்பதனையறிந்து அங்குச்சென்று தந்தையை வணங்கி நிகழ்ந்ததுகூற அவனும் மைந்த! அடியவருளத்திலிருக்கும் ஆதிமூலப்பிரானருளின்றி அமுதத்தை அடைவது அரியதாகும்; ஆதலின் அவனைநோக்கித் தவஞ்செய்து வரம் பெற்றால் நீ கருதியபடியே முடிக்கலாம். தவஞ்செய்வதற்காகிய இடம் சோழநாட்டிற்சிறந்த களப்பாளொன்றுமே தகுதியுளது; நீ அங்குச்சென்று தவஞ்செய்வாயாகவென்று மந்திரோபதேசஞ்செய்து விடைகொடுத்தனன். மைந்தனும் களப்பாள் நகரத்தையடைந்து எம்பிரான் சந்நிதியில் தடாகமொன்று அமைத்து அதன்கரைமீதிருந்து தவம்புரிந்தனன்.

தலைக்கீடின்றித் தானருள்புரியும் பெருமான் தேவவல்லித் தாயாருடன் மைந்தன்முன்னேதோன்றிக்காக்ஷிகொடுத்துவேண்டுவது கேளெனக் கருடன் துதித்து தன்னுள்ளக்கருத்தை நிகழ்த்தினவளவில் தேவர்களைவென்று அமுதங் கைக்கொள்ளுமாறுவரமளித்து இன்னும்வேண்டுவனவற்றைக் கேளென மைந்தன் நின் பால் என்றும் நீங்காத அன்பு வேண்டுமெனன அங்ஙனமே உதவிப்பின்பு நீ எனக்கு வாகனமுமாகி என்னைநீங்காதிருக்குக; மூன்றும் யுகத்தில் இவ்வூர் நின்பெயரால்விளங்குகவென வரமளித்து விமானத்தூடு மறைந்தருளினன்.

கருடன் உடனே தேவருலகுசென்று தன்வரவைத்தெரிவித்து அமுதங்கொடுப்பதற்கு இயையாத இந்திரனொடு பெரும்போர் விளைத்துத் தன் ஆற்றலினால் இந்திரனையும் அவன் சேனைகளையுந் தோற்பித்து அமுதக்குடத்தைக் கைக்கொண்டு மீண்டு வரும்பொழுது இந்திரன் பின்வந்திரப்பக் கருடன்கூர்ந்து மீட்டு அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்துக் கத்துரு முன்னர்க் குடத்தைவைத்துத் தாயடிமையைமாற்றி ஆங்கு அமுதக் குடத்தை வஞ்சனையால் கைக்கொண்டு மீண்டு வருபவன் இக்களப்பாளில் எம்பிரான் ஸந்நிதியில் தன்னாலாக்கிய தடாகத்தில் சிறிது அமுதத்தைப்பெய்து எஞ்சியதைக் குடத்தோடு தேவர் பாலளித்துத் தான் ஆணைக்காத்த ஆதிமூலப்பிரான் சந்நிதியில் எக்காலத்தும் வதிகின்றனன். சந்நிதித்தடாகத்திற்கு அமுது பெய்திருப்பதனால் அமுதவாவியென்றும் மனத்தாற்செய்ததனால்மானததீர்த்தமென்றும் கருடன்தவஞ்செய்ததனால் இறைவனுரைத்தபடி மூன்றும்யுகத்தில் இப்பதிக்குக் கருடபுரமென்றும்

பெயராயின. கருடன் அமுதத்தைக்கொண்டுவருங்காலத்தில்அக் குடந் ததும்பி அமுதம் சிதர்ந்து இந்தக்ஷேத்திரத்திற் பலபாக ங்களிலும் விழுந்து தேவதாருவிருக்ஷங்களாக முளைத்தோங்கி னமையால் தேவதாருவனமென்று சொல்லுவர். தேவதாரு வனமென ஒருகாற்சொன்னமையால் எத்தகைய தீங்குகளும் நீங்குமென்றால் அத்தலத்தின் பெருமை எம்மனோரால் சொல் லுவது அரிதேயாம்.

## ஐந்தாவது வசிட்டச்சருக்கம்.

பிரமபுத்திரரில் வசிட்டமுனிவர் வேதமுதலாகிய கலைகளெ ல்லாங் கற்றும் நன்ஞானமொன்றுமே யெய்தப்பெறுதவராகித் தன் தந்தையைப்பணிந்து ஞானமுண்டாகு நெறி கூறியருளெ னவேண்டப் பிரமதேவர் மைந்த! 'பூவுலகத்தில் மாயோன் வீற் றிருந்தருளுந் தலங்கள்தோறுஞ்சென்று பூசிப்பாயாக எத்தல த்திலேனும் நினக்கு அது கைகூடும்' என்று கூறக்கேட்டு அங் ஙனமே இந்தப்பூமியில் வந்து எம்பெருமான் தலங்கள் பலவற் றிலுஞ்சென்று பூசித்தும் ஞானமடையாராகிச் சோழநாடு புகு ந்து இக்களப்பாளென்னுந் திவ்யதேசத்தின் எல்லையில் வரும் பொழுது 'நீ இத்தலத்தில் வஸிப்பாயாக' என்று ஓர் சொல் அச ரீரி கூறக்கேட்டு மகிழ்ந்து இங்குப் புகுந்து அச்சுதமூர்த்தியை வலம்வந்து துதித்துக்கோயிலுக்குத் தென்பால் ஒரு பாணவீழ் ச்சியெல்லையில் ஒரு தடாகம் அமைத்து ஆங்குத் தவம் புரியுங் காலை அத்தவத்திற்கிரங்கிக் கருணைக்கொண்டலாகிய எம்பெ ருமான் 'காக்ஷிகொடுத்தருளி யாதுவேண்டினையென முனிவர் களிப்புற்றுப் போற்றி எந்தாய்! 'யான் நன்ஞானம்அடையவும் நான்ஞல் உண்டாக்கிய இத்தடாகத்தில் ஆடுபவர் எவற்றை விரு ம்பினும் அவற்றைப்பெறவும் வேண்டினேன்; கொடுத்தருளுக' என் ஆதிமுதல்வன் அங்ஙனமே கொடுத்தருளி இந்தப்பதி உன்பெயரால் ஒருயுகம் விளங்குகவென வுரைத்து நந்தியாவ ருத்தமானத்தையடைந்தனன். அந்த வசிட்ட தீர்த்தத்தைத் தரி சித்தாலும் அதில் ஸ்நானம்செய்தாலும் வேண்டுவன நல்கும்.

## ஆறுவது முனிதீர்த்தச் சருக்கம்.

முதன்மூர்த்தியாகிய கேசவப்பெருமானது விமானத்தின் மேல்பால் இரண்டு பாணவீழ்ச்சியெல்லையில் மார்க்கண்டேயர்

முதலாகிய பல ரிஷிகளும் ஒரு தடாகம் உண்டுபண்ணி அவர்கள் தவம்புரியக் கடவுள் அங்குத்தோன்றி அவர்களால் துதிக்கப்பெற்று வேண்டியவாறே அவர்களுக்கு முத்தி வழங்கி அத்தடாகத்தில் படிபவர்க்கும் வேண்டுவன கொடுப்பேனென்று உரைத்தருளினமையால் அத்தடாகம் முனிதீர்த்தமென்னும் பெயரோடு தன்னை அணுகுவார் விரும்பினவற்றை விரும்பியபடியே தருகின்ற தகுதிபெற்றுளது.

## ஏழாவது கஜேந்திரவரதச் சருக்கம்.

தேவர்கள் தலைவனாகிய இந்திரனென்பவன் ஒருகாலத்தில் பதினெண்கணங்களும் புடை சூழக் கற்பகவிருக்ஷ முதலாயின வெல்லாம் ஏவல்கேட்பத் தேவமாதர் நிரைபாடக் கன்னியர் கவரிவீச வெண்கொற்றக்குடை மேல்நிழற்றத் தேவஸபையில் வீற்றிருந்தபொழுது கந்தருவரில் ஆடல்பாடல்களில் வல்லவராகிய இருவர் தம் பரிவாரத்தோடு இந்திரன் முன்னிலையில் நடனமாடி மகிழ்வித்தனர். கண்டுகளித்த அவ்விந்திரன் கந்தருவரை நோக்கி 'நீங்கள் வேண்டுவன கொள்க' என அவர் சுதமகனைவணங்கி ஐய! யாங்கள் எங்கள் பரிவாரத்தோடும் பூலோகத்திற்சென்று இஷ்டப்படி பொழில்விளையாட்டு முதலாகிய அளவிலாக் காமவின்பமனுபவித்துவரக் கருதுகின்றோம்; அப்படியே விடைகொடுத்தருள்கவென அவனும் நீங்கள் புவியிலியங்கவேண்டினிராயின் அங்குச் சோழநாட்டில் திருமாலுக்கடிமைசெய்வோர் பற்பலர் வசிக்கின்றனர்; அவர்களுக்கு ஊறுபாடியற்றிக் கோபமூட்டாமல் பாதுகாப்போடு ஆண்டுள்ள இன்பங்களை யனுபவித்துவருவீராகவென்று விடுத்தனன்.

இந்திரனிடத்து விடைபெற்ற அக்கந்தருவர் தம் குழாங்களோடு பூமியில்வந்து பற்பலவிடங்களிலும் தாங்களின்பம் நுகர்தற்குரிய சோலை முதலாயினவற்றைக் காணாராய்ச் சோழநாடுபுகுந்து இக்களப்பாளினுள்ளதோர் சோலை மிக்க அழகாயிருந்தமைகண்டு அதனுட்புகுந்து மலர்களைக் கொய்துசூடிச் சோலைவிளையாட்டயர்ந்து மாலைக்காலத்தில் தாங்கள் வேண்டுமாறே நறவுண்டு காமவின்பத்திலாழ்ந்து மகிழ்ந்திருந்தனர். இப்படி நாள்தோறும் நிகழ்த்திக்களித்திருக்குங்காலத்தில் ஒருநாள் இச்சோலையின் வடபாலாக முகுந்தப்பிரான் திருக்கோயி

லுக்கு வடமேற்றிசையிலுள்ளதாகிய ஒரு பெரிய தடாகத்திலிறங்கி யாவரும் நீர்விளையாட்டயரும்பொழுது கோபத்திற்சிறந்தவரும் இந்திரன் வறுமையுறும்படி சபித்தவரும் அத்திரி மகரிஷியின் புதல்வருமாகிய துருவாஸமுனிவர் பற்பல மாணாக்கர்சூழ உச்சிப்பொழுதில் ஸ்நானஞ்செய்யவேண்டி இந்தத்தடாகக்கரைவந்து இதில் கந்தருவர் நீராடுவது கண்டு மாணாக்கர் முகமாக அவர்களை அங்கு நின்று அகலும்வண்ணம் பலவாறு கூறியும் அவர்கள் நீங்காமையைக்கண்டு கடுஞ்சினங்கொண்டு கந்தருவத்தலைவரை நோக்கி நீங்கள் இருபகுதியீரும் யானையும் முதலையுமாகக்கடவீரென்று சபித்தனர்.

முனிவர் சாபஞ்செய்ததைக்கண்ட அத் தலைவரிருவரும் அஞ்சியோடிவந்து முனிவர்பாதங்களில்விழுந்துபுலம்பி அறியாமையாற்செய்த பிழையைப்பொறுத்தருளவேண்டுமென்றிரப்ப அதனைக்கண்ட துருவாஸமுனிவர் இரக்கமுற்றுச்சாபத்தால் உங்கள் பரிவாரத்துடனும் அங்ஙனமாகிய நீங்களிருவீரும் ஒருவரோடொருவர் ஆயிரம் வருஷம் போர்புரிந்து இறுதியில் பூர்வஞானத்தோடு மகாவிஷ்ணுவினால் முத்திபெறுவீரென்று சாபவிமோசனங்கூறிவிட்டு மாணாக்கர்கூட்டத்தோடு நீராடித் தம் பன்னசாலை சென்றருளினார்.

இப்பால் கந்தருவரிருவரும் தங்கள் பரிவாரங்களோடு ஒரு பகுதியார் யானைகளாகியும் ஒரு பகுதியார் முதலைகளாகியும் யானைகள் சோலைகளிலும் காடுகளிலும் முதலைகள் அந்தத்தடாகத்திலும் சஞ்சரிக்கையில் அவ்யானைகளுக்குத் தலைவனாகிய களிறு பழைய அறிவுடையதாகி நாள்தோறும் அத்தடாகத்தில் மலருகின்ற தாமரைமலர்களைக்கொய்து வைகுந்தநாதனது திருவடிகளுக்கு மானஸீகமாய் அர்ப்பணஞ் செய்துகொண்டிருந்தது. இங்ஙனம் தினமும் பொய்கையிலிறங்கி மலர்பறிப்பது காரணமாக அதனைக் கலக்குவது பொறாத முதலைகளுக்குத்தலைமைபெற்ற முதலையானது ஒருநாள் யானை வந்திறங்கலும் அதன் கால்களில் ஒன்றினைப்பற்றித் தண்ணீரிலிழுப்ப யானை கரையிலிழுப்ப இரண்டற்கும் பெரும்போர் விளைந்தவிடத்துக் கரையிலிருந்த யானைகளெல்லாம் தங்கள் துதிக்கைகளை நீட்டிக் களிற்றியானையைப்பற்றிக் கரையிலிழுத்தும் முதலையின் ஆற்றலுக்குத்

தோற்று விலகிச்சென்றன. இவ்வண்ணம் முதலையாற்பிடிக்கப்பட்ட யானை ஆயிரவருஷம் வரையில் அதனோடு போர்புரிந்து சோர்ந்து இனி மீள்வதரிதென்று தன் துதிக்கையை மேலேதூக்கி 'எல்லாவுயிரையுங்காக்கும் ஆதிமூலமே! என்னைக்காத்தருள்வாயாக' என்று பெரும்பூசலிட்டழைப்ப அப்பேரொலிசென்று பாற்கடற்கண் ஆதிசேஷசயனத்தில் யோகநித்திரையிலமர்ந்தருளிய இறைவனது திருச்செவியிற் சாற்றியவளவில் ஒருநொடிப்பொழுதினுக்குள் கவலையோடு விரைந்தெழுந்து சக்கராயுதத்தினைத்திருக்கரத்தேந்திப்பறவைகளுக்கரசனாகிய கருடன்மீதெழுந்தருளிச் 'சோழநாட்டைவிரைவினடைக' என்றுகூற அவனு முழுவதுமோர்ந்து பிரமா தேவேந்திரன் முதலாகிய தேவரெல்லாருந்தொடர்ந்துவர நாகரஞ்சியொளிப்பஇமைக்குமளவிற்குள்ளாகச்சோழநாட்டினுள்ள களப்பாளையடையும்பொழுதே யானை மீட்டுந்தன்னைக்குறித்துக்கதறுகின்றபேரொலி செவியிலெய்தப் பொறுணுகிக் கையிலிருந்த சக்கராயுதத்தை விரைவில்வீசி நீ 'அவ் யானையைப்பற்றி வருத்துகின்ற முதலையைக்கொல்லுவாயாக' என்றுகூறித்தேவர்களொடு தானும் அந்தத்தடாகக்கரையில் வந்தருளினன்.

இறைவனால் விடுக்கப்பட்ட சுதரிசனப்படையானது அத்தடாகத்துட்புகுந்து முதலையினுடலைப்பிளந்து அதனுயிரைப்போக்கிவிட்டுத் தேவர்கள் பூமாரிபொழிய நம்பெருமான் திருவடியை வலம்வந்து வணங்கித் திருக்கரத்தில் வீற்றிருந்தது. முதலைவாயில்நின்றும் விடுபட்ட யானையானது இருவினைப்பற்றுநீத்தயோகியரைப்போலாகித்தனக்கு நேர்ந்ததுன்பத்தை நீக்கபெற்றுஅங்குநின்றுகரையிலெய்திஅச்சுதப்பெருமானைப்பலமுறைவலஞ்செய்து பணிந்து துதித்தலும் கருணாகரமூர்த்தியாகிய எம்பெருமான் தன் கரத்தினால் யானையின் மெய்யைத்தடவி அதன் சிரத்தில் கரம்வைத்து நீ முதலையால் மிக்கமெலிவுற்றனை போலாம் ஊழ்வினையை வெல்வதரிதேயன்றோ? இந்திரன்ஸபையிலுள்ள கந்தருவரிலொருவனாகிய நீ துருவாசமுனிசாபத்தா லிங்ஙனமாயினை; யாம் முத்தொழில்நடத்து மூன்று வடிவினையுடையேமாகிப்பகைவரையெல்லாம் நாசஞ்செய்துளேமாயினும் மறையவரையெதிர்க்கும்வலிமை பெற்றிலேம்; அந்தணர்கள் பிரமத்தின் முகமாகிவி

ளங்குபவராதலின் அவர்களை எதிர்ப்பவர் யாருமிலர். தெய்வத்தை
நிலைநிறுத்து மந்திரங்களெல்லாம் அந்தணர்கையகத்தவாதலின்
அவர்கள் தெய்வத்தினுமேலாவார்கள். தெய்வங்களையிகழ்ந்து
பின்பு புகழ்ந்தாலும் அவை பொறுத்துவிடும்; அந்தணரையிகழ்ந்
தார்க்கு நரகன்றி வேறிடனில்லை. சூரியன், சந்திரன், அக்கினி,
காற்று, அந்தணர் இவர்களெல்லாரும் உலகத்தைக்காக்குமுரி
மையுடையராவார். சூரியனுடைய தேரில் வாலகில்லியரிருந்து
உலகத்தைக் காப்பதனை நீயறிந்திலாயோ? அந்தணர் தங் குலச்
செயல்விட்டாலும் அவரை நிந்திக்கலாகாது; அத்தகையாரிடத்
தும் அன்புடையவரே மேலாகிய இன்பவீட்டிலிருப்பதற்குரிய
ராவர். மிருகண்டுமகரிஷியென்பவர் ஒருநாள் பிராமணதெரி
சனைபெறுராய் ஒரு அந்தணனுக்குப்பிறந்த அனுலோமபுத்திரனை
நோக்கி (ப்ரஹ்மபீஜாயதே நம:) பிரமபீஜாயதேநம: என்று
வணங்கிப்பெற்றபேறு என்னாற் சொல்லுந்தன்மையதன்று. நஞ்
சையுண்டால் உண்டவரேசாவார்; அந்தணர்பொருளைக் கவர்ந்
தோர் தம்சுற்றத்தோடுமழிவர். நகுஷன் அந்தணனது சாபத்தால்
பாம்பாகிய கதையை நீ கேட்டதில்லையோ? இந்திரன்உங்களுக்கு
விடைகொடுக்கும்பொழுதே அந்தணர்களுக்கு ஊறுஇழைக்க
வேண்டாம் என்றதனைக்காமமயக்கத்தால்மறந்தீர்கள்; அக்காமத்
தாலுய்ந்தவர்யாருமில்லை யென்று இப்படிப்பட்ட நன்னெறிகளை
ச்சொல்லி 'நினக்குவேண்டுவனவற்றைக்கேள்' என யானை இறை
வனை வணங்கி ஐய! 'என் குலத்தோடும் பண்டைவடிவுற்று முன்
னிருந்தவிடம் போயிருக்கவும் நின்னடிக்கன்பு நீங்காதிருக்கவும்
எனக்குக்கருணைசெய்தமையாலெய்திய கஜேந்திரவரதர்என்னும்
இப்பெயரை நீ எக்காலத்தும் பெறவும் அந்தப்பெயரை இப்பதி
பெறவும்வேண்டும்; என்னாற்கூறிய துதிகளைச்சொன்னவர்க்கும்
சொன்னவற்றைக் கேட்டவர்க்கும் நன்மையளிக்கவேண்டும்;
இவற்றையீந்தருள்செய்வாயாக' என இறைவன் அப்படியே
கொடுப்பேனென்று எல்லாவரங்களையுங்கொடுத்து இக்களப்பா
ளுக்கு நீ சொல்லிய பெயர் நாலாவதாகிய கலியுகத்திலெய்துக
வெனக்கூறினன்.

அங்ஙனங்கூறுமுன்னமே யானைவடிவமும் முதலைவடிவமும்
பெற்ற அவ்விருபகுதியாரும் முனிவராற்சொல்லிய சாபம்நீங்கப்

பெற்று அங்கு முன்போல நட்புடையோராகி எம்பெருமானை யும் தேவவல்லியன்னையாரையும் வலம்வந்து வணங்கி அருள் பெற்று அயலில் நின்ற பிரமா, இந்திரன், திக்குப்பாலகர் முதலா யினோரையும் வணங்கித் தேவர்கள் பூமழைபொழியத் தம்முலக த்தையடைந்தனர். ஏனையோரும் இறைவனைத்துதித்து தத்த மிடமேகினர். அங்கு இந்திரன் ஆதிமூர்த்தியை வணங்கி இத்த லத்தில் யான் அச்சுவமேதயாகமியற்றக் கருதுகிறேன் அருள் செய்யவேண்டுமென்று கேட்டு அவ்வண்ணமேயருளப் பெற்றுத் தன்னுலகமெய்தினன். அழியாமுதல்வன் நந்தியாவருத்தவியா னத்தையடைந்தருளினன்.

## எட்டாவது தாலத்துவசச் சருக்கம்

முன்னம் இங்ஙனம் நிகழ்ந்தது; அவ்யானையாற் சொல்லிய துதியைச்சொல்லிப் பேறுபெற்றோர் அளவிலராவரென்று புகலச் சௌனகன் முதலாகிய முனிவரர் அவற்றில் ஒருகதையா யினும் சொல்லவேண்டுமென்று கேட்பச் சூதமுனிவர்சொல்ல லுற்றனர்.

கடல்சூழ்ந்த இவ்வுலகில் அறிவுடையோர் பலராலும்புகழ ப்படுகின்ற கலிங்கதேசத்துத்தலைநகராகிய கலிங்கமென்னும் பட்டினத்தில் அந்நகர்செய்த நற்றவமே வடிவெடுத்தாற்போ ன்று அவதரித்துக் கொடியோர்களையழித்துப் பூமிபாரந்தீர்த் துச் செல்வத்தைப்பெருக்கிப் போகங்களையனுபவித்து ஈகை, பொறை இவற்றால் உலகத்தில்இவனுக்குயாரும் நிகரிலரென்று யாவராலும்புகழப்படுபவனாகிய தாலத்துவசனென்னும் வேந் தன் பகைவரையடக்கி இவ்வுலகத்தைப் பாதுகாத்து வருங் காலத்தில் ஒருபொழுது காட்டிலிருப்பனவாகிய விலங்குகள் கூடி நாட்டிற்புகுந்து ஆங்காங்குள்ள விளைபொருள்களை அழிக்க லுற்றனவென்று அந்நாட்டுக்குடிகள் அரசன்முன்னிலையில்வந்து முறையிட்டார்கள். அவற்றைக்கேட்ட மன்னன் அமைச்சர் களோடு யோசித்துவேட்டையாடி அவ்விலங்குகளை அழிப்பதே நன்றென்று சேனைகளோடெழுந்து காட்டிற்சென்று விலங்கின ங்களை ஆங்காங்குவதைத்துவருநெறியில் ஒருகலைமான் அரசன் கைக்கு அகப்படாமல் அஞ்சித்தன்பிணைமானோடு விரைந்தோட லும் வேந்தன் அவற்றைக் கொல்லக்கருதித் தன்னந்தனியனாகி

அடுகணையொருவில்லேந்தித் தான் ஏறியிருக்கும்பரியைக் கது மெனச்செலுத்திப் பின்தொடர்ந்து சென்றனன். அவைஅக் காட்டிலிருந்து ஐந்துகாதவழிக்கப்பாலுள்ள துரோணமலைச் சாரலையடையும்பொழுது அரசன் அவற்றை அம்பினுலெய்து வீழ்த்தியபின் தான் அக்கானகங்கடந்து பசியால்வருந்தி அங் குள்ள ஓர் மறையோன் வீட்டினை எதிர்கண்டு அதனையடைந்து அந்தவீட்டிலிருந்த அந்தணனைநோக்கி ஐயா! "யான் கலிங்க நகரத்தரசன் வேட்டைமேலிட்டுவந்து தனித்துப்பசியால் வருந் துகின்றேன்; என்பசியைப்போக்கி என்னுயிரைக் காத்தருள வேண்டும்". என்றுபணிவோடுரைப்ப அந்தக்கொடிய வேதிய னுகிய அக்கினிவருணனென்பவன் அரசனைநோக்கி நீ "அரசனே யாயினும் ஆகுக தேவராயினும் தேவரில்மூவராயினும் ஆகுக தாகத்திற்குத் தண்ணீரளவேனுங்கொடேன். இன்றைத்தினம் என்தந்தைக்குத் திவசநாளாதலின் பிராமணர்கள் உண்டபிறகு மாலைப்பொழுதில் யாதாயினும் உனக்குக்கொடுக்க வியலும் இடையில் நீ இங்கு நில்லாதொழிக" என்று கடிந்து கூறினன். அரசன் பசி பொறுனுகிப்பலவாறுசொல்லிப் பணிந்திரப்பவும் அந்தணன் அதற்கிரங்கானுக வேந்தன் வெகுண்டு பார்ப்பானது இல்லத்தினுட்புகுந்து அங்கு எதிரில்திவசத்திற்குரிய வாழைப் பழங்கள் வைத்திருந்தனவாக அவற்றையெடுத்துத்தன் பசியார வுண்ணலும் அந்தணன் முனிந்து 'நீ பேயாகுக' என்றுசபித்துச் சமைத்தவற்றையெடுத்தெறிந்துவிட்டு வீட்டினைப் பரிசுத்தப் படுத்திமறுபடியும் சமைத்து அந்தணர்க்கு ஊட்டித் திவசத்தை நிறைவேற்றினன்.

இப்பால் வேந்தன் தன் பரியைச்செலுத்திச் சேனையைய டைந்து அமைச்சரிடத்தில் நிகழ்ந்தவற்றைச் சொல்லும் பொழு தேபெரியபேய்வடிவம்பெற்று அங்குள்ளவரில்சிலரைக்கொன்று தின்று எங்குங் காற்றுப்போலலைந்து திரிந்து இவ்வாருக ஆயி ரம் வருஷம் சென்றபின் முன்னையநல்வினையால் இக் களப்பாளை யடைந்து ஒருமரத்தில் தங்கியிருக்குநாளில் ஒருநாள் உத்தம மறையோனொருவன் நந்தியாவருத்தவிமானத்தையடைந்து முற் காலத்தில் யானையால் துதித்த பாடலைப்பாடித் திருமறுமார்பனை த்துதித்துக்கொண்டிருக்கும்பொழுது அப்பாடல் இப்பேயின்

செவியிற் சென்றவுடன் பேய்வடிவையொழித்துத் தெய்வவடிவைப்பெற்று அளவில்லாதமகிழ்ச்சியடைந்து நம்பெருமாளுக்கு அங்கரங்கவைபோகங்களுக்காக ஐந்துகிராமங்கள்வாங்கித்தானம்பண்ணி எம்பிரானைத் துதிக்குமளவிலே வைகுந்தத்திலிருந்து தெய்வவிமானம் வரப்பெற்று அதனில் ஆரோகணித்துப் பரமபதமடைந்து ஸாரூபம்பெற்று அங்குவாழ்ந்திருக்கின்றனன்.

## ஒன்பதாவது இந்திரயாகச் சருக்கம்.

அனந்தசயனனாகிய இறைவன்அருளிச்செய்தபடி இந்திரன்தான் இத்தலத்தில் அச்சுவமேதயாகமியற்றக் கருதியதைத் தன் குருவினிடத்திற்சொல்ல அதனைக்கேட்ட ஆசிரியரும் இது மிக நல்லதொருகாரியமென்றுகூறினர். குருவின்அனுமதிப்படி தேவர்களையழைத்து 'களப்பாள்' என்னுந்திருப்பதியில் யாகஞ்செய்வதற்குரிய உபகரணங்களைச் சேகரிக்கும்வண்ணங்கூற அவர்களும் இப்பதியில் திருக்கோயிலின்வடதிசையில் யாகம்புரிவதற்குத்தகுதியான இடமொன்றினையமைத்து ஒருயோசனை அகலநீளமுள்ளபந்தரிட்டு யாகசாலையும்அட்டிற்சாலையும்பற்பல பண்டங்களை நிரப்பிவைக்கும்பண்டசாலைகளு மமைத்து அந்தப் பண்டசாலைகளில் வேண்டியபொருள்களையுஞ்சேகரித்து வைத்தனர். வேள்வியைக்காணும்பொருட்டுப் பலவிடங்களிலுமுள்ள வேதியர்களும் முனிவர்களும் விஞ்சையர்களும் தேவர்களும் சித்தர்களும் ஏனையோர்களும் இக்களப்பாளில்வந்துநிறைவுற்றார்கள். தேவர்களுக்குத்தலைவனாகிய இந்திரனும் முதற்கடவுளாகிய கேசவப்பிரானது திருநாமங்களைச் சிந்தித்துக்கொண்டு பொன்னுலகில் நின்றெழுந்து குருவாகியபிரகஸ்பதியோடுதேவர்கள்சூழ்ந்துவர இப்பதியைவலமாகவந்தடைந்து நந்தியாவிருத்தவிமானத்தில் எம்பெருமானைப்பணிந்து அநுஞைப்பெற்றுச் சந்நிதியிலுள்ள முடிவழங்குசோழசதுர்வேதிமங்கலத்திலிருக்கும் பிராமணோத்தமர்களை யாகத்திற்குஅழைத்துவருமாறுஎண்ணி அதனைச்சார்தலும் அங்குள்ளஅந்தணர்கள் பூரணகும்பங்களைக்கைக்கொண்டு எதிர்சென்று வரவேற்று ஆசிகூறச் சதமகன் அவர்களைத்துதித்து "யான்செய்யும்வேள்வியை நீங்களெல்லீரும்வந்து நிறைவேற்றுவிக்கவேண்டுகிறேன்" என்றுசொல்லி யாவரும் மகிழ்ந்துஅங்கீகரித்து அவ்வண்ணம் உடன்வரத்

தான் யாகசாலையையடைந்தனன். அடைந்து அங்குள்ளதேவர்களால் வந்த அந்தணர்களுக்குத் தக்க ஆசனங்களுதவி அவர்களை அவற்றிலிருத்தி உபசரித்தபின்பு குருவாகியபிரகஸ்பதி 'தேவர்களெல்லாருந்தூயராகவேண்டும்' என இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் அங்ஙனமேஸ்நாநஞ்செய்து நித்தியகருமாநுஷ்டானங்களைமுடித்து ஸமாச்ரியணம்பண்ணிக்கொண்டு இருதோள்களிலும் சங்குசக்கரக்குறிகள் பொறிக்கப்பெற்றுப் பன்னிரண்டுபுண்டரங்களையும் மெய்யிலணிந்து விளங்கினார்கள்.

ஆசிரியரும் வேள்வியைத்தொடங்குமுன் இவ்வூரிலுள்ள மறையவர்கள் என்னிலும் பலமடங்கு வேதசாஸ்திர ஆராய்ச்சியுடையவர்களாகி உலகமெங்கும் கீர்த்திபெற்றிருக்கிறார்கள்; இவர்கள்முன்னிலையில் நாம் யாகஞ்செய்ய எத்தனிக்கிறோம்; இடையில்யாதேனும் தவறுநேராமல் ஒழுங்குபெறமுடியவேண்டுமேயென்னுங்கவலையையுடையவராய்க் கஜேந்திரவரதரைச்சிந்தித்து இந்திரனொடு ஆராய்ந்து ஒருவாறுதேறி இந்திரன் கருத்தாவாகவும் தான் அத்துவரியூவாகவும் இப்பதியிலுள்ள அந்தணர்கள் பிரமா, உத்காதா, ரித்துவிக்குக்கள் முதலாகிய யாகத்திற்குரிய பற்பலஅங்கத்தினராகவும் நியமித்துக்கொண்டு எவ்விடத்திலாயினும் எனக்குச்சமுசயம்நேருமெனில் இம்மறையோர்கள் திருத்தி ஒழுங்குபெற இவ்வேள்வியை முடிப்பார்களாதலால் இனிக்கவற்சியில்லையெனக் களிப்புற்றுத் தன்னுடைய பயிற்சியின் மிகுதியாலும் முடிவழங்குசோழசதுர்வேதிமங்கல மறையோர்களினுடைய சொல்லின்வழியாலும் யாகத்தைச் செய்யத்தொடங்கினார்.

அப்படித்தொடங்கியயாகத்தின் கருத்தாவாகிய இந்திரன் வேள்வியின்முற்பகுதியைமுடித்துப் பூமியைவலஞ்செய்துவரும்படி யாகக்குதிரையைவிடுத்து அதுவலஞ்செய்துவந்தபின்யாகத்தைநிறைவேற்றி எக்ஞமுதல்வனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்கு அர்ப்பணம்பண்ணி அவ்வந்தணர்களாற்செய்யப்படும் ஆசீர்வாதங்களைப்பெற்று அவர்களுக்கு யாகதக்ஷிணையாக அளவில்லாத நிதிகளைக்கொடுத்து அவ்விடத்தில் தன்பெயரால் ஒருதடாகமுண்டாக்கி அதில் எல்லாரோடும் அவபிருதஸ்நானம்பண்ணிப் புனிதனாகித் திருக்கோயிலையடைந்து விதிப்படி அவ்யாஜகருணா

மூர்த்தியாகிய அரிந்தமனைப்பூசித்து வணங்கித் துதிப்பப் பரந்தாமன் கருடன்மீதெழுந்தருளிக் காட்சிகொடுத்து 'வேண்டுவன வற்றைக்கேள்' என இந்திரன் வணங்கிப் புகழ்ந்து 'என்மனத்தெழுந்தபுன்மைகளைப் போக்கியருளுவதோடு என்னுலமைக்கப்பெற்றதடாகத்தில் ஸ்நாநம்புரிந்தவர்களுடைய குறைகளையுந் தவிர்த்து நினைத்தவெல்லாங் கொடுத்தருளவேண்டும்' என அங்ஙனமே எம்பிரான் வரமுதவப்பெற்று இந்திரன் தன்பரிவாரத்தோடு வணங்கிப் பொன்னுலகமெய்தினன்; ஏனையோரும் தத்தமிடஞ்சென்றனர்.

## பத்தாவது தீர்த்தமான்மியச் சருக்கம்.

இந்தத்தலத்தில் ஐந்துதீர்த்தங்களுள்ளன;— அவற்றுள் [க.—அமுததீர்த்தம்.] இது எம்பெருமானது சந்நிதியிலுள்ளது; கார்த்திகைமீ செவ்வாய்க்கிழமை சூரியோதயத்தின் முன்பே தந்தசுத்தி முதலாகியவற்றைச்செய்துகொண்டு இந்தத்தடாகத்தில்அறுகும்கோமயமுமிட்டு ஸ்நாநஞ்செய்து அந்தணர்க்குப் பூமிதானமும் அன்னதானமும் தம்மாலியன்றஅளவு சுவர்னதானமும்செய்க; அப்படிச்செய்தோரும் அந்தணர்க்கு வீடுகள்கட்டித் தானஞ்செய்வோருமிருப்பதற்கன்றோ வைகுந்தமென்னும் மோக்ஷவீடு கடவுளாலமைக்கப்பட்டுள்ளது. இத்தடாகக்கரையில் தம் ஸந்ததியாரால் சரமகிரியை செய்யப்பெற்றபிதிரா பிரமலோகத்தில் பற்பலகற்பகாலம்வரையில்வஸிப்பார் இங்குச் செய்யும் பிதிர்சிராத்தம் கயாசிராத்தத்திலும்மேலானது.

[உ.—வசிட்டதீர்த்தம்] திருக்கோயிலுக்குத் தென்றிசையிலுள்ள இவ்வசிட்டதீர்த்தத்தில் மார்கழிமீ பூர்வபக்ஷம் ஏகாதசியில் நீராடிப் பிராமணர்களுக்குச் சுவர்ணதானஞ்செய்வோர் இருமையின்பமும் எளிதிற்பெறுவார். வேதநிந்தகரும் பிராமணநிந்தகரும் வேதபாகியரும் அந்தணரைவணங்காதவரும் இத்தடாகத்தில்ஸ்நாநஞ்செய்து பிராமணரைவணங்கினல் புனிதராவார். புத்திரரைப்பெறவிரும்பினவர் ஒருவருஷம் வரையில் ஒவ்வொருஏகாதசியிலும் தம்தம் மனைவியரோடுஇதில்ஸ்நாநம்பண்ணி எம்பெருமானைப்பூசித்துப் பாயஸான்னநிவேதனஞ்செய்து பிராமணர்களுக்குத் தானம்புரிந்தால் தாம்தாம் விரும்பியபடியேபெறுவார். இதன்கரையில் தவஞ்செய்வோரும் காய

திரிஜபஞ்செய்வோரும் உபநயனம்செய்வோரும் அன்னதானஞ் செய்வோரும் கல்விபயிற்றுவோரும் அடையும்பயனுக்கு அளவில்லை.

[ந.—முனிதீர்த்தம்] நந்தியாவருத்தவிமானத்தின்மேல்பாலாக அமைந்துள்ள முனிதீர்த்தத்தில் அமாவாஸை, பௌரணமி, கிரகணகாலங்கள், வ்யதீபாதம், அருத்தோதயம், மகோதயம், அவ்வப்பிதிர்தினங்கள் ஆகிய இந்தநாட்களில் மந்திரவிதிப்படி நீராடித் தருப்பணமுடித்து க்ஷேத்திரபிண்டங்களிட்டு இரணிய சிராத்தஞ்செய்வோருடையபிதிரர்கள் முத்தியையடைந்து எம்பிரானருள்பெற்றிருப்பார். இத்தடாகத்தில் ஸ்நாநஞ்செய்வோர் எல்லாப்பாவங்களும் நீங்கப்பெற்று வேண்டியநன்மையெல்லாம் எய்துவார். எந்த ஞாயிற்றுக்கிழமையிலாயினும் இதில்முழுகி மறையவர்க்கு அணுவளவேனும் சுவர்ணதானம்புரிவோர் திருவரங்கத்துப்பேரருளாளன் முன்னிலையில்மேருமலையைத்தானஞ் செய்த பயனைப்பெறுவார்.

[ச.-இந்திரதீர்த்தம்] இது எம்மான் கோயிலுக்கு வடபால் மூன்றுபாணவீழ்ச்சியிலுள்ளது; ஆனிமீ சுக்கிலபக்ஷம்பௌரணமியில் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுபவர் இந்திரலோகத்தில் வீற்றிருப்பார். குருவதை, மாதரைக்கொல்லுகை, பிரம்மநிந்தை, குலமாதர்கற்பைக்கெடுத்தல், பதிதர்வீட்டிலுண்ணுகை, திருமாலடியவரை இகழ்தல், வைஷ்ணவசமயமன்றி வேறு சமயங்களை அடைவதற்கு நினைத்தல், வைதிகநெறியைக்கடத்தல் இத்தன்மையான பாவங்களெல்லாம் இந்திரதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தால் நீங்கும்; இதனில்நீராடிப் பிராமணர்களுக்கு வஸ்திரதானம், தீர்த்ததானம்பண்ணுவது மிக்கவிசேஷமாகும்.

[ரு.—கஜேந்திரமோக்ஷதீர்த்தம்] இது கரிவரதப்பிரான் திருக்கோயிலுக்கு வடமேற்றிசையில் ஐந்து பாணவீழ்ச்சியிலுள்ளது; இதனில் எந்தநாளும் நீராடலாகும்; இதில் ஸநாநம்பண்ணுபவர்க்கு யமதண்டனையில்லை; பகைவரால் அச்சமில்லை; அங்ஙனம் நீராடுபவரால் விரும்பப்பட்டு அடையாதனவில்லை.

[திருவாராதனம்] யானைகாத்தபெருமானைப் புருஷசூக்தத்தால் பூசித்துத் துளசி,சண்பகப்பூ இவற்றாலலங்கரித்து வழிபடுவோர்எல்லாப்பேறும்பெறுவார். சந்நிதியில் அமைக்கப்பெற்

றிருக்கிற யானையினதுபிம்பத்தைப் பூசிப்பவரும் அப்படியாகிய நன்மைகளைப் பெறுவார்.

[துர்க்கையம்மை] தன்னைக் கருதித் துதிப்பவருக்கு வேண்டும்பயனைக் கொடுக்குநிமித்தமாக முழுமுதற்கடவுளாகிய கரிவரதப்பெருமானருளால் இத்தலத்தில் துர்க்கையம்மை கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றமையால் அவருக்குப் பூசைசெய்விப்பவரும் வாகனங்களமைத்துத் திருவிழாநடத்துபவரும் மானியங்களும் திருவாபரணங்களுமளிப்பவரும் அவரைக்குறித்து விரதமிருப்பவரும் அவராலயத்தைப் புதுக்குபவரும் தாம் இச்சித்த எல்லாப்பயன்களையும்அடைவார்.

[தேவதாருவனத்தலபுராணம்] முற்கூறியபடி தேவதாருவிருக்ஷங்கள் மிகுதியாய் அடர்ந்திருந்தமைபற்றி இத்தலத்தை யாவரும்தேவதாருவனமென்பர். [இக்காரணம்பற்றித்தமிழிலும் தேவதாருவனத்தலபுராணம் என்று பதிப்பிக்கலாயிற்று.]

இவற்றை யான் 'அறிந்தவாறுகூறினேன்' என்றுசூதமுனிவர்சொல்லச் சௌனகாதிமுனிவர்கள்கேட்டு மகிழ்ந்து விடைபெற்று ஆகாசமார்க்கமாகக் களப்பாளையடைந்து தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்து எம்பெருமானைப் பூசித்து வைகுந்தமெய்தி இறைவனதருளைப்பெற்று அங்கு வஸிக்கலுற்றனர்.

ஸ்ரீ

ஹரி: ஓம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# கள ப் பாள்

என்று வழங்குகிற

# தேவதாருவனத்தலபுராணம்.

## முதலாவது பாயிரச்சருக்கம்.

காப்பு.

நம்மாழ்வார்.

பூமேவு குருகைநகர்ப் புளிப்பாலுற் றருந்தமிழ்ப்பாத்
தேமேவு சுவையொழுகித் தித்திப்ப வுவரிநிலன்
மாமேவு மகிழ்துவர மருள்கைப்பக் கார்ப்புயனோர்
கோமேவு பதம்புனைந்த குழகனிரு பதம்பணிவாம்.

பரத்வம்.

உலகியலீ தெனவுயிர்க ளுயக்கொள்வா னெளியிமையா
ரிலகயல்சூழ்ந் தினிதிருப்ப வெழின்மணிமண் டபநாப்பண்
விலகிலிமை யவர்துதிப்ப மினிரணைமேற் பரமபதத்
தலகிலரு ளொடுமிருக்கு மமலனடித் துணைபணிவாம். உ

வியூகம்.

தொழிலனைத்து நடைபெறுமா றுயக்கிலன்சங் கருடணனு
மெழிலமையு மனிருத்தப் பிரத்தியும்ன ரிருவர்களும்
வழிமொழிகேட் பனரயரப் பரவாசு தேவனென
வொழிவில்கடற் கிடந்தபிரா னொளிமலர்த்தாள் வணங்குவமால்.

விபவம்.

மறைநெறியி னியங்கினரை மறுத்தொழுகி யியங்கினரை
முறைதிறுவி யுடன்றொறுத்து மூதறமல் கிடவமைப்ப
வறைபுனல்வாய் மயிலேமுத லாயபல வடிவெடுத்த
விறைவனதாள் வணங்காரே யிமையின்பத் திணங்காரே.

### அந்தரியாமி.

பொலம்படுமொண் சுடரென்னப் பூவினறு மணமென்ன
நிலம்படுமெள் ளிடையிருக்கு நெய்யென்னப் பலபலவாந்
தலம்படுபல் லுயிர்தோறுந் தமியியங்கு மொருகரியாய்
வலம்படநின் றவன்மலர்த்தாள் வைகலும்போற் றுவமன்றே. ௫

### அருச்சை.

பண்டமர ரிறைஞ்சியரும் பயனளைத்துந் தாமொருங்கே
கொண்டபடி யாலயினுங் குலவுயிர்கள் கொளவுய்ப்பா
னண்டர்பிரா னுலகனைத்து மமையுமருச் சையின்படிவப்
புண்டரிக மலர்த்தாளைப் போற்றியிறைஞ் சுதுநாளும். ௬

### கஜேந்திரவரதர்.

தெருளார் தெருள்வா ரெனுமின்னவர் சிந்தை யுள்ளே
யிருளாகி ஞான வொளியாய்க்குண மெட்டு மெய்தி
யருளாகி மூன்று பொழுதுங் கவிர்ந் தாதி மூலப்
பொருளா யழைத்த கரிகாத்தவற் போற்றி வாழ்வாம். ௭

### தேவவல்லிப் பிராட்டியார்

ஒருசா ருயிரொப்ப நினைத்திட மற்றை யோர்சா
ரருகா துலகந் தருமன்னையென் றோத வன்ன
விருசார் பினர்க்கு மருடந்தய லேயு மின்னைப்
பொருதேவ வல்லி யிருதாண்மலர் போற்று கிற்பாம். ௮

### பொய்கையாழ்வார்.

பொற்று மரையிற் றடம்பொய்கை யுயிர்ப்ப வந்தெஞ்
சிற்று யனைக்கங் குலிற்செங்கதிர்க் கைவி ளக்கத்
துற்றுய வந்தா தியிற்சீர்த்தி யொருங்கு சொற்று
னற்று மரைத்தா ணமக்கோர்துணை யாக நாளும். ௯

### பூதத்தாழ்வார்.

கூனந்து செய்யார் திருக்கோவ லிடைக ழிக்கண்
ஞானந் திகழும் விளக்காக நளிந்த நம்பி
தானந்த மில்லான் றனைநோக்கித் தமிழ்வ ளர்த்த
கோனங்கள் பூதன் மலர்ப்பாதங் குறித்து வாழ்வாம். ௰

### பேயாழ்வார்.

வானே வளியே முதலாயினன் மாட்சி யோர்ந்து
தானே மழிசைப் பதியானைத் தருக்கொ ரீஇத்தன்

கோனேர் கெழுதா ளிணைக்கூட்டிய கோதில் பேயன்
றேனே கமழு மடித்தாமரை சென்னி சேர்ப்பாம். கக

## திருமழிசையாழ்வார்.

பலசமயங் தொறும்இருந்தும் பயனறியா ரறிந்துய்யும் படியே சான்று, வலகில்சம யங்கடொறும் புகுந்தாய்ந்து பேயர்மொழிக் கடங்கி யண்ண, ணிலவுவயி ணைவக்லேப்ப நிறுத்தியருந் தமிழ்ப்பாவா ணிமலற் போற்றிக், குலவுதிரு மழிசையர்கோன் குளிர்மலர்த்தாள் வைகறுலுங் குறித்து வாழ்வாம். கஉ

## நம்மாழ்வார்.

ஒருபிறவி நோய்வாயுற் றுயங்குமுயிர்க் கிரங்கிமறை யுள்ளவெல்லா, மருமைபெறத் திரட்டியவ்ப் பாசுரமாத் திரையுரைத்திடெனுமு னங்கு, மருவியநோ யொருங்ககலும் படிசெய்த மருத்துவனைக் குருகூர் வந்த, பருணிதனைப் பரிந்தழையார் பவநோயைப் பாற்றுவதெப் பரிசு பற்றி. கங

## மதுரகவியாழ்வார்.

ஒருதாளி னுலகளந்தா னடியருளத் துலவுதலா லோது மன்ளுர்க், கருதாரே கொடுநரகு கைப்பிடித்தா ரல்லாதார் கைக்கொள் வார்தாம், பெருவாழ்வென் றுலகறியக் குருகூர னடிபேணிப் பெருந மாண்பு, தருவாழ்வு கைக்கொண்ட மதுரகவி யடிகளடி தலைமேற் கொள்வாம். கச

## குலசேகராழ்வார்.

வான்முத லாகி நின்ற வள்ளல்பா லன்பு பூண்டா
ரூன்முதல் வாழ்க்கை பேணி யொருவின புரியா ரென்றுத்
தான்முதற் சூளாற் காட்டித் தனிமுதல் கடலிற் காட்சி
நான்முத னுனித்துக் கொண்டா னுவவிரு சரணஞ் சார்வாம்.

## பெரியாழ்வார்.

ஒருவில்லி னென்னலரை யொருங்கறுத்தா னுதவருளா னுவந்தாங் குற்றுச், செருவல்ல மாறனவைக் கிழியறுத்துச் செந்தமிழ்ப்பா வியம்பி ஞாலங், கருவல்ல பிறப்பறுத்துக் கலைவல்ல மறைக்குலத்தொண் கருணை மல்குந், திருவில்லி புத்தூரோம் பட்டர்பிரான் சேவடியைச் சிந்தை செய்வாம. கசு

## கோதையார்.

அடுத்தாளுந் திருவேயா ளுதலவ ளாகவெனை யருளுய்ப் பானென், றெடுத்தாளுங் கரிகாட்டித் தந்தையிருங்கரிகாத்தா கிளையு மாற்றூற், றொடுத்தாரக் கொடிக்குநறை யலங்கலைய யடுத்தகுழ றேயச்சூடிக், கொடுத்தாளை யெம்பிறவி கெடு தாளை மலர்த்தாளைக் குறித்து வாழ்வாம். க

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

காதல் காட்டிய கணிகையைப் பட்டுழன் றவமே
போதல் காட்டிய கரவிடை யீட்டடிப் புணர்ப்பித்
தாதல் காட்டவை வகைநிலை யறிந்தன்பர் பாதப்
பூதி காட்டுமெய் யந்தணன் பொன்னடி தொழுவாம். க

## திருப்பாணாழ்வார்.

வீணை யுழலாமல் வெறியனை யலையாமல் விருப்ப மிக்குக் காணநா தனையரங்கக் கண்ணெலா மடியிடுதற் கருத்து நீத்துப் பேணநான் மறையாளர் மேலேறிப் பெருமான்மெய் பிறங் வேறும், பாணனூர் தமைத்துதிக்கும் பாக்கியம்பெற் றேன்பி விப் பயன்பெற் றேனே க

## திருமங்கையாழ்வார்.

புரவுகொ ளடியார்ப்போற்றும் பொருணெறியெவ்வாய்ப்பேறு
பரமநற் பதமே நல்கு மென்பது பகர்சான் றாகக்
கரவிடைப் பெற்ற வெல்லாங் கண்ணனல் லன்பர்க் கார்த்தித்
தரமில்பே றெய்தி நின்றான் சரணமக் கரண மாமே. உ

## யதிராசர்.

ஆய்கலை கெழுமு மேலை யாரியர் நுவன்ற வொல்லா
தோய்கலை துவன்று நீதான் சொற்றன வாய்மை யென்று
பாய்கலை முதல்வி சூட்டு பருணித நாமம் பெற்ற
வேய்கலை முதலி ராமா நுசயதி யிருதாள் போற்றி. உ

## மணவாளமாமுனிகள்.

பணவா ளரவிற் புவிதாங்கினன் பற்று காதல்
றணவாது விண்டு சமையந்தழைத் தோங்க வந்தெண்
குணவாள னூர்தன் புகழோதிடக் கோது நீத்த
மணவாள னென்னு முனிதாண்மலர் வாழ்த்து கிற்பாம். உ

தமிழாசிரியர்.

கிளர்ந்தநான் மறைக்கு லத்துக் கிருட்டின புர்த்துட் டோன்றி
நளிந்தவெம் பேது நீக்கி நற்றமி ழுதவு வள்ள
லளந்திட வரிய சீர்த்தி யமைமுத்து ராம னென்னும்
விளங்கெழு கருணைக்கொண்டன் மெல்லடித்துணைகள்போற்றி.

அவையடக்கம்.

கடலுட் படுமா ரமிர்தோடு கலந்த கட்டிற்
படலுற்ற பேன மெருந்தாதி பரித்தல் போலா
நடையிற் சிறந்தோர் நவிலூலொடு ஞான மில்லேன்
றொடைநற் பனுவல் கடியார்தொகுத் தாளு நீர்மை. உச

நூற்பெயர்.

களிங்கமில் கடல்சூழ் ஞாலங் களப்பாளென் றுரைக்கு மேனு
முளங்கொள வடநூல் வல்லா ருரைத்ததே தலைக்கீ டாக
வளங்கெழு தேவ தாரு வனத்தல புராண மென்றே
விளங்குசெந் தமிழி னிந்நூல் வியன்பெயர் நிலாய தன்றே. உரு

சிறப்புப்பாயிரம்.

சென்னைப்பிரஸிடென்ஸி காலேஜ்
தமிழ்ப்பண்டிதராகிய ப்ரும்ஹஸ்ரீ
உ, வே-சாமிநாதையரவர்கள்
இயற்றியவை.

பூமேவு புனற்பொன்னி யனைத்துயிர்க்கு மின்பளிக்கும் புகழ்ச்சோ ணாட்டின், மாமேவு பழம்பதியாங் களப்பாள்வாழ் கரிவரத மாலின் சீரைத், தூமேவு வடமொழியி லிருந்துபெயர்த் தருந்தமிழின் றொடைகளாக்கிக், கோமேவு பாகவதர் தமிழ்க் கவிஞர் கூட்டுண்ணக் கொடுத்துளானல். உசு

மற்றவனு ரெனிலிடும்பா வனபுரா ணந்தில்லை வளாகம் வாழும், பொற்றகுகூன் கலம்பகமி ராகவனு லாச்சிவமா புரா ணந் தன்னிற், பற்றமைந்த தொருஞான சங்கிதையா தியதமி ழிற் பாடிச்சீர்த்தி, யுற்றவனு ராயணசா மிப்பனவன் புனற்பின்னை யூரி னனே. உஎ

பாயிரச்சருக்கம் முற்றிற்று.

# இரண்டாவது—நைமிசச்சருக்கம்.

மாமேவு தெய்வத் திருத்தாமரை வைகு மங்கை
நாமேவு மேலோன் மறையோர்தவ நண்ணி யின்பந்
தாமேவு மாற்று னனிவேண்டமுன் றந்த தொண்பூங்
காமேவு நேமிப் பெயர்பெற்றபைங் கான மொன்றே. க

திருமா தவநித் தலமான்மகிழ் செய்ய வாய்ந்து
வருமா தவர்சூழ வயங்கி மலிந்தி யாண்டும்
பெருவா னுயர வளர்ந்தோங்கிய பெற்றி யாலெங்
கருமா முகில்வண் ணனையொக்குமக் கானமன்றே. உ

சொற்பா வுபலங் கனியாவரு டோய நல்கிச்
செப்பார் ககனங் கடந்தேவினை காய்ந்து செவ்வே
தப்பா துகமே னிலாய்மன்னுதல் சாரு மாற்று
லப்பா தமுந்தா னிகர்த்தன்றவ் வடவி மாதோ. ௩

மெச்சுந் திறனுன் மறையின்னெறி மேவி மேலோ
னச்சுந் திருவாய் மொழிதேக்கி நயந்த வின்பம்
வச்சன்பி னுற்றார்க் கருண்முத்தி வழங்கு மாற்றாற்
கைச்சங் கினையு நிகர்த்தன்றக் கணங்கொள் கானம். ௪

உய்யாத வன்றீங் கொருவித்தருக் காரை யோட்டி
மையார்மெய் யானை யணைந்தேமரை யத்த மல்கி
செய்யா ருமகச் சுடர்தானிரம் புற்று நம்மான்
கையா ழியையொத் ததுநைமிசக் கான மம்மா. ௫

அக்கான கத்திற் றவமாற்று மறிவு சான்றோர்
தொக்கா னகதுந் துபிசேயெனத் தோன்றி நின்ற
தக்கா னகத்தி லவிர் பூவினிற் றங்கி னோரின்
மிக்கான கத்தன் விளையாட்டை விரும்பு நீரார். ௬

பிருகுப் பெயரான் றருபெற்றியன் சௌன கப்பேர்
மருவுற் றவனு தியரன்னவர் வாழ்த்த வன்னு
ரருகுற் றனனெட் டெழுத்தோதி யழுக்க றுத்தா
னொருகுற் றமுமற் றொளிர்சூதனென் றோது மேலோன். ௭

பகரற் கரியான் புகழ்நாளும் பயிலு நாவிற்
சுகனைத் தருவான் வயிற்றோய்ந்துபன் னூலு மோர்ந்தோ
னிகரற்ற மண்காப் பொளிர்மேனிய னீடுசெங்குந்
திகிரிப் படையும் பொறித்தென்றுந் திகழ்ந்த தோளான். ௮

வெண்டா மரைநன் மணித்தாழ்வட மென்று ழாயின்
றண்டா மணிப்பூ வடமேனி தரித்த நீரா
னெண்டா னவிரா ழியன்றாளிணை யன்றி யாதுங்
கொண்டா னலன்றன் மனத்தாமரைக் கோயி லுப்பண். ௯

இவ்வாறு போது முனிதன்னையங் கெய்ந்த தூயோர்
செவ்வே யெதிரேற் றியைநன்முக மன்கள் செப்பி
வெவ்வாறு போது மயர்வோம்பி விளங்கு பீடத்
தவ்வாய்மை யான்வை கிடத்தாமரு குற்றி ருந்து. ௧௦

பாழித் தடந்தோ ளொருவாணனைப் பண்ட டர்த்த
வாழித் திருமால் விளையாட்டிய லன்பி னெம்பாற்
காழிற் பொலியும் வினைபாறக் கரைந்து ளாய்முன்
சூழித் திறமின் னமுங்கேட்டிடச் சூழ்ந்த துண்டே. ௧௧

வேண்டா வசுர ரொடுமூய்ச்சுதை வேண்டி வெற்பிட்
டாண்டா ழியிற்கொண் டவனுட லமைந்த ஞாலத்
தேண்டா யினநற் றலங்கள்பல வின்ன வற்றுட்
சேண்டாய சீர்த்தித் தலமொன்று சிறந்த தென்றும். ௧௨

ஆங்கோர் களிற்றைக் கராவீர்த்துழி யண்ணல் காத்த
வீங்கோகை மேய கதையொன்றும் விளம்பி னுயத்
தேங்கோத வண்ணன் றலமாட்சி தெரித்தி மீட்டென்
றேங்கோகை யோடு முனிதாண்மல ருற்றி றைஞ்சா. ௧௩

தன்றா ளிடைப்பாடு கிடந்தவத் தன்மை யோரை
நன்றா தரத்தோ டமைநும்முள நாடு மாறே
யின்றோ துவனீயி ரெழுந்தரு கெய்து மென்னச்
சென்றா யவர்சூழ்ந் திருப்பத்தவன் செப்ப லுற்றான். ௧௪

வேறு.

முந்து பூத்த முழுமல ருந்தியான்
வந்து பூதலத் தாட்டயர் மாண்பெலாந்

தந்த வன்பிற் றவத்துவி யாதனெற்
குந்து மாரரு ளோடுரைத் தானரோ. க௫

மறைபொ ருட்கிட மாயதிம் மாக்கதை
யறையு நீர்மை யறிந்துரை யென்றன
னிறையும் பத்திவ ழாறுமக் கேயலான்
முறையி னோதத் தகுதிகொன் முன்னிடின். க௬

அராவ ணைத்துயி லற்புத னுடல்சொல்
புராணம் பற்பல வாமவற் றுட்பொருள்
விராவு மச்சம் விரிபிற் பகுதியிற்
கராவெ றிந்த தலப்பெற்றி கண்டவா. க௭

நேர தற்கிலை யென்று நிகழ்த்திசை
மார தத்தொடு மல்கு மகதியிற்
சீர தர்ப்படச் செம்மலைப் பாடுவா
னார தப்பெய ரானற் றவத்தினன். க௮

நாம டந்தைக்கு நல்லிட மாக்கிய
பூம டந்தப வுற்றவற் போற்றுபு
தேம டங்கல் செறிதல மான்மிய
மாம டங்கலு மன்பி னருளென. க௯

தாள வம்புயன் பற்பல சாற்றியெ
னாள வம்புரி யார்கணு கித்தலக்
தாள வம்புதியிற் றுயி னீத்தடை
காள வம்புயல் காதையைக் கேளெனா. உ

மருளொ ழிக்கும் வளம்பதி மாட்சியுங்
கருள னற்றவங் கண்டுபெற் றுய்ந்ததுந்
மருள்வ சிட்டனன் ஞான மடைந்ததுந்
தெருளு மாமுனி வோர்பயன் சேர்ந்ததும். உ

விண்ணி லங்கிய கின்னரர் மேயினர்
மண்ணி லங்கு வதிந்துழி வான்றவ
நண்ணி டுந்துரு வாச னடுக்குறக்
கண்ணில் சாவங் கரைந்த பொழுதத்தே. உ

இடங்கர் வேழ மெனவிரு பாலவாய்க்
கடங்கொள் கார்மெய்க் களிற்றைக் கராம்பற்றி
யடங்க வீர்ப்ப வதன்றுய ராற்றுவா
னடந்து மாய னடுங்க வடர்த்ததும். உ௩

வேழ நோக்கி விதந்து புகழ்ந்தது
மாழி யானந் தணர்தன்மை சொற்றதுங்
காழில் சீர்த்திக் கலிங்கமன் வந்தவட்
கேழில் பேயுருக் கெட்டொன் றுற்றதும். உ௪

மருத வேந்தன் பரிமக மாண்புறப்
பெரும கன்றனைப் பேணி யிழைத்ததும்
பொருவில் தீர்த்தச் சிறப்பும் புரைவன
துருவி யாவுந் தொகுத்தனென் யானென்று. உ௫

நாக மஞ்ச நலிந்த கராவடு
மாக மஞ்சனை யான்றல மாண்மிய
மாக மஞ்சமை யுளளத்தந் நாரத
மோக மஞ்சனுக் கன்பின் மொழிந்தனன். உ௬

அன்ன காதை யனைத்தையு மம்புயன்
சொன்ன வாறு சொலத்துணி வுற்றன
னன்ன ராக நயந்தனிர் கேண்மென
முன்னு சூதன் மொழியலுற் றனரோ. உ௭

நைமிசச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௫௪.

---

## மூன்றாவது தலவிசேடச்சருக்கம்.

---

பிறவியவு ளார்துதையும் பெருவளனொ லங்கவற்றி
யறவியவு ளார்கெழுமி யல்கியசீர்த் தாயுடங்கு
மறவியவு மாணுமே வைகுந்தந் தகைத்தம்மா
நறவியலும் பொழிறுறுமு நல்வளவ னுடன்றே. க

இருவரங்க மாகவுறை யொருபெருமாற் கிருப்பாய
திருவரங்க முதலாகத் தெய்வதல நாற்பான்பெற

றருவரங்க ளடியவருக் கருளுபுநின் றுயவர்தங்
கருவரங்கக் களைவதன்றோ காவிரிசூழ் சோணாடு. உ

கண்டமையா வரும்பொருளைக் கருணையா னினிதருள
விண்டபிறப் பினராகி வினையொரீஇ மிசையியங்கு
மண்டலெலாந் தொழுதேத்த வரியநிலை பெற்றுய்ந்த
தொண்டரடிப் பொடியாரைத் தோற்றுவித்த திருநாடு. ங

விருப்பான வின்னிசையால் வேதத்தின் முடியேத்து
னிருப்பான முதலவனை யினிதருளும படிவசித்த
திருப்பாணன் பிறந்தவூர் திருவுறந்தை தனையுடைத்து
கருப்பாலைத் துழனியருக் காவிரிசூழ் சோணாடு. ச

வாலிநா டருமவன்மை மடித்திட்ட பெருமாணபாற்
போலிநா டருமன்பு பூண்டவனை வழிமறித்துக்
கோலிநா டரியபொருள் கொண்டவனை யன்றுதவு
மாலிநா டதனையுந்த னகமுடைத்தொண் புனனாடு. ரு

பண்டுயர்ந்த வான்மீகி பகர்ந்ததொரு பாலாக
வண்டரொடு மதிசயிப்ப வருந்தமிழி லிராமகதை
விண்டுரைத்த வியன்சீர்த்தி மிகுகம்பன் றனையகட்டிற்
கொண்டுயிர்த்திவ் வுலகோம்பு கொள்கையதொண் புனனாடு. சா

ஒருமலைவி லாதுதனை யுசாவியசொற் றதற்குதவு
திருமலைரா யன்பரிசாற் சிற்றம்ப ரகரமமைத்த
திருமலைதாங் கினரடிய ரெழிற்பனவர்க் குதவுநதி
வருமலைவில் வரதனையு மகிழ்ந்தளித்த திருநாடு. எ

ஏரியினு னேற்றத்தா னேதிருட் டினிற்கெழுமு
வாரியினாற் றுன்சுரக்கும் வளனெலா மரிதாட்கீழ்த்
தேரியபா ரிக்குமெழிற் செந்நெல்லேல சாலுமெனு
மோரிணையில் புகழ்படைத்த தோங்குகர் விரிநாடு. அ

இரவிகுலத் துதித்தெங்கு மிசைபோய பெருவண்மைச்
சுரகுருவே முதலாகச் சோழகுலத் தரசரெலா
மரவணையிற் கிடந்தபிரா னருளொடுசெங் கோலேந்திப்
பரவுதிசை முறைவணக்கிப் பாரளிக்குஞ் சிறப்பினதால். கூ

குடியோம்பி யிறைகோடல் குலதருமத் தியல்பதனு
னெடிதோங்கு தன்னாட்டு ணிலவுபல நாடாகப்
படியோங்கப் பிரித்தறிவோர் பரிந்தெடுத்துத் தலையளிசெய்
தொடியாச்சீ ரிவற்றினைக்காத் தூதவவுத வினனொருமன். ய

பிரித்ததுந்தன் முன்னிறைமை பெற்றுலக மொருங்கேதாம்
பரித்தபெரு விறற்றடக்கைப் பார்த்திபர்தம் பெயராலும்
விரித்தபிற வகையாலும் விதித்தவிவற் றொருவாச்சீர்
வரித்ததொரி ராசேந்த்ர சோழவள நாடன்றே. கக

இந்நாட்டி னுள்ளுறைநா டிருந்தவர்தாங் குழீஇயதூஉன்
பொன்னாட்டைப் புறங்காணும் புறங்கரம்பை நாடென்ப
தெந்நாட்டும் புகழோங்கி யெழினாட்டு வழிநாட்டிந்
நன்னாட்டுக் கிணையாய நாடுளதோ நாடுங்கால். கஉ

ஆயபுறங் கரம்பைநன்னாட் டருளுடையைம் படைத்தடக்கை
மாயவன்றன் குழாத்தோடு வைகுந்தத் தினுமேற்றென்
றேயமகிழ் வோடுறைவ தெவ்வளனு நிறைந்துளது
காயமிசைப் பரவுபுகழ்க் களப்பாள்யான் புகல்பதியே. கங

வளர்தேவ தாருவனம் வசிட்டபுரங் கருடபுரம்
கிளர்தயேந் திரவரத புரமெனவே கிருதமுதற்
பளகில்யுக நான்கினுக்கும் பகர்ந்தமுறை பெயர்பெற்ற
தளவறுமா தவமுனிவ ரல்குதிருக் களப்பாளே. சச

பின்னாளில் வேளாளர் பெருங்குலத்திற் றோன்றியவன்
கன்னாவ தாரனுயர் களப்பாள னியற்பெயரா
னந்நாளி லரசனிடத் தருண்மிகுதி படைத்தமையாற்
றன்னாம மிவ்வூர்க்குச் சார்த்தியதா ரறியார்தார். கரு

துங்கமணி முடிவழங்கு சோழனார் சதுர்வேதி
மங்கலமென் றிறைமுன்றில் வாழ்மறையோர் தெருவினுக்கு
மங்கவன்விண் ணகரமென வகன்பதிக்கும் பெற்றபெய
ரெங்குநுவல் வதுமன்றி யெழிற்றளியிற் பொறித்துளவால்.

ஏற்றுவல னுயரியவொள் ளெரிமருளு மவிர்சடையான்
போற்றுவக்கு ணன்புதழீஇப் பயில்கிற்பான் குறுநிலமன்

சாற்றுவளா ளுருவிதனை யெழுகூறு சமைத்தாண்ட
கூற்றுவனென் றொருவனைமுன் குலவவ்விளித் ததுமிதுகாண். ௧௭

ஆதித்தன் குலத்துதித்தவ் வலரியின்பேர் தழீஇக்கொண்டான்
சோதித்திவ் வயின்சிறந்த தூய்தெனத்தன் பெயர்நாட்டி
மோதித்தண் புனறுளும்பு முகிழ்க்கொன்றை முடியரற்குச்
சாதித்த தளியமைத்த தரமறியா ருளரேயோ. ௧௮

எத்தேவை யெச்சமயத் தென்னசொலி யித்தலத்தி
லொத்தோச்ச மிகத்துதிசெய் தூறினுமவர்க் குதவுநிற்பா
னத்தேவி னச்சமயத் தவ்வயிற்சென் றருடரலா
னத்தேறு கரனிங்கு நணுகுவர்நன் கணுகுவரே. ௧௯

அருளிருக்கும் வழியிருக்கு மரசரசு வழியிருக்குந்
தெருளிருக்கு முயர்தெய்வந் தெய்வத்தின் வழிசமயப்
பொருளிருக்கு மவ்வழியே புணர்மக்கட் டொகையிருக்கு
மருளொழிக்கு மித்தலத்தவ் வகையனைத்துங் குடியிருக்கும்.

ஆன்றவரச் சமயநெறி யணவுவரன் னவரிருப்பி
னூன்றுதவ நிலைநிற்கு முயர்தவத்தில் லாதவிலை
மான்றவிவ்வெ லாமிந்த வளர்தலத்த வாலிதனைப்
போன்றதொரு தலமுளதோ பூதலத்தும் பிறதலத்தும். ௨௧

பவமெலா மொருங்ககற்றப் பரவுவார் தொகையவணா
தவமெலா மொருங்கெய்தத் தழுவுவார் தொகையவணா
வெவமெலா மகற்றுபொரு ளெய்துவார் தொகையவணா
நவமெலாம் விரும்பிடினிந் நகர்காண வமையுமரோ. ௨௨

அருமறையோ ராறைஞ்ஞூற் றுகியமை கணக்குடையார்
திருமலிவெங் கதிர்னவயந் திகழ்ந்துலவு முனிவரினும்
பெருமிதமிக் குடையார்தாம் பிறங்குதவம் பலபயின்று
கருதரிய யோகத்தாற் கஞலுவதிக் களப்பாளே. ௨௩

அற்பகங்கொண் டருவிலைசே ரகனிலத்தை யொருங்குறநற்
பொற்பகங்கொண் டெழுகொண்டல் புரைப்பவனுக் கினிதளித்த
கற்பகங்கொண் டிச்சானி யெனுமறையோர் காரிகைக்குத்
தற்பதங்கொண் டவனளித்த தன்மையுதித் திருப்பதியே. ௨௪

கண்டன்றி யானுரைத்தல் கட்டுரையன் றெனநினையீர்
பண்டன்று பண்டைக்குப் பண்டையினை யுள்ளானை
விண்டென்று விளங்கினனவ் விளக்கமுதல் விளங்குவது
தண்டென்ற றவழ்முன்றிற் றனிக்களப்பா ளெனும்பதியே.

ஒருஞான்றை யொருபொழுதை யொருகன்ன லொருநொடியிவ்
வருஞாலம் புகழ்களப்பா ளகன்பதிவை குவர்பேற்றைத்
தருஞானஞ் செறியகத்தார் சாற்றுவதே யரிதெனிலப்
பெருஞானஞ் சிறிதுமிலேன் பேசுவதெங் ஙனமொல்லும். ௨௬

ஒருதிங்கள் வைகுந்தந் துயர்கங்கை யிடையைந்து
பொருதிங்கள் பலபிறவூர் பொருந்தவரும் பயன்விசும்பிற்
றருதிங்க டவழ்மாடத் தனிநகரிக் களப்பாளின்
வருதிங்க ளொருஞான்று வதிபலனுக் கிணையிலவால். ௨௭

திசையெலாம் பிறவெலாந் திருமாலின் றிருநாம
மிசையெலாம் பரக்கவொலி மிகுமிருளென் பதுகுறைய
நசையெலாந் தரநவிலு மவர்மேனிப் புண்டரத்தா
லிசையெலாம் பரந்ததென வெங்குநில வொளிகளுலும். ௨௮

எருமையிடை யாமறத்தி னிகன்றேமத் திறனின்ற
வொருமையிடன் றனையுயிர்செற் றொளிருழி வலனேந்தி
வருமிடற்று னவர்மடிய மரக்காற்கூத் தினிதயர்ந்த
திருவமாற் கிளையர்டன் செழுந்தளிமல் குவதொருபால். ௨௯

ஒருமாரன் செழுவைய முலாப்போர்த முனமிடைந்து
செருமாவொண் பரிநிரைப்பச் செழுங்காளந் துதைந்தொலிப்பக்
கருமாத்திண் களிற்றினங்கள் கதுவினவெங் கணுஞ்செறியப்
பொருமாறில் சேனையொடு பொழின்மிடைவு பலவயினும். ௩௰

புள்ளிருக்கும் புனற்பொய்கை புனற்பொய்கை சூழ்ந்திருக்குங்
கள்ளிருக்கு மலர்ச்சோலை கவினுமலர்ச் சோலைதொறு
மெள்ளிருக்கு மிடனின்றி யிருந்தவத்தோ ரிலைக்குரம்பை
யுள்ளிருக்கும் புறத்திருக்கு முரைத்திருக்குங் கிளிபூவை. ௩௧

வயலெலாந் தாமரைகண் மலர்வனவண் டினந்துவைப்ப
வயலெலாஞ் செழுஞ்செந்நெ லலங்குகதி ரோப்புவன

கயலெலாங் கலவைமணங் கமழ்வனகள் கடைசியர்தா
மியலிலாக் களைகளைவா ரெறிசந்தச் சேறளைந்தே. ௩௨

விழிகாட்டுங் கருங்குவளை மருங்குவளை மென்னலாா
மொழிகாட்டுங் கரும்பமலும் கரும்புறமொய்ம் மிடலேனைக்
குழிகாட்டுங் கதிர்மணிகள் குலவரசர் திருமுனைறிற்
கிழிகாட்டு மறைவாகை கெழுமறையோர் செயலெல்லாம். ௩௩

மருங்கினெலா மகச்சாலை மறுகெல்லாங் கல்லூரி
சுருங்கையெல்லா மறைசசிறுவர் சுருதிபயி லிடமாங்க
ணொருங்குநில விடுமறையோர்க் குதவட்டிற் சுவைச்சாலை
யருங்குரைய வில்வனைதது மாராய்ந்து நுவல்வனவே. ௩௪

வேறு

யாட்டுண் டார்நல் வாய்மை கடந்தா வகையல்லா
தெட்டுண் டார்சொற் குய்ய மிடைந்தா ருயிர் செவ்வே
யட்டுண் டாரப் பாதக ரிந்தப் பதிபுக்காற்
கட்டுண் டாய கையற மேலாங் கதிநின்றார். ௩௫

நாவஞ் செய்தாப் பொய்ம்மை நவின்றார் நவையுாய
கோவஞ் செய்தார் கொண்ட கொடாதார் குறிநாடாச்
சாவஞ் செய்தார் தீய புரிந்தார் தகைதீரப்
பாவஞ் செய்தா ரிப்பதி மெய்திற் பழிதீர்ந்தார். ௩௬

நச்சிட் டார்நன் னங்கையர் கற்பி னவைகண்டார்
மெச்சிட் டார்நர் கையரை வேதம் பயில்பாங்க
ருச்சிட் டாதி செய்வன ரொன்று வகையில்லிற்
கிச்சிட் டாரோ டிப்பதி புக்கா கெழுமுற்றார். ௩௭

தடிந்தா ரய்பி ளூன்சுவை கண்டா தகையென்ப
கடிந்தார் செல்லாப் புன்னெறி புக்கார் கணனாட்பின்
முடிந்தா ரன்றிப் பின்னிடு கின்றார் மொழிபாவம்
படிந்தா ரிவ்வூ ருன்னிட வன்றே பழிதீர்ந்தார். ௩௮

தகைமேல் வைத்த சான்றவர் தம்பாற் றணவாதே
பகைமேல் வைத்தார் பற்றிலர் தம்மைப் பழிசெய்து
நகைமேல் வைத்தார் ஞானியர் சொல்லை நடைதீரும்
வகைமேல் வைத்தா ரிங்குற வெம்மை வழிகட்டார். ௩௯

நாயே யாக நச்சர வாக நலனில்லாப்
பேயே யாக பிழைசெ யேனை யுருவாக
தாயே யாய நம்பி களப்பா டழுவுற்ற
நோயே யாவுந் தீர நுனிக்குந் திறனெய்தும். ௪0

தடந்தா டேய வோங்கு களப்பா டனையெய்த
நடந்தா ரேனுந் நண்ணு நினைந்த நினைவோடு
கிடந்தா ரேனு மன்னவ ரோடு கெழுநட்பிற்
படர்ந்தா ரேனுந் தூயவ ராவர் பரிவோவி. ௪௧

ஊற்றற் கொவ்வாப் பல்லற மாற்றி யயர்வோம்பி
மாற்றற் கொவ்வா வல்வினை விட்டா ரெனினுந்தா
மேற்றத் தொவ்வா மல்கு களப்பா ளிதையெய்தார்
சாற்றற் கொவ்வாப் புன்னிரை யப்பா றணவாதார். ௪௨

அணிசெய் கோட்டத் துற்ற துராலை யகழ்கிற்போர்
பணிசெய் பாலோர் நந்த வனப்பூம் பணிகொண்டோர்
பிணிசெய் மாலை கட்டி யணிந்தோர் பெருமானை
நணிசெய் காண்பி னற்பய னேற்கு நலமிக்கார். ௪௩

ஊனே தோன்றும் வன்பிறவிக்க ணுலையாமே
யீனோர் நோக்கின் முத்தி யளிக்கு மியல்கண்ணிப்
பானோர் தோன்றுஞ் சொல்லியொ டெம்மான் பயில்கிற்பத்
தானே தோன்றிற் றுவயி னெண்பூந் தனிமானம். ௪௪

மாமா னந்தி யாவ ருவப்பின் மலிவுற்றே
தாமா னந்தி யாவதை நோக்கித் தரிசிப்பார்
கோமா னந்தி யாகிவை குந்தங் கொளநல்குந்
தூமா னந்தி யாவருந் தப்போர் சொலுமஃதே. ௪௫

பவநோய் ஞாலம் போற்றி யொழிக்கும் பரிசுள்ளிச்
சிவனு நின்ற சேயொளி யம்பொன் செறிமானத்
தவனோ வாமே பைந்தொடி மார்ப னவிர்தல்கண்
டெவனோ பல்லோர் பல்வழி யுள்ளு மியல்பந்தோ. ௪௬

களப்பார் கற்பங் கோடி களந்தா ரெனினும்பூங்
களப்பா ளின்சீர் கண்டுரை செய்வா ரிலர்கண்டீ

ருளப்பா லோமகை யுந்த வுரைத்தேன் சிறிதங்க
ணளப்பா ருள்ளு மேலுள சொல்வா னமைகின்றேன். ௪௭

தலவிசேடச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௧௦௧.

## நான்காவது கருடச்சருக்கம்.

செழுந றுங்கமல வீட்டில்வரு செல்வ னுதவும்
வழுவி னற்றவ மரீசிமகன் மாத வமெலாங்
குழுமி வந்தனைய காசிபன் மணந்து குலவும்
பழுதில் வேற்கண்மட மாதர்பதின் மூவ ரவருள். ௧

தனைநி கர்க்குமொரு தையன்மிசை மின்வ டிவினுள்
வினதை தன்கணவன் மெல்லடி வணங்கி யடியேன்
மனம கிழ்ச்சிபெற மைந்தரை யளித்தி யெனலும்
புனித நற்றவ னழைத்தருகு போத மகிழ்வான். ௨

வானை வேலைவடு வைக்கடுவை வென்ற விழியாய்
தாளி னின்றுனுழை யண்டமொ ரிரண்டு தருவ
னுளு மோம்புதிம னுயிர நவின்ற பருவங்
கேளி னேகமக வாய்க்கெழுமு மென்று கிளவா. ௩

அவ்வி ரண்டனை யளித்தவ னருந்த வநெறி
வவ்வு சிந்தைய னகன்றிட மலர்த்தி ருவனு
ளிவ்வ ழிக்கணுற மாற்றவளு மீன்ற னளரா
வெவ்வி னத்தைவின தைக்கொடி பொறாது விரைவாள். ௪

பாதி யாம்பருவ நாளினுடை பட்ட ழியுமா
றுதி நாண்மொழி மறந்தனளொ ரண்ட முடைய
மோதி னுளதி லெழுந்தனன் முனிந்தொர் தனையன்
சோதி ஞாயிறொரு பாதிவரு தோற்ற நிகர்வான். ௫

அருண னென்னுமவ னன்னையையென் மேனி குறையக்
கருணை யின்றியதை மோதிய கடுஞ்செ யலினுன்
மருண விந்திடவின் மாற்றவ டனக்க டிமையா
யிருண யந்தகுழ லாயுழலு கென்றுரை செய்தான். ௬

அன்னை யஞ்சியல மந்தன ளுயங்கி யவனை
நன்னை யஞ்சில பெறும்படி நவின்று கலுழ்வா
டன்னை யஞ்சிறுவ னஞ்ச றமியோ யொருமகன்
பின்னை யுஞ்சிட வருந்தினது பேது கடிவான். ௭

நிற்றி யென்றுமிசை நீடுசெல வோடி ரதமேற்
பற்றி யெய்துசுடர் வீசு பருதிப் பெயரினுன்
வெற்றி யோய்வலவ னுயிரத மேவு கௌனு
மற்றி யாதுமுரை யானவண் மரீஇயி னனரோ. ௮

ஷிரவ னந்துகுழ னங்கை வினதைக் கொடியுமிக்
கரவி னந்தனை யளித்தவளொ டன்பி னொருநாள்
வருவ னந்துதைய வாடுபொழு தங்கு வருவிண்
பரவு மிந்திர னரும்பரியின் வால்வெ ளிதெனா. ௯

கண்ட கத்துரு வெனும்பெயர்கொள் காரி கையளுள்
விண்ட கத்துரு மெனச்சினவி வஞ்ச வினையா
லெண்ட கத்துரும நன்முகையை யெள்ளு விரலா
யுண்ட கத்துருவ நோக்கு கரிதென் றுரைசெய. ௧௦

சலதி யாதர மகன்றினைய சாற்றி னைகொலாங்
கலதி நாளையிது கண்டுழி கரைந்த படியே
வலதி யாவள்வயி னஃதுடையண் மாட்ட யலினுள்
சிலதி யாதறுணி பென்னவவள் செவ்வி தெனவே. ௧௧

மனைய டைந்துழியவ் வஞ்சனை மனத்து மடமான்
றனையர் தம்முட னுசாவியது சாரும் வகையே
யினைய மெண்ணின ளியற்றிவின தைக்கு மறுநாட்
புனைக ருங்குழலி காணென வுரைத்த பொழுதே. ௧௨

கண்டு துட்கென மருண்டனள் கரைந்த வணநீ
தொண்டி யற்றுதி யெனத்துயர்வொ டின்ன கொடுமை
பண்டி ழைத்தவினை யென்றுபணி செய்தொ ழுகுநாட்
டண்ட லில்பருவ மாயிர மெலத்த ழுவவே. ௧௩

மற்றி லங்குமொரு முட்டையிடை வந்த ருளினு
னுற்றி யங்குசிறை யோங்குமிரு பாலு மொளிரப்

பெற்றி லங்குகரு ளப்பெயரி னுன்பி ழைபட
முற்றி யங்கடிமை தாயுறுதல் கண்டு முனிவான். ௧௪

அன்னை தன்னைமுன மன்னியதெ னேவ றைகென
முன்னை யின்னபடி துன்னியதெ னுமொழிதலு
மென்னை யென்னையென வன்னமக னீத கலுமா
றுன்னை யிங்கிலைமை கண்ணினளொ டோது கெனவே. ௧௫

வஞ்ச நெஞ்சநிறை வஞ்சியை வலஞ்செய் தடியே
னெஞ்ச மெஞ்சநிறை யெஞ்சவிசை யெஞசு மடிமைத்
தஞ்ச முஞ்சகல விஞ்சுமொழி தந்த ருளெனப்
பஞ்ச மஞ்செறியு மின்னுரை பகர்ந்து கலுழ. ௧௬

நஞ்சு மில்குகவை நாச்சுடிகை மைந்த ரொடுசூழ்ந்
தெஞ்ச லின்றமுத கும்பமிவ ணெய்தி னகல்வாய்
மஞ்சு மல்குகுழ லென்னவது மைந்த னுணரா
வஞ்ச லன்னைகொணர் கிற்பனென நீட லமைவான். ௧௭

நுந்த மாதவ னியங்கிட னுவன்றி டெனலுங்
கந்த மாதன மிருந்துள னெனக்க லுழன்விண்
முந்த மாதவனின் மும்மடி முயன்று முடுகி
வந்த மாதவன் மலர்ப்பதம் வணங்கி யபினே. ௧௮

அவனி கழ்ந்தவிவை யென்றவ னுரைப்ப வறிஞ
னுவண மைந்தினைகொ ளும்பர்நகர் புக்க முதுகொண்
டிவண மைந்துற நறைத்துள விலங்கு மவுலிச்
சுவண வம்பரனை யேத்தினது தோயு மெனலும். ௧௯

ஆய சோதியை யருட்கடலை யாதி மறையின்
மேய மூர்த்திதனை யெத்திற மறிந்து விழைவ
தேயு மாறளிய னேற்கருள்செய் கென்று கவலுஞ்
சேயன் மாட்டினுள வன்பினிது செய்து மெனவே. ௨௰

மட்டெ ழுத்திகழ் நறைத்துளவ மார்பன் மனுவா
மெட்டெ ழுத்தைநினை வார்வினைக ளென்ப தமவாய்
விட்ட ழுக்கடவு மெய்ம்மறையை நுண்பொ ருளோடே
சிட்ட ருட்டலைவ னார்வமொடு செப்பி மகிழ்வான். ௨௧

இனைய மாமனு நுவன்றனை யிருஞ்சி னையகா
ரனைய மால்பத நுனித்தரிய நற்ற வநெறி
தனைய வாயுறைதி சாற்றுமது செய்யு மிடனுந்
நினையி னசைமிக நீடுபுன னாட தனிலே. உஉ

காள மாமுகி லிறத்தவனு லாவி டுகளப்
பாள லாதுபிற சார்புபட ரேலெ னவிடத்
தாள தாமரையி னுனைநிகர் தாதை மொழியா
லாளு நாயக னிலாவுமவ ணெய்தி னடைவான். உ௩

ஊந்து முன்னவ னிருந்தளி வலஞ்செய் தெனையா
ளெந்தை முன்றிலொ ரிருந்தட மகழ்ந்த ருகிருந்
துந்து மைம்புல னொடுக்கிமனு வோத லொருவான்
சிந்தை யுள்ளிறை செழும்பத மலாது நினையான். உ௪

மோதி மந்துதைவில் செம்முளரி மென்ற விசில்வெள்
ளோதி மந்தனையு ளானுறைவ தென்ன வுவரி
யாதி மந்தர மமைந்தென வலங்கு தழலிற்
சோதி மந்திர நவின்றினிது தூய னுறைவான். உ௫

செயல ருந்தவ மிருந்துழி யறிந்து திருமான்
மயல ருந்தருண் மனங்கொடு வரங்க டருமா
றயல ருந்தனை நினைக்குமு னளிக்கு மலைவான்
புயல ருந்தவொளிர் வண்ணநிக ரண்ணல் புகுமால். உ௬

பாவ வல்லியை மறத்தொடு பரிந்து வினைதா
மோவ வல்லியை கெடும்பகலு முன்னி னருள
மேவ வல்லியவி ரன்னைவியன் ஞால முதவுந்
தேவ வல்லியொரு பாலுருகு சேர வரவே. உ௭

பம்பு துந்துபி யியக்கினர் படர்ந்து மிசைவா
ழும்பர் துன்றிட வரம்பையொ டுருப்ப சிமுத
லம்ப ரஞ்செறியு மாதர்நட முன்ன ரயர
வெம்ப ரும்புகழ் மதிக்குடை யிலங்க மிசையே. உ௮

ஐம்பெ ரும்படை யலர்க்கர மவிர்ந்து சுடரப்
ஸம்பொ லங்கழ றழங்கொலி பரம்ப முடியிற்

செம்பொ னின்முடி நெடுஞ்சுடர் திசைக்க ணெளிர
வம்பி லங்குவன மாலைவரை மார்பு துயல. ௨௯

ஏனை யாவரு மிறைஞ்சிமுன மெய்த வெனையாண்
ஞான நாயக னயர்ந்ததவ மைந்த னுறையும்
வானை யேயுமில வந்திகை மருங்கு புகலுஞ்
சோனை வார்குழலி சேய்தொழுது துள்ளி மகிழா. ௩0

எட்டி னைந்தினிறை யோனடி யிறைஞ்சி வினைகள்
கெட்டி னைந்தற வலம்பல தரங்கள் கெழும
மட்டி னைந்தொழுகு பூமகளொ டெந்தை யைவலந்
துட்டி ணிந்தகளி யானிவை யுரைக்கு முணர்வால். ௩௧

தறையி லோர்முனி வரன்றனையு ணுகி மறையின்
றுறைகள் சென்றநெறி சென்று துனை தந்த தெவனோ
துறைகள் சென்றநெறி சென்றவநின் சூழ்ச்சி யொருநான்
மறைகள் சென்றுமறி கின்றில விதென்கொன் மயர்வே. ௩௨

புரையி லாயரது பாடிபுகு தந்தொர் மகனாய்
நிரையி னோடுசெறி கானினில வுற்ற தெவனோ
நிரையி னோடுசெறி கான்புகுநின் பெற்றி யிறையோ
யுரைகள் போயமுத லோருமொரு வாற றிவரோ. ௩௩

என்னை யான்சிறியன் யாதுமறி யேன்ற மியென்மாட்
டின்ன பேரருள் வழங்கவரு செய்கை யெவனோ
வின்ன பேரருள் வழங்கென விரந்து துயர்வார்
முன்னை வானவனு மற்றுளரு முற்று முறையே. ௩௪

தவநெ றிக்கணுறை மைந்தனிவை சாற்ற நினைவார்
புவநெ றிக்கொரு புகைப்பொருளி னுற்ற பரம
னவநெ றிக்கிகல் பயின்றவ வவாவி யதெனோ
தவனெ றிப்படரல் கண்ணிய தளித்து மெனவே ௩௫

அலகி லண்டமுழு துண்டுமிழு மண்டர் தலைவ
னிலகு பண்டெனை வருந்தியுத வன்னை வினையா
னிலவு தொண்டுபுரி தந்துழலு நீர்மை கடிவாள்
புலவர் கொண்டளிசெய் வெண்சுதை புரிந்து புகல. ௩௬

ஆய தெய்துநெறி கண்ணியுள னென்ன வமலன்
றாய நல்லமிழ்து கொள்ளுமிட றந்து துயர்தீர்
சேயை யின்னும்விழை வுற்றுளது செப்பு கெனலு
மேயு நின்வயின லன்புவரு மாற றுளென. ௩௭

கார்தி கழ்ந்தவண னன்னது களிப்பி னுதவி
யூர்தி யென்றுநினை யுன்னினெனவ் வண்ண முறைவா
யோர்தி கழ்ந்தயுக மூன்றினிலிவ் வூரு நினது
பேர்தி கழ்ந்திடுக வென்றுதளி பேணி யுறவே. ௩௮

வேறு.

வரம ளித்திறை மகிழ்ந்து கரப்ப
வுரம ளித்தமையு ளுன்னி விசும்பின்
பரம ளித்துறை புரந்தரன் பாங்கர்த்
தரம ளப்பரிய தன்மைய னுற்றான். ௩௯

சிறைத டிந்தவைசெ றிந்திட வாற்றி
முறைய ரும்பயனை முற்றிய மேருப்
பொறையு டன்றுமிசை போந்தது பொற்ப
வறையி ருங்கழலவ் வாண்டகை சென்றான். ௪0

ஓச னித்துலகு கொட்டவு லாவி
வீசு வெஞ்சிறையெ ழுந்துழல் வெங்கான்
மூசு மீன்றொகை யுதிர்த்து முருக்கக்
காசின் மெய்யினொளி காரிருள் வௌவ. ௪௧

விண்ண கத்தமரர் மேவிய நாடு
கண்ண கத்தொளிர வன்னது காணூ
வெண்ண கத்தினுள தெய்தினெ னென்னு
வுண்ண கைத்ததனை யுற்றன னம்மா. ௪௨

மைந்தன் வெஞ்சிறை கறங்கமை வானத்
துந்தி யுட்புகுத வுண்ணகர் காவற்
பந்தி நின்றவர் பதைத்தெதிர் போகேல்
வந்த செய்கையெவ னென்ன வகுக்கும். ௪௩

அமுது கொள்ளுமுள மாசையின் மிக்கே
னுமது விண்ணகர கோன்மையி னுற்றேன்
சமரி ழைப்பினும தெய்துதல் சாலு
மிமைய வர்க்கிடைகி லேனிது திண்ணம். சுச

நம்மி றைக்கு நுவல் கிற்றிரெ னமுன்
வெம்மி றைத்தொகுதி மேயின னென்னுக்
கம்மி றைப்பவிழி கால்க ணடுங்கத்
தம்மி றைக்கினைய சாற்றுது மென்னு. சரு

உடறு ளங்கவுறு காவல ரோடி
யடல டங்கமலை யார்சிறை கட்ட
மிடறி ணிந்தபடை யான்பதம் வீழ்ந்து
தடதெ டுங்கைகுவி யாவிது சாற்ற. சசு

விழிசி வந்தெயிறு மென்றுவன் மீசை
கழிய வேற்றியிரு கையின் முறுக்கி
யழிவ டுத்துவர லாயின னோவென்
றிழித கப்பலசொ லங்க ணியம்பி. சஎ

படைய னுங்கமுன மேகுக பற்றுக்
கடைய னுங்கவுத வாதது காக்க
விடைய னுங்கடுகி மேல்வரு மேனும்
புடைய னுங்களுயிர் போற்றுவ னென்ன. சஅ

அன்று கூறுமு னடர்த்துமெ னப்போர்
வென்று வீங்குவிறல் வெம்படை முன்னே
சென்று தாக்கமிடல் விண்ணவர் செம்ம
றுன்று மாமிசையி வர்ந்தெதிர் தோன்ற. சகூ

கண்டு புள்ளிறைக னன்றெதிர் வந்தார்
கொண்ட போரின்விடு கூர்ங்கணை யெல்லாம்
விண்டு போகவிரி மென்சிறை வீசி
மண்டு தேவர்முனம் வன்சம ராற்றி. ரு௰

இமைப்பி லாரிரிய வெற்றிய டர்த்துச்
சமைக்க ணின்றகுலி சப்படை யானைக்

குமைத்தொ றுத்தரிய கொற்றம்வி ளைத்திட்
டமைத்த காவலமு தங்கொள லுற்றான். ௫௧

இரந்து பின்னிலையி டைந்தரி மைந்த
வரந்தை நீத்தியென வன்பினொ மன்னை
பரந்த புன்கணற வுய்த்தது பாற்றின்
வருந்த லீவனென வோதினன் வந்தான். ௫௨

வேறு.

கைக்கொண்ட வமுதை யன்னை காற்கொண்டு போற்றி யுய்ப்பத்
துய்க்கின்ற வமரர் சூழ்ந்த சூழ்ச்சியிற் பொருந்தி மாற்றாண்
மொய்க்கின்ற மகார்முன் வைத்து முயன்றுதா யடிமை மாற்றி
மைக்கொண்டல் வண்ணன் காப்ப வஞ்சித்துக் கவர்ந்துமீண்டான்.

கொண்டெழு மமுதை வேழங் குறைதவிர்த் தினிதி றுண்ட
தண்டுழா யலங்கன் மோலி சந்நிதிப் பாழி மல்க
நொண்டன னிரம்பி யெச்ச நனித்துச்சூ ழமரர்க் கீந்து
திண்டிறற் கருள னெம்மான் முன்றிற்சென் றிறைஞ்சி யுற்றான்.

கருளன்முன் றவஞ்செ யாற்றாற் காருட புரமே யென்ப
வருளுமப் பதியை மூன்றாம் யுகத்தினத் தடத்தின் பேரும்
பெருகமிழ் தல்கு மாற்றாற் பிறழ்சுதைத் தடமே யென்ப
மருவுளத் தாற்செ யாற்றான் மானத தீர்த்த மென்ப. ௫௫

அத்தடம் படிவா ரெய்தும் பேற்றையா ரறையற் பாலார்
மெத்தடம் படிறு தீமை வெவ்வினை மறமைம் பாவங்
கொத்தொடும் பொடியு மன்றே குறுகிநோர் நோக்குங் காலை
யொத்ததிற் படியி னுள்ளும் பொருளெலா மொருங்கு மல்கும்.

தேக்குண்ட வமுதைக் கொண்டு செம்மன்மு னெய்துங் காலைத்
தாக்குண்டு சிதர்ந்த வந்தத் தண்டுளி வீழ்ந்த பாங்கர்
மீக்கொண்டு தேவதாரு முளைத்தெங்கு மிடையு மீராற்
காக்கொண்ட தேவதாரு வனமெனக் கழறு ஞாலம். ௫௭

வாயினாற் றேவதாரு வனமென வொருகாற் சொல்லிற்
பேயினாற் பெருகு பீழை பெரும்பவ முதலாச் செவ்வே

மாயுமா லன்ன தானம் வதிபவ ரெய்தும் பேற்றை
யேயுமா றுரைக்க வல்லா ரேவரே தெரியுங் காலே. ௰அ

கருடச்சருக்கம் முற்றிற்று.

ஆ. செய்யுள்—கருசள.

ஐந்தாவது-வசிட்டச்சருக்கம்.

வானோ ரேத்துந தாமரை நான்முகன் வளர்ஞாலந்
தானே வாது பல்கிடு வண்ணந் தனையுன்னி
யீனோ ரேத்த வொன்பது மைந்த ரினிதீன்றா
ஞேனோர் தம்மிற் றூயவசிட்ட னருண் மிக்கான். க

தன்னைத் தந்த தந்தையை யொக்குந் தனிமைந்த
னென்னச் சொற்ற வாய்மையின் மேற்கோ ளெனலானான்
பன்னற் கொத்த நான்மறை முற்றும் பயின்றவான்
முன்னிற் றெல்லா மெய்து தவத்தின் முதனின்றான். உ

முற்றத் தேருந் நான்மறை யீற்றின் மொழிதந்த
செற்றத் தோராத் தத்துவ மாயுஞ் செயல் கொள்ளா
மற்றச் சித்தி யெய்திடு மாறு வளமார்நூல்
கற்றுக் கற்றுக் கைவரல் காணன் கவல்கின்றான். ௩

இனைதந் தென்னே யென்று வெறுத்தவ் வயினின்றுந்
துனைதந் தேகித் தந்தையை யெய்தித் தொழுதெந்தாய்
வினைதந் தோவா வெம்பவ மாய மிகுஞான
நினைதந் தேனுக் கெய்திய தின்றந் நெறியென்றான். ௪

கடல்சூழ் ஞாலங் கண்ணி யடைந்து கருணைப்பால்
விடல்சூழ் கல்லா மாயவன் வைகி மிளிர்கோயிற்
படல்சூழ்ந் தேகி யாண்டுள யாவும் பவநாளு
மடல்சூழ்ந் தேத்திற் கைவரு மென்ன வதுகேளா. ௫

தேட்டந் தான்மிக் கானில னெய்தித் திருவாளன்
கோட்டந் தோறுஞ் சென்றினி தன்பு கொளும்வண்ண

நாட்டும் பூசை நாடொறு மாற்றி நனிநாடி
மீட்டுங் கொண்ட வன்ன துறுதான் மெலிகின்றான். ௬

காணு நின்ற குன்றின் விளக்கிற் கனலுஞ்சீர்ச்
சோணு டெய்தித் தூயு களப்பாள் புகுபோழ்தத்
தேணு ரோர்சொ லித்தல நிற்றி யெனல்கேளாச்
சேணு டேத்த வவ்வயின் வைகுஞ் செயல்பூண்டான். ௭

முருகா ரிண்டைப் பூவரு மேமேலான் முதன்மைந்தன்
றிருகா வன்போ டெந்தை தனித்தென் றிசையின்பா
லொருகோல் வீழ்ச்சிக் கண்ணொரு பொய்கை யுளதாக்கிப்
பெருகா நின்ற மாதவ மாற்றிப் பிறழ்கின்றான். ௮

சுற்றுந் தீயுய்த் தவ்வழி நின்றுந் தொகுபந்த
முற்றுந் தீய நீரிடை நின்று முனிவன்பேர்
கற்றுந் தீர்த்த னுடல் கரைந்துங் கடியொவ்வாத்
துற்றுந் தாமே காண்முத லுண்டுந் தொகவாற்றும். ௯

ஈற்றை ஞான்று மெவ்வுயி ருள்ளு மியலுஞ்சீர்ப்
பொற்றை யேந்தி பூங்கழல் போற்றிப் புகல்பூசை
மற்றம் மாயோற் காற்றி மகிழ்ந்து தவமல்கக்
கற்றை வேணி மாமுனி யாற்றுங் கவறீர. ௧௦

செய்யா நின்ற மாதவ நோக்கிச் செறியாழிக்
கையா னன்றே யெய்துபு நின்றன் கவல்பென்னே
யுய்யா நின்றே யுன்னுவ தோதென் றுரைசெய்ய
மெய்யா னன்பிற் போற்றி மெலத்தான் மொழிகின்றான். ௧௧

நீயா வன்பி னித்தலு மையா நினையேத்திக்
காயா வன்பிற் றீவினை கட்டுன் னருள்கொண்டே
வீயா வின்பத் தத்துவ மொன்றே விழைவுற்றேன்
மேயா வன்புற் றெற்கருள் செய்தி வினைதீய. ௧௨

என்பா லன்பா லெய்தினை யின்போ டிவணென்று
நின்பா லென்போ லுள்ளுபு நிற்போர் தமதுள்ளத்
தன்பா லின்பே கொள்ள வுருக்கொண் டருள்செய்வா
னன்பா லோடும் மெய்துதல் வேண்டுந் நசையேனல். ௧௩

யான்கண் டுள்ள விப்புன லாடற் கியைவுற்றார்
வான்கண் டுள்ளு மாவள மல்கி மகிழ்தந்தே
யூண்கொண் டாரும் பந்த மொழிப்பி னொருவாநீ
தான்கொண் டார்வை குந்த முலாவத் தருகிற்றி. கச

என்று வேத்திக் கூறும் வசிட்டற் கிறைமேலோன்
றன்று வார விவ்வர முற்றுங் கனிதந்தோ
நின்று மத்தா லோர்யுக மிவ்வூர் நிலவுற்றே
மன்று நிற்க வென்று குலத்துண் மருவுற்றான். கரு

குடமும் மல்லும் மாடிய கோமா னுரையாமுன்
மடமுந் நின்ற பேது மகன்று வளர்ஞானத்
திடமும் மல்க வல்லிய மாடி செயல்கண்ணித்
தடமல் குள்ளந் தான் மகிழ் வுற்றான் றவ நின்றான். கசா

அன்றே தொட்டத் தீர்த்த மவன்றன் பெயராலே
நின்றே யுன்னிற் றத்துவ சித்தி நிறைதந்து
நன்றே மல்கிற் றப்பதி யன்று னவின்றும
மொன்றே யுற்ற தேய்ந்த திரேதா யுகமம்மா. கஎ

வசிட்டச்சருக்கம் முற்றிற்று.

ஆ. செய்யுள்—கஎசா.

---

## ஆறாவது முனிதீர்த்தச்சருக்கம்.

---

சால்பால் யாருங் கண்டு பயன்கொ டணிமான
மேல்பால் வாளி வீழ்ச்சி யிரண்டின் மிசைதென்றற்
கால்பாய் பைம்பூம் பொய்கை யிலங்கு மதுகண்டோர்
நூல்பா ராட்டும் பற்ப றவத்தோர் நுவலுங்கால் க

ஓல்லா வஞ்சக் கூற்றியல் வென்றோன் முதலுள்ள
நல்லோர் கண்ட நன்புனல் யாவு மொருநீராய்ப்
பல்லா ரேத்து மாமுனி தீர்த்தப் பெயர்பண்பிற்
புல்லா நின்ற துள்ளிய நல்கும் புகழ்பெற்றே. உ

## வேறு.

ஆய முனிப்பேர்த் தடத்தவர்க ளளவின் மணிகள் பெறக்
குயிற்றித், தூயவொருநாற் புறத்துமெழிற் றுறைக ளமைத்துக்
கோட்டுமிசை, மேய மூணிமண்டபஞ்சமைத்து விளங்குமிலஞ்சி
தனிற்கஞ்சம், பாய கழுநீர்நீலமுதற் பலவுண்டாக்கிநனிமகிழா.

சார வுயர்ந்த வத்தடத்தின் றடங்கோட் டிருந்தே யம்முனிவர்
சேர வணைந்து நம்பாணர் செறிய வங்கந் தனைநல்கிப்
போர வுகந்த வருளாளன் பூசை யாற்ற வெம்பெருமான்
றோருங் கருளப் புள்ளூர்ந்து பேணு முனிவர் முனம்வந்தான்.

கண்டார்கருணைக்கடலனையகையா ழியனை நம்பிறவி
விண்டாமின்றே யெனவடிக்கேவிழுந்தா ரழுந்தாப்பேருவகைத்
தண்டூாவெள்ளத் தெழுந்துசிரந்தடங்கைகுவியாவானந்தங்
கொண்டார்பண்டைப் புண்ணியத்தின்கூட்டம் பயந்ததெனத்
[துதிப்பார். ௫

எறிநீர் வேலைக் கடன்ஞாலத் திருக்கு முயிர்க ளொருங்காக,
வெறியார் கமலத் திருவீட்டின் மேவிப் படைப்பாய் நீயன்றே,
வெறியார் கமலத்திருவீட்டின் மேவிப் படைப்பாய் நீயென்னிற்
சிறியே மெம்மை யினிப்படைத்தல் செய்யா தொழித்தல்
[வேண்டுதுமே. ௬

போக்கி னான்கு முகங்கொண்ட புத்தே ளன்றி யெவ்வுயிருங்
காக்குங் கருணைப் பெருந்தெய்வ நீயென் பதுவுங் கண்டோமே
காக்குங் கருணைப் பெருந்தெய்வ நீயே யதனு லெம்மையினி
யாக்கும் பிறவிக் கியையும்வினை யாக்கா தளித்தல் வேண்டுதுமே.

கைம்மூ விலைய வேலேந்திக் கயிலை யிருந்து கடைஞான்றி
லிமமூ வுலகி னுயி ரனைத்து மிறுக்கு மொருவ னீயன்றே
யிம்மூ வுலகி னுயிரனைத்து மிறுக்கு மொருவ னீயென்னி [மே.
னெம்மூழ் படுத்துன் வைகுந்தத் தெம்மை யிருத்தல் வேண்டுது

இன்ன வண்ண மிருந்தவத்தி னிருக்குந் தருக்கின் முனிவ
ரெலாம், பன்ன வண்ண லெம்பெருமான் பனவர் வேதப் பொரு
ளிருந்தோ, னென்ன வெண்ணி நீர்முயன்ற தியாதே யாகவொ
ருங்குரைமின், சொன்ன வண்ணந் தருதுமெனத் தொழுது
[முனிவரீ துரைப்பார். ௯

நுவலற் கியலாப் பேரின்ப நுனித்தே யிழைத்தே மதுதந்தில்
வவலின்பொய்கையருகுற்றோரன்பிற்படிந்தோரவர்க்கண்டோர்
தவலி னுவ திதன்பெயரைச்சாற்றினோர்தம்பவங்கடிந்து
கவலைபோக்கிப் பெரும்பேறு கைக்கொண்மாறு கரைகென்ன.

பணில நேமி பயிறடக்கைப் பரம மூர்த்தி யகமகிழ்ந்து
தணிவி லுங்கள் மனப்படியே தந்தோம் வரங்கள் படிந்தோர்தம்
பிணிமுற் றொருவு மிவ்விலஞ்சி பிறங்க நுங்கள் பெயராலென்
றணிகொ ணந்தி யாலருத்த மாலந் தன்னை யணுகினான். ௧௧

முனிவர் தொடலான் முனிதீர்த்த மெனும்பேர் பெற்றவப்பூழி
கனிவிற் படிந்து களப்பாளெங் கருணைக் கொண்டல்பதம்பணிந்
தோர், பனிசெய் மூவேழ் பிறப்பொருவிப் பளகிலாது வைகுந்
தத், தனியன் படிவந் தாமேவிச் சார்ந்து வாழ்வா ராவயினே.

முனிதீர்த்தசருக்கம் முற்றிற்று.

ஆ. செய்யுள்—௧௮௮.

---

## ஏழாவது கயேந்திரவரதச்சருக்கம்.

---

திருந்தும் பரிமே தமோர்நூற் றினைச் செய்து சேண்மேற்
பொருந்தும்பர் தன்பொன் னடித்தாமரை போற்றி செய்யப்
பருந்தும் பலவும் படர்வச்சிர மங்கை பற்றி
யிருந்தும்பர் நாடு தனியாட்சிகொ ளேற்ற மிக்கான். ௧

கழிவா யொருங்கு செழுந்தாமரைக் காடு பூத்தாங்
கொழியா வுடலெங் கணுமேவி யொளிர்ந்து தோன்றும்
விழியா யிரத்தா னிமையாதயி ராணி மேனி
வழியா ரழகுண் டௌமோகையின் வைக மன்னோ. ௨

முன்மந் திரியோ தியதெய்வமில் கொள்கை முன்னி
நன்மந் திரமாக் கினனென்னலந் நங்கை புல்லுங்
கன்மந் திரிவின் றியற்றும்பல் கரண மெல்லாந்
தன்மந் திரமா ருளத்துள்ளித் தழைக்க நெஞ்சம். ௩

வெப்பத் துறுசெந் தழலித்தரை வேள்வி மாட்டே
துய்ப்பக் கொடுத்த வவிதந்தன துய்த்து வப்பச்
செப்பத் திகழ்சே வடித்தாமரை சேக்கு மாறு
முப்பத்து மூன்று வகைத்தேவர் முடியி றைஞ்ச. ௪

மானார் விழியாள் சசியின்சொன் மகிழ்ந்து நாப்பட்
டானு தரத்தி னிடைதாழ்ப்புழித் தைய னல்லார்
கானார் குழலா ரரமங்கையர் கண்டு பாங்கர்த்
தேனார் சுவையின் னிசைபாடிச் செவிநி றைப்ப. ௫

நினைக்கப் படுவ தெவனென்றய னின்று பைம்பூ
நனைக்கப் படுகற் பகநல்லிசை புல்லு சேதாத்
தனக்கொப் பறுமா மணியாதி தணப்பி லாத
வினைக்கொத் துதவி முறையேவிளம் பேவல் கேட்ப. ௬

கிருதா சியுருப் பசிமேனகை கேழ்கொ ளட்போ
வருதா சியுருப் பசியாடக மானு நீரார்
பெரிதாசை யோங்கப் பிறழ்மங்கல மெட்டு மேந்தி
யொருகார் வரைப்பாங் குறுமஞ்ஞையி னேகை பொங்க. ௭

வாள்விச் சையர்தா னவர்சித்த ரியக்கர் மன்னும்
வேள்விச் சையறிந் திடுகந்தரு வத்தர் வேதக்
கேள்விச் சையமா தவர்கின்னர ராதி யானோர்
நீள்விச் சையினேத்தி நிரந்தனர் பாங்கர் நிற்ப. ௮

தன்பாற் புகழெங்கு மிடைந்து தழைந்த தென்ன
நன்பாற் சுதைநா டுபொங்கி வழிந்த தென்ன
மின்பாற் கொளுநுண் ணுசுப்பாரிரு பாலு மேய
பொன்பாவு காழ்பற் றினர்சாமரை போந்தி ரட்ட. ௯

கலைமுற்று நிரம்புழி யீண்டிக் கணங்கொ டேவர்
நிலைமுற்ற வருந்துதல் காரண மாக நேடி
யலைமுற் றியவெண் மதியுச்சி யடைந்த வாபோற்
றலைமுற்று கொற்றத் தனிவெண்குடை மேனி ழற்ற. ௧௦

பைம்பொன் னிரந்து சுடர்பாயும்வை குந்த நாப்பட்
செம்பொன்கொள் கோட்டத் திருமாமணி மண்ட பத்தி

லம்பொற் றவிசிற் பெருமானிருந் தாங்கு மன்னோ
வும்பர் பெருமா னொளிர்கட்டிலின் வீற்றி ருந்தான். ௧௧

அவ்வேலை யிற்கந் தருவக்குழாத் தாடலோடு
செவ்வே யுறுபாட லிலக்கணந் தேர்ந்து மேயா
ரெவ்வே லையினும் புருகூதன் மகிழ்ச்சி யெய்த
வெவ்வேறு பயிற்றுபு பாயிரம் பெற்று மிக்கார். ௧௨

ஆனாத காட்சி யிருகந்தரு வத்த ரன்னார்
மானார்க ளோடு விசும்புக்கிறை யாகி வைகுந்
தேனா றருங்கற் பகத்தாரினன் செப்பு மாற்றால்
வானா ரிசைசேர் நடமாடல் வகுத்தல் செய்தார். ௧௩

கையா ழிசையு மிடற்றுக்கனி பாட லுந்தம்
மெய்யார் குறிப்பும் பிறழாது வியப்ப நாட்ட
மையூர்தி யுள்ள மகிழ்ந்தும்மில் விழைந்த வெல்லா
மெய்யாது சொன்மி னவைவீதுமிங் கென்று சொற்றான். ௧௪

கடன்ஞால நாப்பட் கணத்தோடு களிப்பி னெய்தி
மடலார் பொழிலி னுகர்வாதி மகிழ்ந்து தேக்கி
யடல்வே லிறைவ விவண்மீள வறைதி யென்னத்
தடவாள் வயிரத் தவனின்னது சாற்று வானால். ௧௫

ஞாலந் தனின்மிக் கதுசெம்பிய னாடந் நாட்டி
னாலும் படியே கினிசேரலவ னாய்த வத்தோர்
மாலொண் பதநாடி யியங்குநர் சீற்றம் வாயா
தேனுந் தரத்திற் செறிகிற்றி ரெனவி டுத்தான். ௧௬

சொற்கொண்டு சேணீத் தனர்துய்க்கு மிடம்பெ றாதார்
விற்கொண்ட திண்டோள் வளவன்றிரு மேய நாட்டுண்
மற்கொண்ட ராசேந் திரசோழ வளங்கொ ணாட்டிற்
கற்கும் புறமார் கரம்பைத்திரு நாடு புக்கார். ௧௭

வேளாண் குலத்துக் களப்பாள னெனவி ளம்பு
தாளாண்மை மிக்கான் றனதாட்சியிற் றன்பெ யர்த்தாய்
நீளா தரத்தெம் பெருமானிலை நின்ற மூதூர்
நாளார் மலர்ச்சோலையைக்கண்டதி னண்ணி னாரால். ௧௮

[வேறு.] நறுமணம் விரிவன நகைமல ரிலஞ்சி
நிறைமது வொழுகுவ நிரையிதழ் நறவங்
குறுநகை புரிவன குளிரிணர் மௌவல்
செறிமிகு குரறுவ திகழ்தரு குரவே. ககூ

சிறியவர் திருவுறு தகையன வடைதீர்
நறுநிழ லொருவுப நளிவன வொருசார்
குறுநகை யவர்வடி விதுவெனல் கொளமேவ
முறிபல மிடைவன முகிழ்படு செயலை. உ0

கடல்வண் ணடியவர் கருணைசெய் திடனு
முடனுறு பவமற வுயரறி வடைவே
யடைபவ ரெனமதி நுதலவ ரயினேக்
கிடமலர் விரிவன விடைபடு திலகம். உக

மிடைதரு மவர்நகை மிகவமை தொழிலுக்
குடையவின் மதனடு படையொடு முறுமுன்
றுடையறு சரநணி தருவது கருதா
விடையற மலர்வன விணர்படு கறுமா. உஉ

நகையினு முகையினுந தகைவினு நயனில்
வசையினு மிசையினு மகிழ்நருக் குதவும்
பசையுறு முதவியெம் வயிற்பரிந் தருணு
மிசைபெரி தெனப்பொழி லெழின்முக மலர்வ. உங

மனைமகள் கவலுற வரைவறு மகளிர்
புனைநல மிடலவர் நுகர்வது பொருவு
நனைவிரி பொழிலொடு குயிலின நயவா
வினைதர மயிலின மிடையற நுகர்வே. உச

மிசைபடு குயிலொடு மிடைசினை தழையா
விசையறு மயிலடி முடியன வெழிலார்
நசையறு பவர்நல னுகர்மக னணுகிப்
பசையுறு பவளடி படிதரல் பொருவும். உரு

வேறு.

அப்பெருஞ் சோலை நோக்கி யதிசயித் திதுநாள் காறு
மிப்பெரும் பொழிலை யொப்ப தியாண்டுநாங் காணே மென்னச்

செப்பிளங் கொங்கைமாருஞ் செல்வரு மிடைந்து புக்குக்
கைப்பொலி மலராற் சோலைக் கட்பொலி மலர்கொய் குற்றார்.

புரியவிழ் போது கொய்வான் பொன்னனார் செங்கை நீட்ட
வரியணி கச்சு விம்மி வளர்கொங்கை நெருங்க நோக்கிப் [ன்
பெரிதுளந் தலையுங் கேள்வர் பிறங்கற்றோ ளிவர்ந்து கொண்மி
பரியமீ ரென்னத் தாழ்ந்து பற்றின ரேந்தி நிற்பார். உஎ

அம்மலர்க் கைகள் கட்டி யணிமலர் குறுங்கா லந்தச்
செம்மலர் கொழுதும் வண்டா செறிமலர்க் காந்த ளென்றக்
கைமலர் பாய்ந்து மீள்வ கருங்கொண்டல் சமய மல்லாப்
பொய்ம்மலி பிறபாற் புக்கு மீள்வுறு மறிஞர் போன்றே. உஅ

ஏனுறு நறும்பூக் குற்றுய்த் திகந்திடப் பட்ட கொம்பர்
தோணல முண்டு நீத்த தோகையர் போன்ற வோங்கி
யானுறப் பூத்துக் கைக்கு வயப்படாக் கொம்பர் கேள்வர்
சேணுறு காலை நன்மைப் பட்டசே யிழையர் போன்ற. உகூ

பருமணி யிமைக்குஞ் செம்பொற் பைந்தொடிப் பாவை மாருங்
குருமணி யிமைக்குந் திண்டோட் குமரருங் காவு கூடி
விரிமலர் கொய்து சூடி மீண்டும் வேலை புக்கா
னெரிகதிர்ப் பருதிச் செஞ்சூட் டிரவிமேற் றிசைக்க ணன்றே.

மின்னுறை மருங்கு லார்த மென்குழற் கவிர்பூ வேய்ந்து
கன்னிறை திண்டோண் மைந்தர் கைசெயக் கண்ட வெய்யோ
னன்னவின் மாதர் கூந்தற் கவிருமி னனைய பல்வித்
துன்னின னணிவ லென்னாத் துணிவின்மேல் வேலை புக்கான்.

அடியவர்க் கருள்கூ ராழி யங்கையான் றன்னை யேந்தி
நெடிதியல் கலுழ னன்பர்க் களிப்பது நெறியாக் கொண்டு
கடிதுமேற் றிசைக்கண் வந்த காட்சியே யொப்ப வொல்லா
மடிவில்வல் லிருண்மேற் கொண்டு மாலைவந் திறுத்த தன்றே.

மஞ்சுதோய் சோலை யீனும் வான்றளிர்ப் படலை யெல்லாஞ்
செஞ்செவே யாக வூடல் செறிந்தழிக் காளை யன்னா
ரஞ்சொலார் முடிவீழ்ந் தாற்ற வவர்சினந் தணக்குந் தோறும்
பஞ்சிதோய் தஞ்சி மேயப்பப் பரந்தது செக்க ரம்மா. ௩௩

முன்றெங்கும் பரந்த செக்கர் முறைமுறை கரப்ப ஞாலம்
வந்தெங்கு மிருண்மிக் கார்ந்து மன்னுயிர் விழியிற் செம்மிச்
சிந்தும்பல் சமயம் பேணித் தெளிதரா வறிவு மாழ்கி
யைந்தங்கம் பெறாதார் நெஞ்ச மாமெனக் கதுவிற் றன்றே. ௫௪

சோலைகள் வறிய வாகத் தோகைய ரோடு மீண்டிச்
சாலநன் மலர்க ளெல்லாந் தப்பறக் குற்றும் பற்றுப்
பாலவென் றுணர்ந்து சேண்மேற் கற்பக முதவும் பல்பூப்
போலவின் னொருங்கு பூத்த பொருவறு மீன்க ளெல்லாம். ௫௫

ஏதொன்று செஞ்சொ லாருந் திண்டிறன் மைந்தர் தாமு
மானின்ற மதனப் போரின் மலிதரல் காணு மாசை
தானின்று பிடர்கொட் டுந்தத் தண்மதி யதனைக் காட்டான்
வாளொன்றி யுதயஞ் செய்தான் மானமேன் மலையின் பாலான்.

கல்வியே சிறிதுந் தேராக் கயவர்த முள்ளம் போலப்
பல்கிய மங்குல் சான்றோர் பரிந்தருள் பாலித் தன்பா
னல்கிய மதிமே லோங்க நவையொரீஇ மடிந்தாங் கும்பர்
மல்கிய மதிமே லோங்க மென்மெல மாய்ந்த தன்றே. ௫௭

வளரிரு கோட்டுப் பொன்னி மலிர்நிறை நீத்தம் பாயக்
கிளர்திரு கூழி னும்ப ரிவ நிலாக் கொழுமிப் பாயத்
தளரிடை மாதர் மைந்தர் தணப்பருங் காத லோங்க
வளரொரு மடுத்திட் டன்ன நறவுணு மூற்ற மிக்கார். ௫௮

மறைபயில் வேள்வி வேட்டு மாந்திடு சோம பான
முறைமையிற் குமர ரோடு மொய்குழ லார்கள் காமத்
துறைபடு வேள்வி வேட்டுத் துய்க்குநர் மாறி மாறி
நறைநுகர்ந் தந்த ணாளர் செயலிடை நாட்டு கின்றார். ௫௯

நுதுப்பருங் காமத் தீக்கு நொடைமைசெய் மதுவை வாக்கி
விதுப்புமிக் கெய்த வின்ப வெள்ளத்திற் கிடைகொள் கிற்பார்
மதித்தெழு வேள்வித் தீயின் மலிரவா வுதிநெய் வார்த்துப்
பதித்தபே ரின்பின் வைகும் பனவரைப் பொருவு கின்றார். ௬0

நறவெனும் பண்டங் கொண்டு நாமநீர் வெள்ளக் காமச்
செறிகடல் கடக்க வோடித் தீர்வருங் காணத் தீவத்

துறைதொறும் புகுந்தாண் டின்பத் தொகுபொரு ளினிதினீட்டி
யுறைதர மீள்வா கூல வாணிகச் சாத்து மொத்தார். சுச

வள்ளத்தில் வாக்கி யூக்கா மதுவினை மகிழ்ந்து தேக்கி
வெள்ளத்திற் பெரிய காம வேலையிற் கிடக்கிற பரோ
டுள்ளத்தை யேதின் மாத ருழைவிடுத் துரறி யோடுங்
கள்ளத்தைக் கண்டு துள்ளிக் கறுவுகொள் வாருஞ சில்லோர.

மெயதரு கலவி நாபபண் லெனுசமந் தொலைந்தார்ப் பற்றி
நெய்தலைப் பெய்து செங்கை பிற்கொளீஇ நிணக்கு மாறே
பை தரு குஞ்சி பாதத் தலததக மருவத் தாராற்
கைதகப் பிணித்து மாதா காளையர் தோல்வி காண்பார. சரு

இவ்வழி யாழின் வல்லா யாவரு மின்ப மென்னும
பவ்வநன் மகர வேலை படிந்தன ரிறுதி காணு
ரவ்வழி நிகழும் வேலை யறிஞரைப் பழிமேல் வைத்தான்
வெவ்வழி நிகர்ப்பக் கங்குன் மென்மெல வொடுங்கிற் றன்றே

எரித்தெழு செல்வன் வைப்பென் றிரவெனு மாதைச் சேரா
வருத்தியி னின்ப மார்ந்திட் டகல்வுழிக் காளை யன்று
ருரிப்பொரு ளொருங்கு வாங்கி மென்மெல வொருவும் வஞ்சப்
பரத்தையர் போலக் கங்குல் பயப்பய வகன்ற தன்றே. சுகு

மன்னுயி ரனைத்தும் வஞ்ச வல்லிருண் மன்னன் வெங்கோற்
கின்னுயி ரஞ்சி யாண்டு மியங்கில வொடுங்கி மாழ்க
லுன்னினன் பிறிதொன் றுள்ளா னுடன்றிகல் கலக்கி ஞால[ன்
னன்னிலைப் படுத்த வேண்டி நளிந்துகுன் றிவர்ந்தான் வெய்யோ

ஓடரிக் கருங்கண் மாத ரூடினா புலந்து போக
லூடலுக் கிறுதி காணு ரொள்ளிழை யணங்க னுரைக்
கூடின ரின்பந் துய்த்தார் கூடலு முடிவு காணூர்
பாடெரி சுடர வெய்ய பருதிவந் ததனைக் கண்டார். சஎ

விண்ணெனுந் தடத்துப் பன்மீன் மென்னலா ரினிது சூழத்
தண்ணெனும் பனிநீர் வீசிப் புனல்விளை யாட்டிற் றாழ்ந்த
வெண்ணிற மதிகிழ்த் திக்கில் வெய்யவன் றோன்றக் கண்டு
அண்ணென வெள்கித் தோன்று தொடங்கிய நீட்டத் தோடும்.

குன்றெனப் பொலிந்த திண்டோட் குமரருங் கோதை மாருங்
கன்றலில் கலவி வெள்ளக் கடல்கடந் தரிதி னேறி
யன்றுபோற் பன்னா ளின்பி னார்ந்துழி வைகலொன்றிற் [ன்றார்.
றுன்றுநீர் விளையாட் டெண்ணிக் குழாத்தொடுந் தொடர்ந்துசெ

பானிற வன்ன மென்னப் பாய்புலிக் குழாங்க ளென்ன
மானிறப் பிடிக ளென்ன வயக்களிற் றீட்ட மென்னக்
கானிவர் மஞ்ஞை யென்னக் கடுஞ்சின வேற்றை யென்ன
மேனவில் யாழ்வல் லீட்ட மென்மெல நடந்த வன்றே. ரு0

ஆடுமெடுத் தாடி நின்றோன் குலத்திற்கு வடமேல் பாலாற்
றொடைகளோ ரைந்தின் வீழ்ச்சித தூயநற் புலத்த தந்நாட்
டடநெடும் பாலின் வேலை தமியனைத் தணவா வன்பிற்
கெடலரும் பொய்கை யாகிக் கெழுமிய தனைய தொன்றே. ருக

கோடெலாஞ் சந்தச் சோலை குறையெலா நாவி வாச
மாடெலாம் பளிங்கிற் செய்த மண்டப மருங்கு சூழ்ந்த
காடெலா மௌவ லேனோர் கருதலாம் படிய தோவன்
றாடெலாங் கமல மன்ன தடத்திடை யுவந்து புக்கார். ருஉ

குவளைவா ணெடுங்க ணாகக் குமுதமே வாயாக் கஞ்சந்
திவளொளி முகமாப் பாசி செறிகுழ லாக வள்ளை
செவிகளா வுறுப்பெ லாந்தான் பிறகொடு தெரிவை மாரை
யுவகையி னெதிர்கோ ளெண்ணி யுற்றது பூந்தண் பொய்கை.

நரந்தமேங் கமழு மேனிக் கின்னரர் நளிந்து புக்குப்
பரந்தபே ரமலை கேட்டுப் பதம்பெயர்த் திடுத லாற்று
வரந்தையே படைத்த வன்ன மவர்நடைக் கறவுந் தோற்று
விரைந்துதீப் புகுந்தாங் கந்தா மரைமலர் வெருவிப் பாயும். ருச

ஒப்புமை சிறிது தம்மை யொத்தெதிர் கொண்ட நன்றிக்
கப்பெருந் தடமா மங்கைக் கருநறை குறையென் றெண்ணி
மெய்ப்படு கலவை நாவி வியன்புழு கெனைத்தும் வாங்கித்
தப்பற வுய்த்திட் டாரத் தாழ்குழற் றைய னல்லார் ருரு

மலையெடுத் தனைய கொங்கை மாதரார் முகமுங் கண்ணும்
மலையுடைத் தறிந்து யாங்க ரவிர்மலர்க் கஞ்ச நீல

நிலையெடுத் தலர்ந்தெ னெவ்வா நீர்மையீர் வெள்கி லாதீர்
தலையெடுப் பென்னை யென்று தாழ்ப்பன கருணை பாரா. ௫௬

குவிதரு கொங்கை மாதர் குடைந்தன ராடும் போழ்தி
லவிர்முக மழுந்துந் தோறு மலைபட வமிழ்ந்துங் கஞ்சஞ்
சவியினா னிகர்த்து நட்ட தன்மையாற் சாயும் போது
முவகையி னுற்றோர்க் குற்ற துறுவரோ யறிவின் மேலோர். ௫௭

காவியைக் கயலை வேலைக் கடிந்தகண் ணணங்கே யன்னா
ராவியை யனையர் தம்மோ டாடின ரலங்கற் றெண்ணீர்
வாவியைத் தம்போ லாக்கி மகிழ்ந்துழிப் பட்ட தொன்று
நாவிடை நவலல் சாலா நவையுரை நடைநின் றன்றே. ௫௮

வேறு.

முடியாவுல கொருமூவகை முறையேகடை நாளின்
மடியாவரு சுடர்கால்வது மனம்வேவது கருதி
னிடியார்கட லிடைமேலுள திடைநாளினி லனைய
கொடியாரழ லுருவாகிய கொடுமாமுனி யுடையான். ௫௯

மிறைபட்டெழு துறைமுட்டிய மிடன்மட்டிட வுடலா
நறைபட்டெழு படலைத்தொடை நவைபட்டது கருதாக்
குறைபட்டற வொழியத்திறல் குமையப்பெரு மலையின்
சிறைகட்டவன் வறுமைப்பட வுரைசெப்பிய திறலோன். ௬௰

காயத்திரி யாமேதிரி கடுங்காம நடுங்கக்
காயத்திரி யாமாதிரி கானத்தவ னருள்வான்
காயத்திரி மூர்த்திப்பெருங் கடவுட்டொகை நிகர்வான்
காயத்திரி முதனன்மறை கரைநாவொடு புரைவான். ௬௧

முளரிப்பதி முதியோன்முதன் முதற்றேவரை மதியான்
விளரித்திரு மொழியார்மயல் வெஃகாச்செய லஃகான்
களரிப்பதி யுறைவோ னுரு வாசன்னெனக் கழறுங்
கிளரிப்பெய ருடையானனி கெழுமாதவக் குழுவோன். ௬௨

தன்னிற்றவ வலியிற்செறி பவர்பற்பலர் தழுவ
மின்னிற்றிகழ் சடிலத்தொகை வீழொப்பன தாழப்
பன்னிப்பல மறைசந்தைகள் பயிலும்மொலி குழும
முன்னிக்கவு சிகநற்புன் முடிக்கற்றையை படிய. ௬௩

தோளிற்பொலி பணிலக்குறி சுடராழியின் குறியு
நாளிற்பொலி வெண்டாமரை நகுமாறிரு நாமக்
கேளிற் பொலி மண்காப்பொடு கிளர்வுற்றுவிண் சுடருந்
தாளிற் பொலி தவனன்றலை யிகழ்மாறு தகைப்ப ௬௪

எத்தேவரு முடியால்வரு டெந்தாளிணை யிறையோர்
முத்தேவரின் முதற்றேவென முதுநான்மறை நுவலு
நத்தேவரு கைத்தேமனு நாராயண நமவென்
றொத்தேவரு முளத்தோகையி னேவாவுரை தாவ. ௬௫

தளணிற்றலை மிசையிற்செழுங் கரனிற்கமழ் குரல
துளவத்திரு மணிக்கோவையுந் தொகுவெண்மரை மணியி
னளவிற்படு திருக்கோவையு மணமவுற்றன கனல
வுளதத்துவ நெறியுற்றுள முவகைக்கடல் படிய. ௬௬

கதிர்நண்பகல் மிசைசேக்குமக் காலைத்தன குழுவோ
டெதிர்தண்புன லாவிக்கரை யெய்தாவவண் வெய்தா
முதிர்தங்கிளை மொய்ப்பப்புனல் விளையாட்டயர் முயக்கிற்
பிதிர்கொங்கையர் தம்மோடவர் பெயராநிலை கண்டான். ௬௭

தன்பான்மறை பயின்மாணியர் தம்வாய்மொழி நெறியே
யன்பாலிவ ணகல்வீர்புன லாடுஞ்செய லொருவி
யென்பார்முனம் வெகுளாவிடை நகையாநனி யிகவா
வன்பாலிவண் மருவீர்விரைந் தகல்வீரென வகுப்பார். ௬௮

நங்கோடிக ளுக்கஞ்சிறி தேனும்மதி நாடீர்
வெங்கோபமொ டுரையாடுதிர் மிகைபட்டுளி ரந்தோ
விங்கோகையின் யாமாடுமி டத்தெய்தலி ரென்றார்
சங்கோலிடு கையார்நசை தணவாதகந் தருவா. ௬௯

வேறு.

அடுத்திவ் வாறவர் நுவலலு மருநதவ னுள்ளங்
கடுத்தெ ழுந்தது காலவெந் தீயினு முமமை
தொடுத்த சீற்றமத் தீயினு லுடறுணுக் குற்று
விடுத்தகன் றனன் வெங்கதிர்ச் செம்மல்விண் ணகமே. ௭௰

குலகு லைந்தது கூற்றமு மாற்றமொன் றுரையா
தலகு லைந்தன வறமது மந்தரத் தவர்தந்

நிலைகு லைந்தனர் வெட்டுயிர்ப் பெறிந்தனர் முதல்வ
னிலகு மித்திரை படிந்துவ ரிசைப்பதின் செவலும். எக

திசைதி ரிந்திடச் செறியும்விண் மீனினுஞ் சிதறி
நசைதி ரிந்தகன் ஞாலமேற் பரம்பிட நவைதீர்
மிசைதி ரிந்திடு கோளினங் கரந்திட வெருளார்
விசைதி ரிந்தவக் கின்னரத் தலைவரை யியம்பும். எஉ

அரமபு செய்தவா தம்மிக லவாகளல் லாப்ப
நிரம்பு துன்பிடை நிலைப்பது திண்ணறும மகவான்
பரமபு மாக்கமென் சினத்திறுற் பட்டது மவன்மெய்,
வரம்பில் பெண்குறி ப்ண்டுபெற் றதுமறந் தனிர்கொல் எங

ஒடிவில காமமொன றாறறநகொண் டுளங்கவற றுறமே
னெடிய ஞானமுங கல்வியும வாய்மையு நெறியிற்
படியு நீர்மையு முறைமையும பயிலுமற் றெனைதது
மடியும வேரற வோகொண்டு மடிவளாந திடுமால எச

ஆய காமமற் றெவற்றையு மறிகிலா ததன்மேன்
மேய வோபொரு ளுளதெனக் கருதுமோ விளம்பிற
றீய யாவையு மகட்டிடைச சேரமற் றுயிர்த்துத்
தாயி னன்பொடு வளாத்திடுந துணைப்பிலன் னதுவே.' எரு

அனைய துமமையிங் கடாததலா லறிவிலீ ரகலீர்
துனைவின் வந்தெதிர் சுளிப்பொடு தோன்றுவ புசன்றீ
ரினையும் வெங்களிற் றுருவொடு மிடங்கரின் வடிவு
முனைகு மாத்தொடு பெற்றுநீர் முயங்குதி ரென்றான் எசு

இண்டை சேக்குமம் மகனினு மேற்றஞ்சா லொருவன்
கொண்ட சீற்றத்திற் கூறிய கொடுமொழி யோடி
யுண்ட காமந்தன் றலையெடா வாறுறுத் தடக்கி
விண்டொ டுங்கிய விதலையை யோம்பிய தன்றே. எஎ

கள்ளக் கூற்றின்கைப் பாசத்தைக் கடுக்குமக் கடுஞ்சொ
லுள்ளத் தூடுசென் றான்றிய திமைப்பின்மே லோங்கித்
தள்ளச் சத்திலுக் கடங்கினர் பின்வரத் தண்ப்பில்
வெள்ளச் செய்கையான் பதத்திடை வீழ்த்திய தன்றே.

கரக்கு மச்சமேற் கதுவவீழ்ந் திருகழற் போதிற்
புரத்தி யென்றசொற் பிணிப்புறப் பொருசினத் தோடு
மிரக்க மென்பதொன் றிடையெழுந் திகனெடி தாற்றிப்
பரக்க வென்றதைச் சிறையிடைப் படுத்திய தன்றே. எகூ

சீற்றம் யாப்புறப் பின்சென்ற செழுமன மடங்கி
யாற்றல் சானறநல் லிரக்கமே யருந்துணை யாக்கொண்
டேற்ற நோக்கிய வின்மொழி யிடையெழ முனிவன்
பாற்றி லாதவக் கின்னரர் தலைமயன்பிற் பகரும். அ0

இசைக்க லாதன வலத்தலா னெழுந்தவெங் கதத்தின்
மிசைக்க லாமன மேயினிர் விறந்தடி பூணு
வசிக்க லாயநும் மின்மொழிக் கிணங்கிய வகைத்தா
னசைக்க லாதொன்றிற் புணருமே நானிலத் துயிர்கள். அக

அங்ஙனாயினும் புலத்துற வறைந்தவெஞ் சாப
மெங்ஙன் மாற்றுவ தொல்லுநும் வேய்வையா னெய்திற்
றிங்ங னீயிர்பட் டாயிரம் பருவமீண் டிகத்தந்
துங்ங னாயதண் புனலிடை யிகன்றுபோ ருடற்றி. அஉ

கராங்க ளிற்றினைக் கதுவலுங் கவன்றுகை யாழி
யராவ ணைத்துயி லாதியை யழைப்பவன் றவனால்
விராவு நும்பெருஞ் சாவமாங் கொருவழி வெருவ
வொராவி ருந்தநும் பதிப்பெயர்ந் தீமென வுரைத்தான்.

கல்வி நன்னலஞ் சான்றவன் கறுத்துளங் கரைந்த
சொல்வி திர்ப்புறு மங்கதந் தோய்ந்தவன் குடிப்பூஞ்
செல்வி யேகலுஞ் சேட்டைவந் துற்றவா சாபம்
வல்வி ரைந்துற வடிவுபோய் வந்தமற் றவையே. அச

கறைபி ழம்பிய கருணிறக் களிறெனக் கயத்துச்
செறியெ யிற்றின கராமெனச் சேர்ந்தகந் தருவர்
நிறைகு ழாத்தொடு மேவலு நின்றமா தவனத்
துறைபு குந்தன னடித்தன் சூழலிற் புக்கான். அ௫

கடங்க லுழ்ந்திழி களிற்றுரு வாயகந் தருவ
னடங்கு வன்பெருங் கிளையொடவ் வடவியிற் புகலு

மிடங்க ராகிய கின்னரர் குழாத்தினுக் கிறையத்
தடம்பு குந்தறி வொரீஇயதாற் றருக்கியாண் டெய்த.

வேறு

கடாநி லாவு மான யானை கான மூடு லாவியே
விடா வெருவி ராவு மாளி யாதி யாக மேவெலா
மடாவொ ராமை காண வோடி யாவி காவ னாடியே
படாத வேறு கான மூடு பாறி யேக லாயவே. ௮௭

குலங்கொ டந்தி யின்பெ ருங்கு ழாந்த லைப்பெய் தின்பழுற்
றலங்க மோதி நீண்ம ரந்த றைப்ப டுத்த டர்த்துமிக்
கிலங்கு கோட ழுத்தி நேரெ திர்ந்த குன்று மோதுபு
விலங்கு மண்ணும் விண்ணு மெய்வி திர்த்தி டப்பி ளிற்றுமே.

நீடு பொற்றை பல்ல வுந்தி ரந்த நீல வெற்பெனப்
பீடு பற்று வன்பி டிக்கு ழாம்பி றங்க நாப்பண்வன்
கோடு துற்ற டங்க வானி லங்கு கோடு கவ்வியாங்
கீடு பெற்றி லங்க வங்க ணின்பின் வைக லாயதே. ௮௯

ஒருங்கு நாறு மத்த டத்தொ ளிர்ந்து மல்கு தாமரை
மருங்கு நாடொ றுங்கொய் தெங்கள் வள்ள லாழி யங்கையா
னிருங்க னாறு பூங்க ழற்கி யைந்த பூசை செய்யுமா
கருங்கை வேழ முன்னை யூழ்க லப்ப வாற்று நீரதே. ௯௦

கமழ்ந்து டங்க லர்ந்து வண்டர் கண்டு தங்க ணங்களோ
டிமிர்ந்து வந்து தங்கு கஞ்ச மெஞ்ச லின்று றுந்தடத்
தமிழ்ந்தி யங்கு கின்ற தின்ற டங்க வுங்க லங்கிடச்
சமைந்த தன்கு லங்க டுன்றி டங்கர் தங்கு கின்றதே. ௯௧

பால டுத்த யாவை யேனும் பற்றி யீர்த்தொ றுத்துநீள்
வாலெ டுத்த டித்து மெய்வ கிர்ந்து வீசி வாய்மடா
மேல டுத்த காலை வெய்யின் மெய்யி லெய்த வீட்டமோ
டாலு முற்ற நற்ற டத்த விர்ந்த கோடு மீதரோ. ௯௨

கதத்தி னாற்ற வத்தி னான்க டிந்து சொற்ற வாய்மையே
மதக்கைம் மாவும் வெங்க ராவு மாகி முன்வ குத்தவா
றதர்ப்ப டாவொ ராயி ரத்தி னாய வாண்டு மங்கணிவ்
விதத்து லாய காலை யஃது வீடு நாண்ம லிந்ததே. ௯௩

ஊழி முற்று காறும் வேலை யூற்ற முள்ள டங்கல்போ
லாழி யான டிக்க ணன்ப ரூற்ற லஞ்சொன் முன்றொகா
வாழி வீடு காலை வல்லை வன்க ராவு ளம்புகூஉக்
காழி னெஞ்சொ றுப்ப வஃது கண்ணு மின்ன வாறரோ. கூச

நந்த டத்து வைக றேறு நாறு பூக்கு றும்படி
வந்த டத்து முஞ்செ யற்கண் மல்கி யல்கி யஃகிலா
துய்ந்தி டற்கி லாத வாறு மூக்கி யேகு நீரவத்
தந்தி கட்கு நாத னைச்ச வட்டி யுண்ப ஞனொ. கூரு

எண்ணி மன்ன வன்ன காலை யேதில் கான நாடியே
நண்ணு தன்ம னைப்பி டிக்கு லத்தி னன்ன லந்தழீஇ
மண்ண வெண்ணி யாமபல் பல்ல வன்பி ஞேடு பின்வரக்
கண்ணி லூழ்வ லிப்ப வக்க யக்கண் யானை வந்ததால். கூசா

ஞால மோர டிக்கு ளிட்ட நாதர் பாத பூசனைக்
கானு நீர்த்த டத்து மண்ணி யம்பு யங்கள் கொய்யநீள்
கூல மேற்பி டிக்க ணங்கு லாயு லாவி நிற்புழிச்
சால நீடு பொய்கை யிற்ற மூங்கு தந்தி புக்கதே. கூஎ

விஞ்சு மஞ்சு ளங்கொ டந்தி மென்ற டம்பு கும்பொழு
தஞ்சி யங்க கன்றி டைந்த மூங்கி டங்கர் பொங்கியே
நஞ்சி னுங்க டுஞ்சி னந்தெ கிழ்ந்து நந்தி யந்தில்வந்
தெஞ்சி யும்ப லங்க ணொந்தி னைந்து யங்க மண்டியே. கூஅ

தந்தி தாளி லொன்றினைச் சலத்தி ஞேடு பற்றிமற்
றந்தி லத்த டத்தி ழுப்ப வஞ்சி லாம லும்பலீ
தெந்து நம்மை யீர்ப்ப தென்றி கன்று கூல மேறுவா
னுந்த விட்டி லாது மூடர் செய்கை யொத்தி டங்கரே. கூகூ

மெய்ம்ம டுப்பு டன்ப டாது வெங்க ராவ கைப்புறக்
கைம்ம டுத்த கட்டி டைக்க டிந்து வாங்க வஃகிலா
திம்மெ னத்தெ ழித்தெ யிற்றி னங்க ளென்பி லேறுமா
றம்ம மிக்க மூந்த வூன்றி யாங்கு வாங்க லாயதே க00

வுரையி ருந்த வொக்கும் வன்பி டிக்க ணஞ்செ விக்கொள
வுரையி றந்த பூச லிட்டு ரப்ப வன்ன தோர்ந்தெலா

நிரையி ருந்து கைக ணீட்டி நீள்க ரைக்க ணேறுமா
கரையி ருந்து பற்றி மேல்வ லித்த வக்க ளிற்றினை. ௧0௧

களிறொ ராயி ரத்தின் மொய்ம்பு பெற்ற வக்க ராவலிக்
கெளிவ ராவு டைந்து சாம்பி யீர்த்த வன்பி டிக்குழாம
பிளிறி யோட நீடு நாட்பெ ருஞ்ச மஞ்செய் தநதியுந்
தளர்வு மேவி யங்க நொந்து தாள்வி திர்த்து யங்குமே. ௧0௨

வேறு.

மைம்மேனிசாலநலிவுற்றினைநது மதிசோர்ந்துசோர்ந்துவலியுங்
கைம்மீ தெடுத்தெவ் வுயிரும் புரக்கு மருளாழி யானகடவு
ளம்மா னெனுவி துயர்வே ணிடங்க ரட லஞ்சி னேனை யருளா
யெம்மாதி மூல முடையா யளித்தி யெனவேயழைத்து மெலியா

எந்தா யளித்தி யிறைவா வளித்தி யெளியே னிடங்கர் கதுவ
நொந்தாவி விடு பொழுதீது காத்தி நுனையன்றி யாவர் துயரேல்
வந்தே னளிப்ப வெனவெய்து கிற்பர் வளராதி மூல முடையா
யந்தோ வெனுற்ற லழிவுற்ற தைய வருள்செய்தி யென்னுமளவே.

வெயிலொத்த சோதி மணிமோலி யேந்தி மசைமேய தேவர்
பலர்தா, மியல்புற்ற ழைத்த தெமையென்று மெல்ல வெதிரெ
ய்தி நின்ற பொழுதிற், செயலற்ற ழைத்த விளியோசை சென்று
செறிகிற்றிர் நீயிர் முதலா, முயல்வுற்றெ னும்மை யுதவுற்ற வாதி
முதலைக் குறித்த தெனவே. ௧0௫

அத்தேவர் யாரு மருள் செய்த லாவ ததுகாண்டு நாங்களெனவங
தொத்தேற முன்னை யுரையோசையோடி யுததிக்க ணுதியரவின்
மைத்தேறு கொண்டல் பதுமங்கள் பூத்து வதிவுற்ற தென்ன
வொளிறு, மெய்த்தே விலங்கு செவியூடு புக்கு விரைவிற்புகன்ற
[வளவே. ௧0௬

என்னென்று சொல்வ னொடியிற் கவன்று விரையா வெழு
ந்து வெகுளா, முன்னின்ற பைம்பு ளரசென்கொ லானை யெனு
முன்ன மீதி லிவர்வான், மைந்நின்ற கோதை மடமாத ரோடி
வருமாறு நின்று குறியான், மின்னின்ற வாழி நினையாமு னங்கை
மிசைகொண் டிலங்க விரைவான். ௧0௭

கோணுடு நெஞ்சர் குறுகாத நாடு குறைநா டிலாத வறிவோ
ரேணுடு முள்ள மெனைநாட வைகு மெழினாடு நெல்லையொருவுங்

தாணுடு செம்பொ னதிலாய தெட்ட விடுநாடு பொன்னிதழுவுஞ்
சோணுடு சேறி யிமையாமு னென்று சொலுமுன்ன மாறுபெயர்
[வான். க0அ

வாணுறு கொண்டு சிறகூல் வழங்கு வளியால் விசும்பு திரியத்
தேனுறு கொண்ட துளவஞ் செறிந்த திருமாலை மார்பு திகழ
மேனுறு செம்பொ னுருளாழி வைய மிசையேகு செம்மலொளி
யோன், மூனுறு கொண்டு விழிசிம் புளித்து நெறிதட் டலைந்து
[திரிய. க0கூ

பூமே லிருந்தவொருநான் முகங்கொள் புதல்வன் றனுதுகுழுவுந்
நாமே லிருந்த கலைமாது நண்பி னுடனெய்த வந்து நணுகக்
காமே நிழற்க ணிறைகூடு நம்பி கணனே டொருங்கு தொடரத்
தேமேழுவு திக்கினுறைகாவல்கொண்ட திறலோர்விரைந்துகுழும

மார்நாக ரஞ்சி மறுவந்து நெஞ்ச மனமல்க மாய வினையி
னுறைத மங்கு லுழல்வோ ருயங்கி யலமந்து மூலைபடர
மேனுளில் வேந்த னடுமுன்னரோங்கன்மிசையேகுநீரிதெனவே
கூனுக நந்து பயில்கைய னேது குளிர்நாடு வந்து குறுகா. கக௧

சொல்லோடு முன்ன நினைவிற் படர்ந்து தொகுகன்னன் முத்த
மிடையா, நெல்லோ டணங்கு நெடுமீள் களங்க ணிறைசோழ
நாடு நடுவட், செல்லோடு நீடு பொழில்சூழ் களந்தை யொருதேவ
தாரு வனமே, யெல்லேறு கண்ட னிறையோ னுரைத்த படி
யெய்து நின்ற பொழுதே. கக௨

வேறு.

பொருஞ்சிறைக் கலுழன் றன்மேற் போதரு நிலைய னாகி
நெருஞ்சிவெங் கதிரை நோக்கி நின்றெனத் தன்னை யுன்னிக்
கருஞ்சிலை யனைய வேழங் கையெடுத் தரற்று மோதை
யிருஞ்செவி புகுத வல்லே யெறிந்தனன் செங்கை யாழி. கக௩

செஞ்செவே தூக்கி நீட்டு செழுமலர்ச் செங்கை யோடு
மஞ்சலை யஞ்ச னீயென் றருண்மொழி கிளக்கும் வாயான்
வெஞ்சுடர் நேமி தன்னை மிறையெயிற் றிடங்க ராவி
யெஞ்சிட வொறுத்தி யென்னு மிசைப்பொடுகடிதிற்போந்தான்.

பேரிசை யிமய முட்கிப் பிறங்குமெய் கொட்கு மாறே
யாரியர் துவன்றி யேத்து மடல்பொலி சாத்த னல்க

வேரிய கரிகாற் சோழ னெறிதரு செண்டு மேய்க்குங்
காரியல் கருணைக் கொண்டல் கைவிசைத் தெறிந்தவாழி. ௧௧௫

எல்லொளி நீலக் குன்றி னெழுந்தொரு பருதிச் செல்வ
னெல்லையி னோடி மேலை யோதம்புக் கொளித்தா னென்ன
வல்லையிற் கமலக் கண்ணன் வலங்கைநின் றெழுந்த வாழி
கல்லெனக் களிறு நின்ற கணமலர்த் தடம்புக் கன்றே. ௧௧௬

புக்கவெம் பருதி நேமி பொருகரா மிடறு போழ்ந்து
நெக்குயிர் பருகி நெய்த்தோர் நெடுஞ்சுட ராக மண்ணித்
தொக்குவிண் ணோர்க ணேவுந் தூமலர் மாரி போர்ப்ப
மைக்கரு முகிலன் னானை வலங்கொடு நின்ற தன்றே. ௧௧௭

பருவரல் பாரித் தாவி பறித்துடல் விழுங்க நின்ற
பெருவிற றைந்த பேழ்வாய்ப் பிறையெயிற் றிடங்க ராக
மிருவகி ராகப் போழ விடர்கடந் துவந்த வேழ
மொருவரும் வினையை நீத்த யோகியை யொத்த தன்றே. ௧௧௮

ஆழியங் தடக்கை யெம்மா னலைகடல் கடையு நாளில்
வாழிய வெள்ளை வேழம் வந்தென மைந்நா கப்போர்க்
கேழின்வெற் பலங்கு வேலை யிருந்தெழு கிளர்ச்சி யென்னப்
பாழிவிட் டெழுந்த தம்மா படரொரீஇக் கருங்கை யானை. ௧௧௯

பேரழி வரிதிற் பெற்ற பிறங்குகைக் களிறு கோட்டிற்
காரொரு வடிவ மேந்திக் கதிர்சுடர்ந் தனைய னாகி
யாரறி வுடைய நீரா ரகமலர்க் கோயில் வைகுந்
தாரணி துளவ மோலித் தமியனைக் கண்ட தன்றே. ௧௨௦

கரையிவர்ந் தகத்தி னோகை கைகடந் தேறப் போதந்
துரையிறந் தொளிறுஞ் சோதி யொருவனை வலஞ்செய் தன்பின்
விரைகமழ் கமல மன்ன மென்கழல் படியத் தாழ்ந்து
புரையறப் பல்காற் போற்றிப்புகழ்ந்திது புகலு மாதோ. ௧௨௧

## ஒருபோகு மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

இது தரவு:—

தாமரைமேல் வீற்றிருக்குஞ் சதுமுகத்துப் புத்தேளு
மீமிசையே கற்பகக்கீழ் விளங்கமரர் பெருமானும்

வானோரும் வானத்து வரம்புமே லினிதிருக்கு
மேனோரு மெண்டிசைக்க ணிறைமைகடைப் பிடித்தோரு
மாமறைக ளொருநான்கும் வந்தொருங்கு நின்கழற்காற்
றாமலரை நறைமலர்தாந் தூய்ப்பரவித் தொழுதேத்த
ஆயிரவா யாரரவி னரசுபணைக் குடைகவிப்ப
மாயிரும்பல் கணத்தலைவர் மகிழ்குறிப்போர்ந் தினிதியற்றச்
சங்காதி யைம்படையுந் தனித்தனியே யேவல்செயச்
செங்காந்த ணிகரங்கைத் தேவவல்லி பாங்கிருப்ப
மாநந்தி யாவருத்த மானத்துண் மணித்தவிசின்
மேனந்தி யிருந்தெவர்க்கும் வேட்டதுதந் தருளுவோய்!

இவை நான்கடித்தாழிசை மூன்று:—

அண்டமெலா மகட்டடக்கி யரவணையி லயர்வோம்பிக்
கண்டுயிலு மொருபெருமான் காசிபனா ரருந்தவத்தாற்
பண்டொருபார்ப் பனச்சிறுவன் படிவமொடு பயின்றுவயங்
கொண்டவிறன் மாவலிபாற் குறையிரந்த தெவன்குறையே. ௧

மூன்றாய வுலகமெலா முயங்குமுயிர் தொறுமுலவு
மான்றாண்மை யுளைபண்டே யதுகிடப்ப வொருமகனா
யேன்றாய வனந்திரிந்தா யெனிலவற்றை யுயக்கொள்ளுஞ்
சான்றாவா ரெவரேகாண் சதுமறைமேன் மறைந்திருந்தாய். ௨

சமயமெலாந் தலைப்பெய்தச் சமயநூ றொறுங்கடிந்த
வமைவரிய விணைவிழைச்சே யயர்ந்தனைநீ பாடியினென்
றிமையவரே முதலாக விசைக்கவொரு பெருமாயை
குமைவறுமா வகுத்தவுன்றன் குறியாவர் குறிக்கொள்வார். ௩

இவை அளவடிநான்கினால் வந்த அராகம் நான்கு:—

பழுதறு முனிவரர் பயில்வது மலைசூழ்
முழுதுல கமுநெறி முறைகொளு மியல்பு
மிழுதைகொ ணிருதனை யெறிகட லிடையோர்
பொழுதுயிர் கொடுமறை யுதவுநின் புணர்வே. ௧

திசைதொறு மிறைமைசெய் திறலினர் குழுவும்
மிசைபயில் புலவர்த மிகுதியு நெடுநா
ளிசையொடு வதிவதவ் வெறிகடன் மதியா
வசையறு மமுதரு ணினதுவண் கொடையே. ௨

உலகமு முலகுறை யுயிரொடு பிறவுந்
நிலவுவ தொருவிதி நினதுட னுழல்வோன்
புலனறி கலன்புற னுறவது பொழுதுன்
மலர்வழி மடிவயின் வருகென மருளே. ௩

ஊழிதொ றறநிலை யுலைவற நிலைசெய்
தாழியின் மறநிலை யவர்குழு மடியக்
கேழிய லடியவர் கிளர்தர வருள்வான்
வாழிய நிலனிடை மலிர்தனி னியலே. ௪

இவை பெயர்த்தும்வந்த தாழிசை மூன்று:—

மீனமாய் நீத்துகந்தாய் வியன்கமட மாய்ப்பயின்றாய்
தானமெனக் கண்வளர்ந்தாய் தனிமலையாற் கலக்கிவிட்டாய்
வானரத்தாற் றார்த்தனைமுன் வல்லம்பாற் சுவற்றுவித்தாய்
பேனநெடுங் கடனினக்கென் பெருநட்பும் பகையுமே. ௧

மழுவேந்தி யாயுலகின் மன்னர்குல மொருங்கறுத்தாய்
குழுவேந்தர் குலத்துதித்தக் கூர்மழுவோற் புறங்கண்டாய்
தொழுவேந்தர் பெருமானே தொல்லரக்கர் மருங்கொழிப்பான்
பழுதேந்தாத் தவத்தோடு பயில்வில்லும் பெறுபொருட்டோ. ௨

நெறிநூலொ டொழுக்கமெலா நிகழ்த்தினையந் நெறியோரீஇ
யறியாரிற் சேயொடுபின் னவனைவசித் திகல்கடந்தாய்
குறியாமை யெனினன்றே குறித்துவந்த வவ்வழியிற்
பொறியாரு நின்னொழுக்கம் புறத்ததுவோ வகத்ததுவோ. ௩

இவை நாற்சீரடி அம்போதரங்கம் இரண்டு:—

புரத்தவர்ப் படுப்பது நுனித்துப் போதமி
றரத்தமுன் றாகமந் தமிறு வன்றனை;
வரத்துறு வாதரா யணநற் பேர்கொடு
பரத்துறு நான்மறை தவப்ப யின்றனை.

இவை நாற்சீரோரடி அம்போதரங்கம் நான்கு:—

வேதியர் மகத்திறை யாக மேயினை;
மோதிய துறையெலா முற்றும் பாயினை;
தீதியல் சிந்தையர்க் கரிய சேயினை;
போதினை னிடத்துமேற் படிவம் போயினை.

இவை முச்சீரோரடி அம்போதரங்கம் எட்டு.—

மல்லர்தமை மடித்தனை நீஇ; மருதிரண்டு முறித்தனை நீஇ;
அல்லியமாட் டுகந்தனை நீஇ; அடல்வாணற் கடந்தனை நீஇ;
குடமயரும் பெருமா னீஇ; கொடுங்கஞ்சற் செற்றனை நீஇ;
படவரவி னடித்தனைநீஇ; பருவரைகை யேந்தினை நீஇ.

இவை இருசீரோரடி அம்போதரங்கம் பதினாறு:—

அமல னீஇ; அறிஞ னீஇ; அரியு நீஇ; அரனு நீஇ;
கமல னீஇ; கலைஞனீஇ; ககன நீஇ; கதிர்க ணீஇ;
விமல னீஇ; விநாயக ணீஇ; வேத நீஇ; போத நீஇ;
தமர் னீஇ; பகையு நீஇ; தமியை நீஇ; பலவு நீஇ.

எனவாங்கு, இது தனிச்சொல்.

இது இருபது அடிகளானிற்ற நேரிசை யாசிரியச்சுரிதகம் —

ஞால மொருங்கே சாலவுவந் தேத்த
நுவலருஞ் சீர்த்தித் தவலருங் களப்பா
ணெடும்பதி நாப்பண் விடுசுடர் விமான
நந்தியா வருத்தத் தந்தில்வீற் றிருக்கு
மொருபே ராள திருவாழ் மார்ப
சுடர்ந்திலங் கெரிகதிர் கடந்தொளி பரந்த
பருதி யாழி யொருவல னேந்தி
யிருசிறை விரிந்த பொன்மலை யொன்று
விசும்பூர்ந் தன்ன பசுஞ்சுடர் மேனிப்
புள்ளிறை கடைஇத் துனைவிற் போதந்து
நீடொளி தழீஇய நாளொடு கோளுறை
சேயொளி மரகதச் சிலம்பொன் றருளொளு
முந்துமா ரருவியோ டுற்றென நின்ற
செந்தா மரைக்கட் செம்மல் பைங்கட்
கரியொன்று பொருளாப் பரிவின்வந் தாண்டாய்க்
கென்னென்று ளப்பது நின்னருட் பான்மை
யாயினு மடியேன் மெய்தொன் றுரைப்பேன்
காமங் கதுவ வேம மொரீஇ
மயங்குமென் னறிவுநின் னடிக்கி
ழியங்குமா றென்று மினிதுய்த்தி யெனவே.　　　　கஉஉ

வேறு.

இவ்வழி துதித்தலு மீசன் செங்கையால்
வெவ்வழி யிடங்கரான் மெலிந்த வேழத்தின்
மெய்வழி தடவந்து விளங்கு மென்றலை
யுய்வழி வைத்திலை யுரைத்தன் மேயினன். ௧௨௩

செயிர்த்துள மகைப்புறச் சீற்ற வெங்கராப்
பெயர்த்தடி யிடாவணம் பிடித்தங் கீர்த்தலால்
வெயர்த்துடன் மெலிந்தனை யறிவு மேயினை
யயர்த்தனை போலுமா லடல்கொள் வேழநீ. ௧௨௪

தூவினை யருந்தவந் தொகுத்த போதினுந்
தீவினை யொன்றிடை யிருப்பிற் றேவரே
மாவினை முனிவரே யாக மற்றது
வீவினை யுறுமையா னுகர்தல் வேண்டுமால். ௧௨௫

முந்தண விந்திர னவையின் மூயுறை
கந்தரு வத்தனை கண்ட தீமையின்
மந்தண மறையெலாம் வயங்கு நாவின
னந்தணன் சாவத்தா லடைந்த தித்திறம். ௧௨௬

இறைமைசெய் மூன்றிட னிருந்து முத்தொழின்
முறைசெயு மூவரே முறைதி றம்பினர்
பொறைமருங் கறுத்துளே மான போதினு
மறையவர் வசையினைத் தடுக்க வல்லமோ. ௧௨௭

பூவணைக் கிழவனுன் முகத்திற் போதந்து
பாவணை மறைத்தொகை பயின்ற பான்மையார்
நாவணை நன்னெறி நயந்த காட்சியர்
யாவரிவ் வந்தணார்க் கியைய வெண்ணுவார். ௧௨௮

உலகெலா மியவுளா ரொளிரு மன்னதூஉ
மலகிலா மந்திரத் தமையு மம்மனு
நிலவுநா லவர்வயி னிறுவு நீர்மையாற்
றலனிலா யவர்களே கடவுட் டன்மையோர். ௧௨௯

சினவியெம் மிகழ்ந்துபின் னிறைஞ்சிற் றீமைதீர்த்
துனவரும் வரம்பெறற் குரிய ராபவப்

பனவரை யிகழ்ந்துபின் பழிச்சி யேத்தினும்
வினவின் முன்னிகழ்வினு னரகு மேவுவார். கரு௦

அலங்கெரி யலர்கதிர்ப் பருதி யாய்மதி
யிலங்குநான் மறையவ ருலவை யேத்துசீர்
நிலங்குல விவரெலா நிலாவு பல்லுயிர்
புலங்கொளக் காக்குமா றரிமை பூண்டுளோர். கருக

விரிதரு ஞாலமவ் வெம்மை யாற்றுவ
தரிதென வந்தண ரதனைத் தாங்கினர்
திரிதரு சுடரொடு திகழும் வையமே
லுரியகா லுணவுட னுறைப காண்டியால். கருஉ

வேரிடைப் புனல்பட விண்செல் வான்சினை
நேருறப் பொதுளுமந் நீர்மை வேதியா
சீருற வினியன வுதவிற் றேவெலாம்
பாரொடு மகிழுமாற் பகர்வதென் பற்பல. கருங

நூலொடு திரியுநுண் ணுணர்வில் பான்மையின்
மாலொடு திரியினு மறைக்கு லத்தருக்
கேலுநல் லுதவிக ளியற்று வோர்களே
மேலுயர் பதவியிற் றிருக்க மேதக்கார். கருச

கூற்றினை வெரிந்பெறக் கொண்ட வற்றரு
மாற்றல னந்தணர்ப் பேணு மன்பினு
னேற்றமில் பனவற்கோர் புலைத்தி யீன்றசேய்
காற்றெழு துறுபயன் கழறற் பாலதோ. கருரு

நஞ்சினை நுகர்ந்துழித் தமியந் நஞ்சினு
னெஞ்சுமந் துணர்பொரு ளுகர வெண்ணினா
தஞ்செறி கடம்புந்தங் குலனு ஞாலத்தி
லுஞ்சில ரொரீஇநர குழல்ப யாண்டெலாம். கருசு

இந்திரன் பதம்பெற வேய்ந்த வாற்றியே
வந்தொரு மன்னன்மாச் சசியின் மெய்துவா
னந்திலோர் பனவனை யிகழ்ந்த வன்வசை
யுந்தவெவ் வரவதா யுழன்ற தோரியால். கருஎ

பண்டுநுங் கோவொரு பன்வன் வாய்வசை
கொண்டுடல் பெண்குறி கூடு பான்மைதான்
கண்டுநின் விடையிடைக் கழறிப் போக்கினன்
மண்டுவெங் காமத்தான் மறந்து ளாய்கொலாம். கஙஅ

நஞ்சினுங் கொடியன நவைசெய் கிற்பன
வஞ்சலின் றருந்தின ருய்வ தாகுமால்
வஞ்சனைக் காமத்தான் மயர்ந்து மாழ்கின
ருஞ்சன ரென்பவர் யாவ ரோதுவாய். கஙகூ

படிற்றினுக் குறையிடம் பழிக்குத் தாதைவெம்
மடிக்கொரு செவிலிவஞ் சனைக்கு நண்பதான்
மிடிக்கிறை கள்ளஞ்செய் வினைக்குத் தாய்நரகக்
குடிக்கொரு கண்ணெனக் குலவுங் காமமே. கச0

நாமுறு வெவ்வினை யொருவி நாடலும்
வேமழற் குய்தலும் வெய்ய நோய்தெறத்
தாமயர்ந் ததுதணிப் பதுவுஞ் சாலும்வெங்
காமமென் றொன்றினைக் கடப்பர் யாவரே. கசக

என்றிவை நன்னெறி யியம்பி நின்விருப்
பொன்றின வுரைத்தியென் றோதப் போரினுற்
கன்றின களிறிறை கழல்கள் போற்றியே
நின்றன தன்னுள நிகழ்த்த லாயதே. கசஉ

அலந்தலைப் பட்டதை யருளிற் றீர்த்தனை
நிலந்தலைப் பெய்தவெங் களிற்றி னின்றவென்
குலந்தலைப் பெய்தன கடிந்து கோதில்வின்
டலந்தலைப் படும்வகை சாற்றல் வேண்டினேன். கசங

பண்டையிற் றழீஇயவப் பரிசு கொண்டென
கெண்டையங் கண்மனை கேழ்கொ ளொக்கலோ
டண்டர்கோன் வயிற்பெற லாய போழ்தினுங்
கொண்டனிற் கன்பறுக் கொள்கை யீகுவாய். கசச

எற்குநீ யருள்பெய ரென்று மெய்தினை
நிற்பதே கருதினே னிங்கிந் நீள்பதி

பொற்புற வப்பெயர் பொருந்தல் செய்தியென்
சொற்பொதி துதிசொன்னார் துயக்க றுத்தியே. ௧௪௫

வெள்ளிவெண் கோட்டடல் வேழ மின்னன
வுள்ளின வருத்தலு முவந்து பைந்துழாய்க்
கள்ளவிழ் தெரியலான் கருணை பூத்தனன்
விள்ளுவ னும்பல்வாய் வினைக யப்புற. ௧௪௬

மிடையுமிவ் வுருவொரீஇ விண்ணி னின்பதந்
தடையறக் குழாத்தொடுஞ் சார்தி நின்பெயர்
கடையுகத் தெய்தவிக் கடிந கர்க்கியா
னுடையம்ப ரங்கனே யாகென் றோதியே. ௧௪௭

இத்துதி யியம்பினர் யாவ ராயினுந்
தீத்துறல் கடிந்தென துருவு தந்தனென்
வைத்திடல் வைகுந்தத் தன்றி மற்றுண்டோ
வத்திற னேயுறே லளித்து ளேனென்றான். ௧௪௮

அருளுடை யண்ணலிஃ துரைக்கு முன்னரே
யிருளுடை நிறக்கரி யினத்தொ டிம்மென
மருளுடை வடிவொரீஇப் பண்டை மாட்சியிற்
றெருளுடைக் கின்னரர் வடிவு சேர்தலும். ௧௪௯

ஆழியாற் போழ்பெறு மிடங்க ரவ்வழி
யூழிநா ளிரவியி னொளிரு மேனிய
பாழிசால் கின்னரப் படிவ மெய்துபு
கேழுலாங் கிளையொடு விசும்பு கிட்டவே. ௧௫0

இருவருங் கடும்பொடு மீண்டி நட்டனர்
பொருவரு மும்பர்பூ மாரி தூர்ப்ப மேற்
றிருவமர் மார்பனைத் தேவ வல்லியை
யொருவரு மன்பினொ டுவந்து போற்றினார். ௧௫௧

அயலுறை பிரமனை யமரர் கோவுட
னியலுமெண் டிசைக்கிறை யவரை யிம்முறை
வியலுளங் களிப்புற மிடைந்தி றைஞ்சினார்
செயலுற விடைகொடு சேணி லேகினார். ௧௫௨

விரிஞ்சனீ டிசைக்கிறை மேயி னார்வினை
யரிந்தமா முனிவரந் தணர்மற் றேவரும்
பரிந்தபே ரன்பினாற் பரவித் தம்மனம்
பிரிந்தரி பதம்புகப் பெயர்ந்து போயினார். கரு௩

அவ்வழி யமரர்கோ னமலன் பாதங்க
ளுய்வழி யிறைஞ்சியித் தலத்தொர் மாமகஞ்
செவ்வழி யுறச்செயுஞ் செய்கை கண்ணினே
னிவ்வழி யருளென வேத்தி னானரோ. கரு௪

வந்தியா வருந்தொழ மருத நாயகன்
சிந்தியா நின்றது தரனுஞ் சேணின்மா
வுந்தியாண் டேகினா னெளிறு மாழியா
னந்தியா வருத்தமா னத்தை நண்ணினான். கரு௫

கயேந்திரவரதச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௪௩.

## எட்டாவது—தாலத்துவசச்சருக்கம்.

ஈதுமு னிகழ்ந்ததனை யானறியு மாறே
யோதின னதன்றுதி யுரைத்துநல னுற்றார்
மேதினியி னெவ்வளவு ளாரென விரிக்கேன்
மாதவி ரெனச்சவுன காதியர் வகுப்பார்.

வையக மனைத்துமகிழ் மல்குதுதி சொல்லி
யுய்யுநர்பல் லோரினொரு காதையள வேனு
மையபுக லையபுக லத்திற மறிந்தெம்
வெய்யவினை தீர்த்துமென வேண்டவவ னோதும்.

வேறு.

பூவரு நான்முகன் முந்து புணர்த்த
தூவரு வேலைசு லாவிய ஞாலத்
தேவரு மேத்து திறத்த தெழிற்சொன்
னாவரு நூலவர் நாட்டிவ தென்றும்.

மற்றுள தேத்து வளம்படு செல்வ
மெற்றுள தெற்றுள தியாவு மொருங்கே
பெற்றுள தன்னத னீடிய பெற்றி
யுற்றுள வாறெவ ரோதுவ ரம்மா. ச

விழுவொலி சங்கினம் விம்மொலி யொல்லென்
முழுவொலி மங்கையர் மொய்ம்மணிக் காஞ்சி
தழுவொலி யாழொலி யோடு தழீஇத்தாங்
குழுவொலி யோர்ப்பருங் கொள்கைய தம்மா. ரு

தீயக லங்குபு தேய்வுற நன்றே
மேயக லங்கண் விளங்குவ தென்று
மாயக லங்கலி லப்பதி நாமந்
தூயக லிங்க மெனச்சொலு ஞாலம். சு

அங்கர் பண்டயர் நற்றவ மன்பா
ன்னரு ருக்கொடோர் நாயக மாகி
மன்னவர் மன்னென வந்தென வந்தான்
றன்னிக ரில்லதோர் தன்மைய னம்மா. எ

பரந்தர ணிக்குள பண்டு கடிந்தா
னிரந்தர மேனிறை செல்வ நிலத்தான்
புரந்தர னைப்புற நோக்கு புணர்ப்பான்
வரந்தர நின்றநம் மாலருண் மிக்கான். அ

மூவெழு வள்ளல் பெயர்த்தொகை முற்று
மோவுற வோவலி லீகை யுவப்பின்
மேவர நல்கி விசும்பு மறைத்தான்
றாவுறு பன்மக நீடு தொகுத்தான். கூ

வேறு.

வலிக்கோர் வடமே ருவைமான வயங்கு நீரான்
கலிக்கோர் பகையா கியகாட்சியன் காயு ஞாட்பிற்
சலிக்காத தாலத் துவசப்பெயர் சார்ந்து நின்று
ஞெலிக்கா ரகிலசூழ் தரைகாக்குமோ ரூற்ற மிக்கான். க0

தெம்மன் னர்திறைச் சுமையுய்த்துச் செறிந்து போற்ற
வம்மொன் னலார்சா மரைக்கையினர் கால சைப்ப

வெம்மன்னர் மன்னன் மடங்கற்றவி செய்த மேவி
யிம்மண் ணிடங்காத் தனனூனெறி யேய வந்நாள். கக

காடே யரணு வுறைமாமுதற் கண்ட வெல்லா
நாடே றினபுக் குணுங்கூழென நாடி வந்து
பாடே றியமன் பதைப்பூசலோர் ஞான்று பாராப்
பீடே றியவல் லமைச்சர்க்கிது பேசு மன்றே. க௨

சூழ்ந்தே கிடனின்றி யொருங்கு தொகுத்து நாறிப்
போழ்ந்தே யவிலங் கடுகிற்பது போக்க மின்றாற்
றாழ்ந்தே றல்கடிந் திறையேதுணை தந்து சேறின்
வாழ்ந்தார்க ளாமே யவராய்ந்து வகுத்தி ரென்ன. க௩

தவனன் றெனவோ தினர்தம்மொடு தாழ்க்க கில்லான்
பவனன் றருபல் கதிமாப்படை பண்ணு கென்னக்
கவனந் தருகந் தருவம்பிணிப் புண்ட வைய
மவனுன் றினபல் லருந்தானை யவிர்ந்து மொய்ப்ப. க௪

புரநூறு கிற்போ னிலத்தேரிடைப் போந்த னன்கொ
லரநூறு வேலான் பகைமேற்செல வாயி னுன்கொ
றரநா னெறியி னடங்காவெனனத் தேவர் சாற்றப்
பரநூறு கோடி படைத்தானைமுன் பம்ப வுற்றான். க௫

தள்ளற் கரிய வலத்தானை தழுவ வேகி
யள்ளற் கருங்கா ரிருள்வெய்யவற் கஞ்சி வைகும்
விள்ளற் கருங்கா னிடைப்புக்கு விலங்கொ ருங்கு
கொள்ளற் கருமா ருயிர்வெளவினன் கொற்ற வேலான். க௬

கணையோடு புக்குப் படுக்குஞ்செயல் கண்டு தன்னற்
பிணையோ டொருமாப் பிழைத்தோட லும் பீடு சாரக்
கிணையோ டொலிக்கும் புனனுடன் கெழுமு தானைத்
துணையோடு செல்லான் றொடர்ந்தனன்பரி தூண்டி யாங்கே

அம்மா விருமா வனங்குப்புற் றடுத்த குன்றி
லெம்மா திரமுந் தெரியாநெறி யேக நோக்கி
விம்மா வெகுளா நெருங்குற்று விசிக மொன்றாற்
றம்மா வியையன் னவைகைவிடத் தாக்கி வீழ்த்தான். கஅ

கடுமா விணைவீழ்க் கியகாமரு காளை யன்று
னடுமாப் படைவை கிடங்காவத மைந்தி னப்பாற்
படுமா லெனவோர்ந் தகட்டிற்பசி பாய்ந்தொ றுப்பத்
தடுமாற்ற மிக்குத் தமியெல்லத் தணந்து செல்வான். க௯

நுவலுந் துரோணப் பொறைநீங்கி நுகரு நீரற்
றவலுந் துறுகல் லுமகன்றய லோங்கு கானிற்
கவலுந் துயருங் கடாவச்செலுங் காளை யாங்கோர்
தவலுந்து வேதப் பனவன்மனை சார்ந்து கூறும். ௨0

வேறு.

வாழி மறையோ யானோர் மன்னன் கலிங்க நகரத்
தூழி முறையே யளிப்பே னுறுமா வேட்டம் பெறுமா
பாழிப் படைமுந் துறுத்துப் படர்கான் பட்டே னிட்டோர்
நாழி லாட்டிக் கமா நுனித்துப் போதந் தனனால். ௨க

ஒறுக்கும் பசியா லயர்வே னொருவா ததுவே யொருவாய்
மறுக்குஞ் செயலீ கருதேல் வாய்தந் தனையென் னுயிரை
நிறுக்குந் தரத்த னீயே யென்றங் கினைய நிகழ்த்தக்
கறுக்குந் திறத்து மனத்தன் கடிது கொடிது புகலும். ௨௨

அரைசே யாக பிறரே யமரர் தாமே யாக
புரைசேர் மூவ ராக புனலு முதவ றக்கின்
றுரைசே ரெந்தை பண்டே யுலந்த நாளின் றதனி
னிரைசேர் மறையோ ரயின்ற பின்னர் நினக்கீ குவனால். ௨௩

பருதி வட்ட வெய்யோன் மேல்பாற் படரும் பொழுதில்
வருதி யீண்டு நில்லேன் மறையோர் காணின் வெகுள்ப
கருதி யென்னை யென்று கூடிய கழறக் குன்றம்
பொருதிண் டோளா னுள்ளம் புழுங்கி நொந்து புகலும். ௨௪

ஐயா பசியா னொந்தே னுவி தரிக்க கில்லேன்
செய்யா நன்றி தன்றே சிறிதே கருணை செய்யின்
மையார் வேலை யுலகம் வாழச் செய்த பயனிற்
றுய்யா மாற்றம் பகரே லுணவீண் டருளா யென்ன. ௨௫

பாவிப் பார்ப்பா னரசே பனவ ரில்லிற் பிறர்தா
மேவிப் பாத்துண் பதுவோ மிக்கின் றுவலீ தறியாய்

சேவிப் பாய்நீ பிறிதுநு செய்வா யென்னெஞ் சொல்லா
போவிப் பானின் றப்பா லென்று புகன்றான் சினவி. ௨௬

அங்கி வருணப் பெயருக் கமைந்த நெஞ்ச னுரையாற்
றங்கு வரிவிற் செங்கைத் தனிவெவ் குடையான் வெருளி
பொங்கி வரவிற் புதுதாப் புரைதீர் திவசப் பொருளோ
டங்கி வருமா வுள்ள நுணித்துப் புக்கான் விரைவின். ௨௭

பஞ்சி யனமென் கதலிப் பைந்தீங் கனிநேர் காணூற்
றஞ்சி யகலான் கைக்கொண் டடலூழ் பிடர்தொட் டுந்த
விஞ்சி யடரும் பசிதீ மெல்ல நுதுப்ப நோன்பின்
றெஞ்சி யதுகா ணென்ன விகனா றுபணவன் முனியா. ௨௮

கேடு வருமுன் மதிதான் கெட்டே வருமென் றன்றோ
பீடு கெழுமச் சொற்ற பிழையில் வாய்மைக் குரிதி
ஞூடு கரிவே றின்மை நாட்டிச் செல்லுங் கொடியோய்
வாடு கருமபே யாதி யென்று சாபம் வகுத்தான். ௨௯

பகரற் கரிய கொடுஞ்சொற் பகர்ந்தட் டன்ன வொழித்து
நிகரி லிலலந் தூய்மை நிறீஇய பண்பின் மீட்டும்
புகரின் மறையோர்ப் பேணிப் போற்றித் திவசம் புரிந்து
நுகாவுற றயர்வங் கொருவி நுணிக்க தவத்தா னிப்பால். ௩0

ஏதல் கேளாப் பரியூர்ந தொல்லை தானை யணவிக்
காதல் கெழுமு நகரங் காணக் குறுகி மனைபுக்
காதல யாவும் பிறழா வமைச்சர்க் குரைசெய் பொழுதே
வீதல் சாலாப் பேயின் வெய்ய படிவ முற்றான். ௩௧

அரண்பால் வைகும் பலரு மஞ்சி வெருட்ட வெருவா
முரண்பாய் கருமபேய் விழியா முகிழா வகல்வாய் விரியாச
சரண்பா லானு ராகார் தமைவாய்ப் பெய்துண் டகலாப்
பரண்பா வியபைங் கானம் படர்தந் தேகும் பாவம். ௩௨

கரிய நெடிய போக்கைக் கருங்காற் குறுங்கைப் பைங்கட்
பெரிய செடிகொள் சென்னிப் பேழ்வாய் முடைநா றுடலத்
தெரியங் கொத்த குஞ்சி யிகற்பே யெங்கு முழிதந்
தரிய கானம் பருவ மைஞ்ஞூற் றிரட்டி யாக. ௩௩

வந்தார் யாண்டே யாண்டும் மறுகி மறுகி யுழலுந்
நந்தார் செங்கை நம்பி நன்போர்க் களப்பா லருகே
முந்தூழ் பிடர்தொட் டுந்த முயற்றின் றெய்தி யொருசார்
வெந்தூ ழொழிசெந் தூர மேயங் குறையுங் காலை. ௧௪

எம்மான் பாதஞ் சுடரு மெழிலார் நுதலோர் மறையோ
னம்மா நந்தி வருத்த மான மதனை யண்மி
வெம்மா யங்கட் டருள்கொள் வேழ முன்னூட் டுதித்த
நம்மா வினைதீர் பாடல் நவின்று போற்று மோர்நாள் ௧௫

அன்ன பாடல் வெம்பே யகனஞ் செவிபூ டேற
முன்ன ரேய்ந்த கழுதின் முடைகொள் படிவ மாறி
மின்னின் சுடர்செய் மேனி விரும்பு போகச் சுடரா
மன்னர் மன்னன் றெய்வ வடிவம் பெற்று மகிழ்வான். ௧௬

தங்க ரங்கம் பொலியுந் தமியன் படிமாற் றினுக்கு
மங்க ரங்க வைபோ கங்க ளுக்கு மாகப்
பொங்க ரங்கட் டுறுமும் புரைதீ ரூரைந் துதவிச்
செங்க ரங்கள் குவியாச் சேவித் தன்பிற் பரவும். ௧௭

பூதந் தோறுங் கதுவும் புரைகொ ளுயிர்கண் மாட்டே
யேதந் தீர நின்ற யேனோர் காண வெந்தா
யெந்தா யறிவே தில்லை னிணையில் பேறு பெறுமா
வந்தா யெனினின் மாயம் வல்லா ரார்காண் சொல்லாய். ௧௮

சொல்லார் வேதங் காணுந் தூயோய் தோற்ற மேவி
யொல்லா வேழங் காப்பா னுள்ளிற் றதுதா னிற்ப
வுள்ளி யம்மா சொற்ற வுரைபொன் றெளியேன் பெற்ற
வெள்ளும் படிவம் போக்கிற் றென்னி னருடான் யாதே. ௧௯

வானே வளியே யெரியே மலியும் புனலே நிலனே
யகனேய் வடிவொன் றேந்தி யவிர்ந்தாய் களப்பாண் மீதே
யவிர்ந்தா யதுதா னும்பர்க் காக்க மெனினு மெளியே
னலிந்தார் பிறவி கடிவா னயந்த தென்றே நவில்வேன். ௨0

வேறு.

என்றன னிறைஞ்சி யேத்து மெல்லையின் னவர்க ளார்ப்பப்
பொன்றிணி விமானத் தோடு புகுந்துவை குந்த மேவி

நிறைவற் கன்பர் கோமான் வருகென நிகழ்த்த லோடும்
வென்றிறல் வேந்தன் றெய்வ மானத்திற் கணூஉ மாதோ. ௪௧

வகின னென்ப சேணோ ரிந்திரன் பிரம னாதி
யோகியர் மூக்கி னுச்சி விரனிறீஇ யுவப்ப வுண்கா
பாகியல் கிளவித் தீஞ்சொற் பாவையர் பரவ மேலாம்
போகவீட் டின்பம் பல்கும் புண்ணியப் பதவி மீதே. ௪௨

நிலமகள் பூவின் மேலா ணீளையென் றிவர்கள் சூழப்
புலவர்க டுதிப்ப வைகும் புனிதன்வை குந்தம் புக்கு
வலமுறை வந்து போற்ற மாயவன் றன்போ லாக்கி
யிலகிய கண்ட யான மீந்தவ னிறீஇயி னானே. ௪௩

தாலத்துவசச்சருக்கம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௩௱௪௬.

## ஒன்பதாவது—இந்திரயாகச்சருக்கம்.

அரவணைக் கிழவனன் றருளிவிட் டகறலுங்
கரமலைக் கிழவனத் தவியிடைக் கருதுசீர்
யிரவுநல் வேள்விதான் செயவிழைந் துற்றதைக்
குரவனைப் பரவியே கூறினா னோரவே. ௧

ஆண்டளப் பானுளத் தாலளந் தாயதே
மாண்டபண் பிற்றுநீ வாழியா யத்தலத்
தேண்டொகுத் தேவரே யேயுமா றோதுவார்
நீண்டமா மகமவ னோர்தனன் றென்றனன். ௨

தானுடைக் குரவனோர் தந்தமாற் றங்கொடே
வானிடத் தவரைநீர் மாமகக் குரியன
கானறுந் துளவினா னுறைகளப் பாளிடை
மானமின் றீட்டுமோ வல்விரைந் தென்றனன். ௩

ஓசனை யெல்லைமட் டியர்நெடுங் காவணம்
பேசின நெறியொரார் பெட்பினிட் டனரவ
ணேசில்பண் டாரமே யெய்தநற் றூரமே
யாசையோ டணையவே யன்பினுய்த் தாரரோ. ௪

கேள்விசா லந்தணர் கிளருமா முனிவர்கள்
வாள்வினை விச்சையர் மற்றுள தேவர்க
ணீள்வினைச் சித்தரா தியரெலா நின்றசீர்
வேள்விகா ணியவிழைந் தெய்தினார் நொய்தினே. ௫

வெண்களிற் றுழவன்விண் ணுலகுவிட் டினிதெழா
வெண்களிற் றுளவனற் பெயரிகந் தறிகலான்
மண்களிப் பெய்தவிண் வாழ்வுளார் சூழ்வரக்
கண்களிற் றெரிதரக் கடைதிறப் புகுதுவான். ௬

மதிவலன் புகன்மருன் மற்றுளா ருந்தொகப்
பதிவலம் வந்துசென் றுயர்பதந் தரும்வணந்
துதிவலந் தெம்பிரான் றனையடி முடியுறப்
பொதிவலன் பருளனைப் போற்றியெய் தினனரோ. ௭

வேறு

தூய மாமுடி வழங்கிய சோழன்பேர் புனைந்த
பாய மாசதுர் வேதிமங் கலத்துறை பார்ப்பார்
மாய னூர்க்கடி யார்க்கெலா மகத்திறங் காண்பா
னேயு மாசையு ளெய்துமு னெய்தினன் மகவான். ௮

போந்து ளானெனப் பூரண கும்பங்கொண் டெதிரே
யேய்ந்து ளார்மறை யந்தணர் தமைத்துதித் தேத்தி
யாய்ந்து ளீரெனக் கருளினி ரவிர்மகச் சாலை
சேர்ந்தெ மீசனுக் காக்குமா செய்ம்மென மொழிந்தான். ௯

மாக நாயகன் மொழிப்படி மாகமேற் புலவர்க்
கேக நாயக னடியவர் சூழ்ந்தெழுந் தனையான்
மோக னயகன் வேள்வியஞ் சாலையை முன்னாப்
போக நாயகன் பிற்படப் போயினர் மாதோ. ௰

புக்க வாசவன் புலவரோற் போதுமே லவர்க்குத்
தக்க வாறுபஃ றவிசளித் திருத்தலு மிருப்ப
மிக்க வாங்கிரன் மெய்ப்படு தூய்மைய ராக
வொக்க வானவ ருடனென விந்திரற் குரைப்ப. ௧௧

ஏய வானவர் யாவரு மிரும்புன லாடித்
தூய வாயச மாச்சிர யத்துறை புகுந்து

மேய நேமிசங் கவிர்குறி தோளிடை விளங்கப்
பாய புண்டரம் பனிரண்டு மெய்பெறப் பரித்தார். கஉ

நீல மால்வரை யுச்சியி னவிர்மதி நிலவே
போல மானிறப் புரந்தர னுகமே பொலியும்
வாலி தாகிய புண்டரக் குறியன்வண் டடந்தோண்
மேல வாழிசங் கவிர்குறி பொறித்துவீற் றிருந்தான். கஙூ

எம்மிற் பன்மடி யாய்ந்துளா ரினையமா மறையோர்
தம்முற் செய்ம்மக மெத்திறத் தோவெனத் தமியன்
விம்முற் றன்குரு வினவயிற் றழீஇயின னவரைக்
கைம்மிக் கோங்கிய களிப்பொடுங் கடைசெலக் காண்பான். கச

பண்டை ஞான்றிடைப் பயின்றுள பண்பினும் பரமன்
றெண்ட ராயவப் பனவர்தஞ் சொன்னெறி யூானு
பண்டர் நாயகன் வினைமுத லோனென வமையாத்
தண்ட நீர்க்குமத் துவரியூத் தானெனச் சாற்றி. கரு

மற்று முள்ளமா முனிவரர் மறையவ ரிவரை
யுற்ற பன்னெறித் தலைவரா வுளூற்றுவித் தொருங்கே
கற்ற கண்ணுபு கடைப்பிடித் தரியகந் தருவம்
பெற்ற தோம்பிறற் பூசனை முறையெலாம் பேணி. கசு

ஞாலஞ் சூழ்வரப் போக்கிமீண் டெய்திய நாளாற்
கோலஞ் சூழ்வரக் குறித்தெழு நாள்வரைக் கோதி
லேலஞ் சூழ்குழற் சசியொடு மிந்திரன் முன்போற்
சீலஞ் சூழ்ந்துசெம் பொற்றவி சேறினன் சிவண. கஎ

மறைமு ழக்கொலி புலவரைக் கூவொலி மலிவுற்
* றறைக முற்பொலி கண்டிய தேவன்சே யழகன்
இறைவ னும்பலைக் காத்தரு ளிலஞ்சிதொட் டகழ்ந்து
நிறைய வெய்திய புகழென நிலனெலாம் பரவ. கஅ

பண்டை ஞான்றினி னூறெனப் பருணிதர் யகரக்
கண்ட வேள்விக ளொருங்கொரு பொழுதிடைக் கண்டா
லண்டர் நாயக னின்றிழைத் துளமகத் தணுவிற்
கொண்ட பாகத்திற் கொக்குமோ வெனவும்பர் குறிப்ப. ககூ

* இந்தப்பாடலிற் குறித்தகதை இக்கோயிலில் வரைந்துள்ள சிலா சாதனத்திற் கண்டது.

குறித்த யாவையுங் குறைவொடு கோதற வாற்றிச்
செறித்த மாபடுத் தொருமுதற் றேவினை யார்த்தி
மறித்தம் மாமறை யந்தண ரீண்டினர் மகிழ்வார்
பொறித்த சிரவன் பெறும்படி யாசிகள் புகல. உ0

எழுந்தவ் வானவர்க் கிறைமகன் சதமக னெனும்பே
ரழுந்து பட்டதின் றும்முடை யருளினு லதுதான்
கொழுந்து பட்டுமேல் வளருமா கூட்டினி ரென்று
விழுந்து போற்றுபு வேண்டுவ நிதியெலா முதவி. உக

அங்குத் தன்பெய ரெற்றைக்கு மவிர்தரு மாறே
பொங்கித் தண்புனல் பொழிதரப் பொய்கையொன் றகழ்ந்தத்
துங்கப் பைந்தடத தவபிரு தப்பெயர் தோய்ந்து
வெங்கூற் றகடி நானத்தை விதிமுறை யாடி. உஉ

அன்ன மாதவர் குழாத்தொடு மம்பரத் திறைவன்
கன்னி யாரெயில் சூழ்கிடந் தூங்கெலாங் கவினு
மென்னை யாளுடைப் பரமன்பொற் கோயில்சென் றெதிரே
மின்னு கோபுர மேருவை யிறைஞ்சியுண் மேவி. உங

மட்டி னற்படி மாற்றினுக் குடல்பெற வழங்கி
யுட்டி ணிந்தபே ரன்பினுற் பூசனை யுளூற்றிக்
கிட்டி யுள்ளெழு மார்வமே லீட்டொடு கெழுமி
யெட்டி னைந்தினுக் கிறைவனைப் பணிந்திது புகல்வான். உச

வேறு.

முழங்கு வேத முடியிடத்து முந்து தேவர் விழியிடத்துங்
கழங்கு வேலை யிடத்துமனைத் துயிர்க ளிடத்துந் தனியுறைந்தி
யழுங்குவேழ முனமழைப்ப வன்பின்வந்தோய் செம்பொன்முடி
வழங்கு சோழ விண்ணகர மிதுவோ வுனக்கு வைகிடமே. உரு

வெங்கண்வெருவ வறனின்றே விரும்பிக்காண்பா னேந்தவித்துத்
தங்கண் மனத்து நேர்க்குறினுஞ் சான்றோர் காணுத் தத்துவநீ
துங்க மலியு மம்பொன்முடி வழங்கு சோழ சதுர்வேதி
மங்கலத்திற் புகுவேனுக் கெளிவந் தனையென் வழக்கோகாண்.

உளப்பா லோகை பிடித்துந்த வுன்னை யோங்கு வைகுந்தத்,
தளப்பா ரளவா மாண்பொடுகண் டமைவான் றவத்தோர் தொ

டர்ந்தெய்த, வளப்பான் மையினீள் புறங்கரம்பை வளநாட்டுள
நாட் டியசிறப்பாற், களப்பா ளிதனை விரும்பினேநீ யென்னிற்
கழறல் பிறிதுண்டே. ௨௭

வேறு.

காம மோவிலா கடைபெ யர்ந்தென
நாம வாகமேய் நயன னிவ்வழி
வாம மேகலை மாத ராளொடுந்
தாம நீடுழாய் தமிபற் போற்றவே. ௨௮

சும்மை யார்விசும் பொளிரத் தோன்றினு
னெம்மை யாளுடை யீசன் கார் முகில்
செம்மை மேருமேற் சேர்ந்து தோன்றுமா
பொய்ம்மை தீர்திறற் புட்க டாவியே. ௨௯

கண்டு போற்றிநீர் கண்பெ யர்ப்பமேன்
மண்டு பேற்றினன் மலிர நோக்குபு
விண்டு போற்றுள மேய புல்லன
கொண்டு பாற்றுமோ குன்று மாறென. ௩0

பயம்ப டாவிழி பலவு மாகமே
னயம்ப டாமிளிர் நாக நாயக
னியம்ப டாதன யாவு நீத்தியென்
கயம்ப டஇயர்நேர் கண்ணி னார்க்கென. ௩௧

தணப்பில் காதலான் றனையு மன்பினு
லுணர்த்த வங்கனே யோகை போயநின்
பணைத்த பூந்தடம் படிந்து ளோருளம்
பிணைத்த தந்தனம் பேசொ ரீஇயென. ௩௨

உள்ளி நின்றன வொருங்க ளித்தபின்
கள்ள பைந்துழாய் கவினு மார்பினன்
கொள்ளு சோதியாய்க் குலவு தன்னுரு
விள்ளு விம்பமே மேயி னனரோ. ௩௩

வரம்பெற் றண்ணலை வாழ்த்தித் தன்பெரும்
புரம்பெற் றுன்மிசைப் புரந்த ரன்பிற
வரம்பற் றோங்குமந் தணர்க ளாதியாத்
தரம்பெற் றூரெலாந் தம்மி லெய்தினார். ௩௪

இந்திரயாகச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௨0.

அருஞ்சுவை யமுத வாவி யாய்கலை வசிட்ட தீர்த்தம்
பெருந்தவ முனிவர் பாழி பிறங்குவா னவர்கோன் பொய்கை
திருந்திய களிறு காத்த செழுந்தட மெனவைந் தென்ப
பொருந்துமித் தலத்தத் தெய்வப் புனற்புக ழுரைநின் றன்றே. க

கார்த்திகை மதிசேய் வாரங் கதிர்சுடர் தருமுன் போதந்
தியாத்தநான் முறையிற் செய்வ யாவுஞ்செய் தமுத வாவி
யேத்துநீ ராறுகை யாப்பி தெறுத்தினி தாடி ஞாலந்
தூத்திறன் மறையோர்க் கீவோர் சுடர்முடி யரச ராப. உ

பணமதிற் பாதி யஃதிற் பாதியே யெனினு மன்பிற்
குணமதி மறையோர் கொள்ளக் கொடுக்கதந் திறத்திற் கேற்பக்
கணமதி லனையா ரீட்டு கருவினை கழியக் கண்டு
மணமதி துளவத் தாரான் மல்கருள் பெறுப சால. ௩

சுந்தர வமுத வாவி தோய்வனர் தான மாக
அந்தண ரிருத்தற் கென்ன வவரினி துண்டற் கென்ன
மந்திர முதவி னோரு மாநில நல்கி னோருஞ்
சந்தத மிருத்தற் கென்றே சமைந்தது துறக்க மம்மா. ௪

ஆவயிற் பிதிரர் கொள்ள வமைத்தன ரீரு வாவின்
மேவரு சிராத்த மென்னின் விளம்புமப் பிதிரர் யாரு
மோவில்பல் கற்பங் கஞ்ச னுலகமே லுவந்து வைகித்
தேவர்த மமுத மாந்திச் சிவனுப திண்ணந் திண்ணம். ௫

சொற்றவச் சிராத்த மாங்குச் செய்திடச் சூழ்ந்த போழ்து
முற்றவக் கயையிற் செய்தாங் குயர்பயன் முன்வந் தெய்து
மற்றுமந் தணர்க்கு வல்சி வழங்கினோ ரிம்மை யாவும்
பெற்றுறைந் தீற்றி னெய்தாப் பேரின்பம் பெறுவர் தாமே. ௬

அண்ணலார் தளிக்குத் தென்பா லாகிய வசிட்ட வாவிப்
புண்ணியத் தனுவிற் பூர்வ பக்கமே காத சிக்கண்
மண்ணுபு மனுமுற் றோதி மறையவர் பெறப்பொன் னீந்தோர்
நண்ணுப விருமைக் காய நலனெலா மொருங்கு மாதோ. ௭

அருமறை யிகழ்ந்தோ ரோது மந்தணர் தமைநிந் தித்தோர்
பெருமறை நெறியை நீத்தோர் பேணலர் மறையோர் தம்மை

யுரிமையி னனையார் யாரு முள்ளுவந் தாடி யந்தத்
திருமறை யோரைப் போற்றச் செப்புமந் நவைகள் பாறும். அ

உயர்மகப் பேற்றை யுன்னி னுவறிதி திங்க டோறு
மயர்வற மனையோ டாடி மாயவற் பூசை யீற்றி
நயனுறு பாய சான்ன நிவேதித்து நவிலும் பார்ப்பார்
பயனுற வுய்த்தோர் யாண்டிற் பளகறப் பெறுப சேயை. கூ

வசிட்டனூர் தடநீள் கோட்டில் வான்றவம் விழைகின் றோருங்
கசட்டினைக் கடியுங் காயத் திரிகணித் தியைக்கின் றோரும்
விசிட்டமும் பெறுப வாங்கு மென்றலைப் புதல்வர் மார்பி
னிசைத்தநூல்பொருத்தினோர்களெய்துமே றுரைத்தற்பாற்றோ.

அப்பெருங் கோட்டிற் செய்யு மன்னமாத் தானத் துற்ற
செப்பரும் பயனைச் சொல்லச் சேடனு மயர்வு கொள்ளு
மெய்ப்பொருட் கல்வி யாங்கு விளம்பிடப் பெற்றோர் சேட
னெய்ப்புற வாகை வேய்ப வென்பவக் கலைக ளானே. கக

மிகையறு கடவுட் டான மேல்புடை முனிவர் பாழிப்
புகரறு மீரு வாவொண் கதிரராப் பொத்து மெல்லை
பகர்விதி பாத மத்தோ தயமகோ தயமிப் பான்மை
தகைசெயும் பிதிர்நா ளின்ன தணப்பரு மல்க லானே. கஉ

மறையினுப் பிரம மென்னு மனுவுரைத் தினிதின் மூழ்கி
முறைபடத் தருப்பித் தாங்குக் கேத்திர பிண்ட முன்னு
வறையிர ணியசி ராத்த மாற்றியார் பிதிரர் முத்தித்
துறைபுகுந் தருளெ யெம்மான் றரக்கொடு துய்ப்ப ரன்றே. கங

அப்புன லாடி னோர்மூ வேழ்பிறப் பல்கு மொல்லா
வெப்பொருங் கொருவி நங்கோ மேலையோன் படிவந் தாங்கிச்
செப்புவை குந்தத் தன்றாற் கணித்துறச் செறிந்து வாழ்வர்,
மைப்புய லனையான் பாதங் கரியிவை யனைத்தும் வாய்மை. கச

ஈராறு மதியி னெந்த ஞாயிறே யெனினு மாக
வாரணக் கிழவர் வாவி யாடியந் தணர்க ளேற்ப
வோரணு வளவிற் செம்பொ னுதவினோ ரரங்கத் தான்முன்
மேருவைத் தான மீந்த வியன்பயன் பெறுப மாதோ. கரு

வாம்பரி வேள்வி நூறு வகுத்தவன் றடத்தி ளுனி
யாம்பரி வுறுநற் றிங்க ளவிருஞ்சுக் கிலத்து வாவி
லோம்பருங் கேட்டை நாளா லுவப்பன ருடல மண்ணிற்
றேம்பலி லனைய ருட்டிற் சிவணவீற் றிருப்பர் நாளும். க௬

அத்தடம் படிந்து வெண்டீ சந்தணர்க் கன்பிற் றந்தோர்
வித்தக முதல்வற் போற்றி மேதக வுதக தானஞ்
சித்தமா சகலச் செய்தோர் சேர்தரு பயன்கள் யாவு
மெத்தனை யுகஞ்சொற் றாலு மிறுகாண் பரிய வாமால். க௭

குரூவரைத் தபுத்த வெம்மை கோதையர்த் தடிந்த தீய
பரவுமந் தணரை நிந்தை பண்ணிய கொடிய பாவங்
கரவிடை யேதி லாட்டி கற்பழித் திட்ட வெல்லாம்
விரவுமற் றவுமத் தீர்த்த மேயவர் பொடிப்பர் நொய்தின். க௮

தகாவயி னுகர்ச்சி யெம்மான் றுண்மலர்க் கன்பி னுரை
நகாநனி யிகழ்ந்த லேதில் சமயத்தை நணுக வுள்ளால்
புகாநெறிப் புகுத லின்ன புரையெல்லாம பொருமி யேகுந்
தொகாவரு மகத்தோன் பாழி தோய்தரக் கருதி னோர்க்கே. க௯

எனையவை கனுமே யாக விபத்தினைக் கராமுன் னீர்த்த
புனல்படிந் துடையோர்க் காணிற் பொருமிநொந் தகலுங் கூற்றங்
கனைகழ லரசர் சீற்றங் கன்மிசை யெறிபந தேய்க்கும்
வினையமாற் றலர்செய் தாலும் மிடைதரா தகலு மன்றே. உ0

எந்தையைப் பூசை யாற்றி னிசைதரு புருட சூத்த
மந்திர நுவன்று குல்லை சண்பக மாலை யாதிக்
கொந்தவிழ் சிகழி சார்த்திக் கோதையைச் சிறப்புச் செய்து
சந்தத மிறைஞ்சி னெய்தாப் பேறெலாந் தழுவு கிற்பார். உக

பல்லிய முதவல் செய்வோர் மாணியம் பரிவி னீவோர்
புல்லிரு ளகல முன்றிற் புனைசுடர் மைப்போர் தேவ
வல்லியை யிறையைப் பூசை வகுப்பதற் குதய தந்தோர்
சொல்லிய வெவரு நம்மான் றுதையருள் பெற்று வாழ்வார். உ௨

அரசரா னெய்து மேத மடையல ராற்றும் புன்கண்
விரசுபேய் பூத மாற்று மிடுக்கண்கள் வெள்ளி நாளால்

முரசதிர் கோட்டத் தெங்கோன் முளரியம் பாத மேத்திப்
பரசின்முற் றொழித்து நன்மை பயின்றுற வைகு வாரால். உங

மேதகு முன்றில் வைத்த வேழத்தின் வடிவந் தன்னைக்
கோதறு புனலி னாட்டிக் கோசிக மமையச் சார்த்திப்
போதுதா யதுமே னாளிற் புகழுந் நவின்று போற்றி
வேதமி லமர ரின்ப மிம்மையே பெறுகிற் பாரால். உச

அளிசெய வீங்க ணுற்ற வந்தரி பூசைக் கீந்து
தளியது புதுக்கி மற்றுந் தந்தனர் சாறு கண்டார்
களிசெய்பூந்தோட்டமிட்டார்கதிர்க்கும்வாகனங்கள் செய்தோர்,
விளிவற வின்ப மெல்லா மேவின ரிருப்ப வென்றும். உரு

யான்சிறி தறிந்த வாறே யிணையறு நுங்க ளன்பிற்
றேன்செயுந் துளவ மோலி திகழ்களப் பாளி னேற்ற
மூன்செயும் பிறவி நோய்க்கோர் மருந்தென வுரைத்தே னங்கள்
வான்செயும் படிவற் போற்றி மல்கினிர் வாழ்க வென்றான். உசா

என்றலு முனிவ ரெல்லா மெழுந்துபே ருவகை பொங்கச்
சென்றடி பணிந்து சூத செப்பிய தலத்தை யாங்க
ளின்றடைந் திறைஞ்சு மாறே யருளென விடையேற் றாங்க
ணொன்றிய விசும்பா றாக வுற்றனர் களப்பா ணப்பண். உஎ

மந்திர நுவன்றார் புக்கார் வளர்புனற் றடங்க டோறுஞ்
சந்தத மிவைபோல் யாண்டுங் கண்டிலே மென்று சாற்றி
முந்துற விரைவி னாடி மொய்ம்மலர் பலவுங் கொய்து
சிந்துரங் காத்த செல்வன் சேவடி பூசை செய்து. உஅ

ஐம்படை யண்ணற் போற்றி யாங்கவர் விருப்பி னாறே
நம்பெரு முதல்வ னல்க நவையொரீஇ களிந்து போற்றி
யும்பரும் பிறரு மீண்ட வோங்குவை குந்த மேவிப்
பைம்புயல் வண்ணன் பாங்கர்ப் பயில்வன ரிருக்கின் றாரால். உகூ

அந்தணர் வாழ்க வேள்வி யானிரை யாவும் வாழ்க
சந்ததந் திங்க டோறுந் தளிநனி பொழிக ஞால
முய்ந்தினி திருப்ப வித்தி னுவப்புற விளைவு மல்க
செந்தமிழ் வளமிக் கோங்கித் திருவொடு பொலிந்து வாழ்க. ஙO

தேவதாருவனத்தலபுராணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் சஙO.

# களப்பாள்

## ஸ்ரீகஜேந்திர வரதர் சிலாசாதனங்கள்.

### மஹாமண்டபம் சோபனமண்டபம் தென்புறம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறபன்மா திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேக ரதேவர்க்கு யாண்டு ௩௰௯வது கற்கடக நாயிற்று பூர்வ பக்ஷத்து திரிதியை யும் சனிக்கிழமையும் பெற்ற மகத்துநாள் இராசேந்திர சோழவள நாட்டு புறங்கரம்பைநாட்டு அகரம் ஸ்ரீ முடிவழங்கு சோழசதுர்வேதி மங்கலத்து முடிவழங்கு சோழ விண்ணகரம்பெருமாள் திருமுற்றத்து ஸ்ரீஸேனாபதி ஆழ்வார் ஸ்ரீபண்டாரத்தார்க்கு இவ்வூர் கோமடத்து உய்யக்கொண் டாபட்டர் பாரிசைவெங்கள சபையுளோர் கொமர புரத்து கேசவபட்டஸர் வதாயாஜியாரை முதுகண்ணாக (கார்டியன்) உடைய கற்பகக்கொண்டிச்சா னியென தன்மதானப்பிரமாண இசைவுதீட்டு இவ்வூரில் எங்களுக்கு சாதாரணமாய் முன்னாள் பற்றிவியாய்க் கிடந்த நிலமான பொழுகன் ஆழ் வார் தன் பேர்நாட்டி காணி எற்றுப்போதுகிறநாளில் எங்களைக் கூட்டா தேபற்றி விலாப கொளதம்பேறுடையாலே கடமை இறுக்கையாழ்வார்க்கே பரமாகையால் இவன் கடமை இறுதேபோய் இவன்பேர் கடமைக்குப் புணைப்பட்ட ஸ்ரீ கோவிந்தப்பெருமானை இந்நாயனாருக்கு இவன் பேர்க்கட மைக்கு விற்ற நிலங்களில் என்பக்தாவின் கூறாய் என்னுதான ஒ௱று பாதியில் இவன்விற்ற நிலம் ௫௱வது கீடை ௨. ருக்கும் ஒக்க இவ்வூரில் நீக்கியுள்ள நிலங்களில் ஆழ்வார் கூற்றிலே திருநாமத்துக் காணியாக பற் றிக்கொள்ளவும நான் இந்நாயனாருக்கு தன்ம தானமாககொடுத்த நில மாவது பிடாகை சோழனுக்க நல்லூர் ஸ்ரீதேவி வதிக்கு மேற்கு திருவர ங்க வாய்க்காலுக்கு தெற்கு ௪௯௨ சதிரத்து ஆற்றுக்கு மேற்குப் பட்டநில த்து நீ ௱வதும் ௨௯ சதிரத்து ஸ்ரீகோவிந்தப்பெருமாள் விலையால் திருநாமத்துக்காணியான நிலத்து என்றோபாதியாய் நான் கொடுத்த நிலம் ஓ௱வது-ம் இவ்வதிக்கு கிழக்கு இவ்வாய்க்காலுக்கு தெற்கு ௪௯ சதிரத்து எடுப்பு இரண்டிலே நிலத்து நிலம் வது-௨௯ சதிரத்து மனைஎடுப்பு உள் பட நீ வதகி வ௱ முன்பு ஆழ்வார் கூறாய் இவன் தன் வழியால் இந் நாயனாருக்கான நிலம் நீக்கி என்னுதான நீ ௦௱ ஆக என்னுதான மனை எடுப்பு உள்பட நீ ௦நீ௱வத ௦வத இந்நிலம் அரைமா அரைக் காணி முந்திரிகை கீழரையே முந்திரிகையும் இம்மனையில் நின்ற தெங்கு களும் மரமும் மேல்விதாயும் மற்றும் எற்பட்ட உரிமைகளும் அகப்பட தானமாக உதகம் பண்ணிக்கொடுத்தேன். இந்நாயனார் ஸ்ரீஸேனாபதி

ஆழ்வார் ஸ்ரீபண்டாரத்தார்க்கு கோமடத்து உய்யக்கொண்டாபட்டர் பாரி யை கற்பகங்கொண்டிச்சானியென் இப்படி ஸ்வதத்து இன் நீ ருமீ ஷதஜீ ஒஷத தர்மதானமாகக் கொடுக்க ஷநுகண்டபட்டு இத்தர்மதானப் பிரமாணம் இசைவுதீட்டு எழுதினேன். கொமரபுரத்து கேசவபட்ட சர்வதாயாஜியார் எழுத்து.

அர்த்தமண்டபம் மகாமண்டபம் தென்மேல்புறம்.

2. ஸ்ரீ கோமாறபன்மா திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு உ௰௩-வது பங்குனிமாதத்து நாள் இராசேந்திரசோ ழவள நாட்டு புறங்கரமபை நாட்டு களப்பாள் அகரம் முடிவழங்கு சோழ சதுர்வேதி மங்கலத்து நாயனார் முடிவழங்கு சோழ விண்ணகரம்பெரு மாள் ஆனைகாத்த பெருமாளுக்கு வரகூருடையார் காடுவெட்டியார்மகரூர் சொக்கநாயனார் இந்நாயனாருக்கு பூசைக்கு கட்டின சந்தி ஒன்று சந்திரா தித்தவரை விசையகண்ட கோபாலர்.

கருப்பக்கிரகம் தென்மேல்புறம்.

3. ஸ்ரீ ராசராச சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩-வது துலா நாயிற்று பூர்வபக்ஷத்து துதியையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற மூலத்து நாள் சுத்தவல்லி சதுர்வேதிமங்கலத்து கொம்மரை வரதராசப்பட்ட னென் வரகூருடையான் சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்கு நான் விலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது இற்றை நாளால் நான் இவர்க்கு விற்றுக்கொடுத்த விலமாவது சுத்தவல்லி நல்லூர் சோழ னுக்க நல்லூர் நீ ருஜஸிஷத எங்கள் மாமனார் சோமதேவபட்டர் காணி யான முடிவழங்கு சோழனுக்க பெருமங்கலத்து பிடாகை சுத்தவல்லி நல்லூர் நீ ஜாஸிஷதம் சோழனுக்க நல்லூர் நீ யசாஸிம் சுத்தவல்லி நல்லூர் சோழனுக்க நல்லூர் நீ சமீஜாஸிஷதம் ஆ நீ உயருமீ இந்நிலம் இருபத்தஞ்சுமாவும் விற்றுக்கொடுத்துக்கொள்வதாவ எம்மி விசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினால் பு. எாறும் இப்பணம் எழுநூற்று ஐம்பதும் ஆவணக்களறியே காட்டேற்றி கைச்சிலவிற் கைக் கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தேன். விசையகண் ட கோபாலற்கு கொம்மரை வாதராசப்பட்டன் எழுத்து இப்படியறிவே ன். இராயூர் கெ. திருவரங்க நாராணப்பட்டனன் இப்படியறிவேன். வெள்ளைநல்லூருடையானென்.

சோபனமண்டபம் வடபுறம்மேல்.

4. ஸ்ரீ கோமாறபன்மா திரிபுவனசக்கரவர்த்திகள் இராசராசேந்திர சோழதேவர்க்குயாண்டு உ௰௩-வது மிதுன நாயிற்று பூர்வபக்ஷத்து சத்த மியும் வியாழக்கிழமையும்பெற்ற அனுஷத்துநாள் இராசேந்திர சோழவள நாட்டு புறங்கரம்பைநாட்டு பிர்மதேயம். முடிவழங்கு சோழச்சதுர்வேதி மங்கலத்து வெள்ளைநல்லூருடையான் கருமாணிக்கத்தாழ்வானென் வில

விலைப்பிரமாணம் வரகூருடையார் காடுவெட்டியார் சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்கு நான் நிலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது இவ்வூர் பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ· ௧௬ மீ ௩வஹும் சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· ௧௨ மீ ௩வஹும் திருக்குடந்தை கிருஷ்ணபட்டர் பக்கல் கொண்டுடையேனான சுத்தவல்லிநல்லூர் நீ சமீ சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· சமீ ஆக நீ· ௩௧௨மீ இந்நிலம் முப்பத்திரண்டுமாவும் எம்மிலிசைந்த விலைப்படி அன்றாடு நற்காசினால் பணம் ௯௱௯௰ இப்பணம் தொள்ளாயிரத்தறுபதும் ஆவணக்களரியே காட்டெற்றி கைக்கொண்ட இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும் இதுவேபொருள் மாவறுதியாவதாகவும் இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருள் சிலவோலைகாட்டக்கடவதல்லவாகவும் இப்படி சம்மதித்து நிலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம். விசையகண்ட கோபாலற்கு வெள்ளைநல்லூருடையான் கருமாணிக்கத்தாழ்வான் இவை என்னெழுத்து.

சோபனமண்டபம் வடபுறம்முதல் கருப்பக்கிரகம் தென்புறம் வரை.

5. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராசராச சுந்தரபாண்டியதேவற்குயாண்டு ௧௩-வது ஸிம்ஹநாயிற்று அமரபக்ஷத்து அஷ்டமியும் வெள்ளிக்கிழமையும்பெற்ற உரோகணிநாள் கிடாம்பி ஸ்ரீ நரஸிம்ஹபட்டனன் நிலவிலைப்பிரமாணம் தெய்வசிங்கவளநாட்டு வெண்டாழைநாட்டு ஒக்கூருடையான் நம்பிக்கும்தேவர்மகனார் சொக்கநாயனார் விசையகண்டகோபாலற்கு நிலவிலைப் பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது இற்றைநாள் இவற்கு நான்விற்றுக்கொடுத்தநிலமாவது. இவ்வூர் பிடாகை களப்பாள் சுத்தவல்லிநல்லூர் நீ· ௩௰சமீ ௩ம் சோழனுக்கநல்லூர் நீ· ௧௫ மீ ௩ம்ஆக நீ. ௫௰ மீ ௨ இந்நிலம் ஐம்பது மாகாணியும் விற்றுக்கொடுத்துக்கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினால் பணம் ௲௫௱ இப்பணம் ஆயிரத்தைந்நூறும் ஆவணக்களரியே காட்டெற்றி கைச்செலவிற்கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணப்பண்ணிக்கொடுத்த இந்நிலத்துமேனோக்கின மரங்களும் கீழ்நோக்கின கிணறுகளும் பாகமும் பாகஉரிமை பாகாஸ்ரயங்களும் மற்றும் எப்பேர்ப்பட்ட உரிமைகளும் அகப்பட விற்றுக்கொடுத்த இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும் இதுவேபொருள் மாவறுதியாகவும் இதுவல்லது வேறுபொருள்மாவறுதிப்பொருள் சிலவோலை காட்டக்கடவதல்லவாகவும் இப்படிசம்மதித்து விலைக்குறவிற்று பொருளூற கைக்கொண்டு விலைடபிரமாணம் பண்ணிக்கொடுத்தேன். சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்கு கிடாம்பி ஸ்ரீ நாரஸிம்ஹபட்டனென் ஸ்ரீ நாரஸிம்ஹபட்டர் ஆத்ரயான் நமக்கு ஊர்க்கணக்கு சூழலூருடையான் கருமாணிக்காழ்வானென் என்னெழுத்து இப்படியறிவேன். இராயூர் கெ. திருவரங்கநாராயணபட்டனென் இப்படியறிவேன். ஜானகி நரசிங்கப்பட்டனென் இப்படி

யறிவேன். திருச்சிற்றம்பலமுடையான்பட்டனென் இப்படியறிவேன். சாண்டிலன் வரதராசப்பட்டனென் இப்படியறிவேன். விளத்தூருடையான் ஏறுதிருவுடையானென் இப்படியறிவேன். வெள்ளைநல்லூருடையானென் இந்த சாதனத்துப்படி பலரும பிரமாணம் பண்ணினதால் இலாபகல்விலும் கொண்டபடி சாதனம் ஒன்றினுல் கோட்டி வரதராசபட்டர் பக்கல் கொண்ட பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ·௩௰௫ மாக்கு பு. ௫௰ இப்பண ஆயிரத்து ஐம்பதுக்கு நிலம் முப்பத்தஞ்சுமாவும் இவ்வாண்டு கன்னி நாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் புதன்கிழமையும் பெற்ற விசாகத்துநாள் காற்கியன் திருச்சிற்றம்பலமுடையான் பட்டர் பக்கல்கொண்ட சுத்தவல்லிநல்லூர் நீ·௩ மா ௨ சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௬௰அ மா ௨ம் சோழனுக்கநல்லூர் நீ·௫ மா வதும் ஆக நீ·௫௰௭ மா வதக்கு பணம் ௬௭ இப்பணம் ஆயிரத்தெழுநூறும் இராயூர் சொட்டை வீர நாரஸிம்ஹபட்டன் பக்கல்கொண்டுடையேனை நிலத்துக்கொண்டகாணி ஒன்றினுல் பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ·௩௰௫ மா ௬ம் சோழனுக்கநல்லூர் நீ·௰௬ மா ௨ம் சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௬ மா ௨ம் ஸ்ரீ கைக்கேசவப்பட்டன் பக்கல்கொண்டுடையேனை பிடாகை சோழனுக்க நல்லூர் நீ·௰௭ மா ௬வதும் சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௰௪ மா ௬ம் கிடாமபிச்செட்டு வரதராசப்பட்டன் பக்கல்கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் நீ·௰௬ மா ௬ம் சோழனுக்கநல்லூர் நீ·௰ மாம் நாலூர் பெரும்புறக்கடல் பட்டர் பக்கல்கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் நீ·௰௫ மா ௬வதும் சோழனுக்கநல்லூர் நீ·௰௫ மா ௨ம் இராயூர் சொட்டை வரதராசப்பட்டன் பக்கல் கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் நீ·க மா ௨ம் சோழனுக்கநல்லூர் நீ·௬ம் ஆக நீ·௱௫௰௨ மா ௨௬ இந்நிலம் நூற்றுஐம்பத்திருமாவரையே அரைக்காணியும் விற்றுக்கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினுல் பு. ௪௲௯௫௰ இப்பணம் நாலாயிரத்தைந்நூற்றைம்பதும் கொண்டு கன்னி நாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் வியாழக்கிழமையும்பெற்ற அனுஷத்துநாள் அணைப்புரத்து நாராயணப்பட்டனென் வரகூருடையார் சொக்கநாயனர் விசையகண்ட கோபாலற்கு நான் நிலவிலைபிரமாணம்பண்ணிக் கொடுத்தபரிசாவது. இற்றைநாள் நான் இவற்கு விற்றுக்கொடுத்த நிலமாவது பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ·௰௩ மா ௨ம் பிடாகை சோழனுக்கநல்லூர் நீ·௱௭௰௨ மா வதும் சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௩ மாம் சித்தை சிரிளங்கோப்பட்டர் பக்கல் கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௬ மா ௬ம் இராயூர் சொட்டை திருவடிபட்டர்பக்கல் கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ·௬௨வதும் பிடாகை சோழனுக்கநல்லூர் நீ·௨௬ம் கொண்டிவரதராசபட்டர்பக்கல் கொண்டுடையேனை சுத்தவல்லிநல்லூர் சோ

ணுக்கநல்லூர் நீ· தூறும் ஆக நீ உாஅ மீக்கு பு· சுதூஉாநுய இப்பணம் ஆறாயிரத்து இருநூற்று ஐம்பதுக்கும் ஆவணக்களரியே காட்டெற்றி· ங்க ச்சிலவிற்கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த இன் னிலத்து மேனோக்கின மரங்களும் கீழ்னோக்கின கிணறுகளும் பாக்மும் பாகா ஸ்ரீயங்களும் உள்ப்பட விற்றுக்கொடுத்த இந்நிலத்துக்கு இதுவேவிலை யாவதாகவும் இதுவேபொருள் மாவறுதிபாவதாகவும் இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப்பொருள் சிலவோலை காட்டக்கடவதல்லவாகவும் இப்படி சம்மதித்து நிலம்விலைக்குறவிற்று பொருள்கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தேன். விசையகண்ட கோபாலற்கு அணைப்புறத்து நாறாயணபட்டனென் இவை என்னெழுத்து இப்படியறி வேன். சாண்டிலன் வரதராசப்பட்டனென் இப்படியறிவேன். ஆத்ர யன் திருச்சிற்றம்பலமுடையான் பட்டனென் இப்படியறிவேன். விளத் தூருடையான் ஏறுதிருஉடையானென்.உ

சயனம் முப்பத்திமண்டபம் வடமேல்புறமேல்

6\. ஸ்ரீராசராச சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩வது கன்னி நாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் வியாழக்கிழமையும்பெற்ற அனுஷத்து நாள் வரகூருடையார் சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்கு சாண் டிலன் வரதராசப்பட்டனன் நிலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தபரி சாவது நான் இவர்க்கு விற்றுக்கொடுத்த நிலமாவது பிடாகை சுத்தவல்லி நல்லூர் நீ சகமீ சுத்தவல்லிநல்லூர் சோழணுக்கநல்லூர் நீ· ௩௨மீ ஆக நீ· அ௩மீ இந்நிலம் எண்பத்துமூன்றுமாவும் விற்றுக்கொடுக்க கைக்கொ ள்வதான் எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினால் பு.உதூநூா இப்பணம் இரண்டாயிரத்தைநூறும் ஆவணக்களரியே காட்டெற்றி கைச் சிலவிற் கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த இந்நி லத்து மேனோக்கினமரங்களும் கீழ்னோக்கின கிணறுகளும் பாக்மும் பாகா ஸ்ரீயங்களும் ஏற்பட்ட விலைப்படி விற்றுப்பொருள் கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்தேன் விசையகண்ட கோபாலற்கு சாண்டிலன் வரதராசப்பட்டனென் இவை என்னெழுத்து.

சயன முப்பத்திமண்டபம் வடமேல்புறம் கீழ்.

ஸ்ரீராசராச சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰௩வது ஸிம்ஹநாயி ற்று பூர்வ பக்ஷத்து துதியையும் திங்கட்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் ஸ்ரீகுமரதிருச்சிற்றம்பலமுடையான் பட்டர் பக்கல் கொண்டசாதனம் ஒன் றினால் சுத்தவல்லிநல்லூர் சோழணுக்கநல்லூர் நீ· ாநுயமீ சுத்தவல்லிநல் லூர் நீ· உ௰மீ௩ம் பிடாகை சோழணுக்கநல்லூர் நீ· உஅமீ௩நுஎங்கள் மாமனார் ஆரிதன் ஸ்ரீநாரஸிம்ஹபட்டன் வாணியாய் என்னுதான் சுத்தவ ல்லிநல்லூர் சோழணுக்கநல்லூர் நீ· கூ௰உமீ நும் பிடாகை சுத்தவல்லிந ல்லூர் நீ· ௫மீ தாநும் எங்கள் இளையமாமனார் ஆரிதன் கோவிந்தபட்டர்

காணியாய் என்னுதான சுத்தவல்லி நல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· எ மீ உஹுதம் பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ· ற மீ ஹுதம் திருவாய்க்குல முடையான் பட்டன் காணியாய் என்னுதான சுத்தவல்லிநல்லூர் சோழ னுக்கநல்லூர் நீ· ந. மீ ஐங்ஹுதம் சுத்தவல்லிநல்லூர் நீ· சு மீ ஐங்ம் முற்றிலன் நாராயணப்பட்டன் பக்கல் கொண்டுடையேனுமா சுத்தவல்லி நல்லூர் சோழனுக்கநல்லூர் நீ உமீ உம் சேற்றூர் நாராயணபட்டன் பக்கல் கொண்டுடையேனுன சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· ந.மீ உம் பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ· உமீ உம் நாரஸிம்ஹதேவப்பட்டன் பக்கல் கொண்டுடையேனுன சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· ஐங்ம் திருச்சிற்றம்பலக்காலான் தில்லைநகர்ப்பட்டன்பக்கல்கொண்டுடையேனுன பிடாகை சுத்தவல்லிநல்லூர் நீ· ந. மீ ஹுதம் பிடாகை சோனுக்கநல்லூர் நீ· சுமீ உஹுதம் ஆக உா அமஉமீ ஜஹுத இந்நிலம் இருநூற்றெண்பத்திரண் மொழுக்காணி முந்திரிகையும் விற்றுக்கொடுத்தேன் சொக்கநாயனுர் விசையகண்டகோபாலற்கு ஆத்ரேயன் திருச்சிற்றம்பலமுடையான் பட்ட னென் இந்நிலம் இருநூற்றெண்பத்திரண்டு மாமுக்காணி முந்திரிகையும் விற்றுகொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றுநடைநற்காசினுல் பு. அசூறா இப்பணம் எண்ணுயிரத்தைந்நூறும் ஆவணிக்களரியேகாட்டெ ற்றி கைச்சிலவிற் கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடு த்த இந்நிலத்து மேனேக்கின மரங்களும் கீணேக்கினகிணறுகளும் பாக மும் பாகாஸ்ரயங்களும் அகப்படவிற்றுக்கொடுத்த இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும் இதுபொருள் வறுதியாகவும் இதுவல்லது வேறுபொ ருள் மாவறுதிப்பொருள் இதுவோலைகாட்டக்கடவதல்லவாகவும் இப்படி சம்மதித்து விலைக்குற விற்றுப் பொருள் கைக்கொண்டு விற்று விலைப்பிர மாணம் பண்ணிக்கொடுத்தேன் விசையகண்ட கோபாலற்கு ஆத்ரயன் திருச்சிற்றம்பலமுடையான் பட்டனென் இவையென்னெழுத்து இப்படி யறிவேன் சாண்டிலன் வரதராசப்பட்டனென்

## சயனமுப்பத்திமண்டபம் வடபுறம்.

8. ஸ்ரீ கோக்கட்பனமரான திரிபுவனச்சக்கரவாத்திகள் ஸ்ரீராச ராச சுந்தரபாண்டியதேவர்க்குயாண்டு மந.-வது ஸிம்ஹநாயிற்று பூர்வ பக்ஷத்து அஷ்டமியும் வெள்ளிக்கிழமையும்பெற்ற உரோகணிநாள் ராசேந் திர சோழவளநாட்டு புறங்கரம்பைநாட்டு பிர்மதேயம் வெள்ளைநல்லூர் முடிவழங்குசோழச்சருப்பேதிமங்கலத்து கண்டூர் சந்தனபாஷபட்டனென் வரகூருடையார் காடுவெட்டியார் மகனுர் சொக்கநாயனுர் விசையகண்ட கோபாலற்கு நான் நிலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தபரிசாவது இற்றைநாளால் நான் இவர்க்கு விற்றுக்கொடுத்த நிலமாவது. இன்னுள் பிடாகை சுத்தவல்லிநல்லூர் சோழனுக்கநல்லூர் நீ· மஎ மீ ஜஹுதம் சுத்த வல்லிநல்லூர் நீ· நமகூ மீ ஜஹுதம் சோழனுக்கநல்லூர் நீ· ௦ஙமீ ஙஹுதம்

ஆக நீ· எம் ஸ்ரீ ஒவூ இந்நிலம் எழுபதுமா காணிமுந்திரிகையும் விற்றுக் கொடுத்துக்கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசினால் பு. உதூஎகூ இப்பணம் இரண்டாயிரத்து நூற்றுமுப்பதும் ஆவணக்களரியே காட்டெற்றி கைச்சிலவிற்கைக்கொண்டு விற்றுவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தேன். விசையகண்ட கோபாலற்கு சந்தணபாஷப் பட்டனென் இப்படி என்னெழுத்து. இப்படியறிவேன் வரகூருடையானென்

## சயனமுப்பத்திமண்டம் வடகீழ்புறம்மேல்.

9. ஸ்வஸ்திஸ்ரீ வீரமடத்துப்பட்டிலிருக்கும் சேனைக்கடைக்கைக் கோளரில் கண்டியதேவன்மகன் அழகன் ஸ்ரீ ஆனைகாத்தபெருமாள் திருத்குளம் இவன் தன்ம ஸ்வஸ்திஸ்ரீ.

## சயனமுப்பத்திமண்டபம் கிழக்கு வடகீழ்புறம்.

10. ஸ்வதிஸ்ரீ கொச்சடைபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராசராச சுந்தரபாண்டியதேவற்குயாண்டு ௰உ-வது துலாநாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் திங்கட்கிழமையும்பெற்ற உத்திரட்டாதிநாள் இராசேந்திர சோழவளநாட்டு புறகரம்பைநாட்டு பிர்மதேயம் ஸ்ரீமுடிவழங்கு சோழசதுர்வேதிமங்கலத்து கிடாம்பி ஸ்ரீநாராயணப்பட்டனும்கிடாம்பிசெட்டு வரதராசப்பட்டனும் இராயூர் சொட்டை திருவரங்க நாராயணப்பட்டனும் நாலூர் பெரும்புறக்கடல்பட்டனும் இராயூர் சொட்டை சிவதாதப்பட்டனும் ஏகவாணப்புரத்து நாராயணப்பட்டனும் சத்கோட்டி சதாப்பட்டனும் கோயிலாபூசன் தில்லைநாயகப்பட்டனும் சுத்தவல்லி சோழனுக்க நல்லூர் ஆத்ரயன் திருச்சிற்றம்பலமுடையான்பட்டனும் கொம்மரை வரதராசப்பட்டனும் இவ்வனைவோர்களும் நிலவிலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது தென்புறத்து இதன் உரிமைத்தான வரகூருடையார் பிள்ளை காடுவெட்டியார் மகனார் சொக்கநாயனார் பராக்கிரம பாண்டிய மழவராயருக்கு நிலம்விற்று நிலவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது இவ்வூர் காணியுடைய எங்கள் இவ்வூர் நிலவிலைப்பிரமாண நிலமாவது குலமாணிக்கநல்லூரும் எல்லையாவது கீழ்பாற்கெல்லை பசுபோக ஆற்றுக்கு மேற்கும் மேல்பாற்கெல்லை ஸ்ரீ பூமிவதிக்கு கிழக்கும் தென்பாற்கெல்லை சங்கேந்தி ஏரிஉள் கிடை உள்பட வடக்கும் வடபாற்கெல்லை கள்ளியூர் வாய்க்காலுக்கு தெற்கும் ஆக இந்நான்கெல்லைக்குள்பட்ட விளை நிலமும் நத்தமும் நீர் நிலையும் உள்பட நீ· ருஎம்ஸ்ரீம் மாங்குடி எல்லைக்குத் தெற்கும் பிள்ளைக்கிள்ளை வதிக்கும பசுபோக ஆற்றுக்கும்சங்கேந்தி எல்லைக்கும் வடக்கும் விளைநிலமும் நத்தமும் நீர் நிலையும் உள்பட நீ· சுஎஅ ஸ்ரீ ஆக நீ· ருஎஅ ஸ்ரீ இதில் பலகாயனமாற்கும் தேவதானமும் திருவிடைப்பட்டமும் நீ· ஸ்ரீ நீக்கி நீ· ருசுஎஅஸ்ரீ இன்னிலம் ஐந்நூற்று அறுபத்தெட்டுமாவும் எம்மிலிசைந்த அன்றாடு நற்காசினால் பு. ஆரு இப்பணம் ஆயிரத்தைந்நூறும் ஆவணக்களரியே காட்டெற்றிகைச்சிலவிற்

கைக்கொண்டு இந்நிலத்து மேனோக்கின மரங்களும் கீழ்நோக்கின கிணறுகளும் பாகமும் பாகஉரிமை பாகாஸ்ரயங்களும் மற்றும் ஏற்பட்ட விலைப்படி விற்றுக்கொடுத்த இந்நிலத்துக்கு இதுவேவிலையாகவும் இதுவே பொருள் மாவறுதியாகவும் இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருள் சிலவோலை காட்டக்கடவதல்லவாகவும் இப்படி சம்மதித்து விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம். சொக்கநாயனார் பராக்கிரம பாண்டிய மழவராயற்கு இவ்வனைவோர்களும் கிடாம்பி ஸ்ரீ நாராயணபட்டனென் எழுத்து காம்பீச்செட்டு வரதராசபட்டனென் எழுத்து இராயூர் சொட்டை திருவரங்க நாராயணபட்டனென் எழுத்து நாலூர் பெரும்புறக்கடல்பட்டனென் எழுத்து இராயூர் சொட்டை சிவநாதப்பட்டனென் எழுத்து ஏகவாணபுரத்து நாராயணப்பட்டனென் எழுத்து சத்கோட்டு சதாப்பட்டனென் எழுத்து கோயிலாபூசன் தில்லைநாயகபட்டனென் எழுத்து ஆத்ரயன் திருச்சிற்றம்பலமுடையான்பட்டனென் எழுத்து கொம்ம வரதராசப்பட்டனென் எழுத்து.

11. உட்பிரகாரம் சந்நிதி வடபால் குத்துக்கல்லில் சக்கரத்தாழ்வாரின்கீழ ஸ்வஸ்திஸ்ரீ களப்பாள் ஆனைக்காத்த பெருமாளுக்கு குறச்சிபுலை நான்கெல்லையும் நத்தமும் குளமும் இதினுட்பட்ட நிலமும் தாரைவார்த்தேன். ஸ்வஸ்திஸ்ரீ.

குறிப்பு :—கருப்பக்கிரகம் வடமேற்குமேலுள்ள சாதனம் முற்காலத்தவர் திருப்பணியில் சிதைவுற்றமையால் எடுக்கவியலவில்லை.

# அரும்பத விளக்கம்.

## பாயிரச்சருக்கம்.

க. துவர-முற்ற; நிரயபயயாம. இப்பாடலில் ஆறு சுவையும் வந்தமை காண்க

ச. மயிலை-மீன். இது நிரனிறை.

ரு. கரி-சாட்சி.

கo. களிந்த-செறிந்த.

கக. வளி-காற்று.

கரு. பாசுரம்-நம்மாழ்வார் பாசுரம்; அப்பா ? சுரமாத்திரை உரையென்று நிலேடையாகக் கொள்க. பருணிதன்-பண்டிதன். பாற்றுவது - போக்குவது.

கரு. சூள்-சத்தியம்.

நுனித்து-கருதி.

கசு. கிழி - பொன்வைத்துக்கட்டிய பொதி.

கஅ. ஐவகை நிலை - கடவுளினது பரம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சை' என்னும் ஐந்துவகை நிலைமை.

உக. துவன்று-பொலிகின்ற

உஉ. தன்புகழ் -" ஸ்ரீ சைலேச" வென்ற சுலோகத்திஞல் கூறப்பட்ட புகழ்

உச. கடலமிர்து - "ஓர்க்கோலை, சங்கம், ஒளிர்பவளம், வெண் முத்தம், நீர்ப்படுமுப்பிஞேடைந்து" என்பதஞற் காண்க. எருந்து-கிளிஞ்சில்.

உரு. தலைக்கீடு-வியாஜம்.

## நைமிசச் சருக்கம்.

க. நேமி .. க்கானம் - நைமிசாரணியம்.

உ. விஷ்ணுவுக்குக் கூறுங்கால் திருமாது, அவசித்தலமான் மகிழ, ஆதவர் சூழ, வானுயர வளர்ந்து என்க கானத்திற்குக் கூறுங்கால் மாதவம் நித்தல் அ மால் மகிழ வாய்ந்து மாதவர் சூழ என்க. நித்தல்-தினம்.

ந. பாதத்திற்குக் கூறுங்கால், உபலம் கனியா நல்கி ககனம் கடந்து செவ் வேதப்பாதுகமேல் நிலாய் மன்றுதல் சாருமென்க; உபலம்-கல். கனியா-கன்னியாக. மன்-நிலைபெற. நுதல் சாரும்-நெற்றியில் திருநாமவடிவமாகச் சாரும். கானகத்திற்கு பலம் கனியா தோயம் நல்கி செவ்வே தப்பாது உகமேல் மன்னுதல் சாரும் என்க. உகமேல்-பலயுகங்களுக்கு மேலாக.

ச. நிகர்த்தன்று-நிகர்த்தது.

தருக்காரை ஒட்டி-பகைவரை ஒட்டி; மரங்கள் மேகமண்டலத்தளவு உயர்ந்து. மையார் மெய்யானை அணைந்து- விஷ்ணுமூர்த்தியையடைந்து; யானைகளை அடையப்பெற்று. மரை -தாமரை; மரையென்னும் விலங்கு. அத்தம்-கை; அரு நெறி.

சு. ஆனகதுநதுபி- வசுதேவன்.

கூ. வெண்டாமரைமணி' யணிதல்-ஞானம் மிகுதியாக அடைதலை விரும்பி.

கக. காழ்- வைரம். பாற- நீங்க. சூழ்ந்தது-ஆலோசித்தது.

கஉ. மூய்-நெருங்கி. சுதை-அமிர்தம். ஏண்-பெருமை.

கச. பாடுகிடந்த-வரங்கிடந்த.

கஎ மச்சபுராணம் உத்தராபாகத்தில இத்தல புராணம் கூறப்பட்டுள்ளது.

கஅ. அதர்-வழி.

உரு மருதவேந்தன்-இந்திரன்.

உசு. நாகம்-யானை. மாகம மஞ்சு-ஆகாயத்திலுள்ள மேகம். ஆகமம்-வைஷ்ணவாகமம. மஞ்சன்- மைந்தன்.

## தலவிசேடச்சருக்கம்.

க. இயவுளார்- கடவுளார். கவற்றி - கவலைப்படச்செய்து. அல்கிய- தஙகிய. உடங்கு-ஒருங்கு. மறஇயவு-கெட்டவழி.

அ.அ. தலைப்பெய்து-கூடி
அகூ. வாளா இலங்கு கோடு-பிறை.
கூ0. மருங்கு-கூட்டம்.
கூக. குறும்படி-பறிக்கும்படி. அலகி-தங்கி
கூகூ. மண்ண-கழுவ.
கூஅ. தெகிழ்ந்து திகழ்ந்து ; விளங்கி. நந்தி-உயர்ந்து.
கூகூ. எந்து என்ன ?
க0உ. சாம்பி - சோர்ந்து பிறிதி-கதறி. விதிர்த்து நடுங்கி
க0கூ. சிம்புளித்து-மூடிக்கொண்டு.
கக0. இறைகூடும்-அரசாட்சிபுரியும.
ககக. மங்குல் உழல்வோர் - அசுரர்
ககஉ. களந்தை-களப்பாள்.
ககந ஓதை-ஓசை.
ககச. மிறை வளைவு.
ககரு. தொட்டும்-சுழலும
கஉஉ. மேல் நந்தி-மேல் விளங்கி ஆன்றாண்மை-அமைந்த ஆட்சி இழுதை-பொய் மலிர்தல் - விளங்கல் பேனம் -நுரை மழுவேந்தி-பரசுராமன். மூன்றுகமம் - அங்கம், பூர்வம், பகுசுருதி. சேயிளை - தாரத்தினை கரியொன்று - இடவழு வமைதி
கஉந. தடவந்து-தடவி.
கஉச. அலைப்புற-துன்புற.
கநக. உலவை-காற்று.
கநஉ வையம்-தேர்.
கநந. பொதுளும-தழைக்கும்.
கந௫. வெரிந்-முதுகு. ஆற்றலன்-மிருகண்டமுனி.
கநகூ. கயம்பு சுற்றம்.
கநகூ. மயர்ந்து-மயங்கி.
சசக. நாம்-அச்சம்
கச௫. துயக்கு-தளர்ச்சி.
கசகூ. ஆம்பல்-செவ்வல்லி ; யானையுமாம்.
க௫0. போழ்-பிளவு பாழி-வலி.

## தாலத்துவசச் சருக்கம்.

கூ. சுலாவிய-சூழ்ந்த.
ச. தேத்து-தேசத்து
கஉ. சூழ்-பயிர். மன்தரின் கூட்டம்.
கந. நூறி-அழித்து. பிளந்து. பொக்கம்-தா
கச. கவனம் - வேகம். குதிரை.
கஎ. பிணை-பெண்மான்
கஅ விசிகம் - அம்பு.
உஉ. திறக்கும்-திறத்து
உகூ. பாத்து-பகுத்து.
உஅ. நுதுப்ப-அவிக்க.
நந. போந்தை-பனை. முடை-தீ நாற்றம்.
நச. வந்து-காற்று
ற்சி சிந்தூரம்-புளி.
நகூ. கழுது-பேய்.
நஎ. படிமாற்று - படி அங்கம்-பரிகரத்தார்முத ரங்கவைபோகம்-சன

## இந்திரயாகச்ச

க. தளி-கோயில்.
உ. ஆண்டளப்பான்-
ந. பண்டாரம்-பண்டாரம்-நல்லபண்டங்கள்.
எ. வலந்து-சூழ்ந்து.
கச. கைமிக்கு-அளவு
கரு. வினைமுதல்-கருத்
கஅ. உம்பல்-யானை.
உக. அழுந்துபட்டது-
உச. உடல-பொன்.
உகூ. சும்மை-ஒலி.

## தீர்த்தமான்மியச்ச

உ. அறுகை-அறுகம்புல்லுகம். தெறுத்து-கா இட்டு.
கூ கருவினை-பாவவி
௰. விசிட்டம்-எல்லா
கஉ. அல்கலான்-நாள்
உக. குல்லை-துளசி.
உந. பரசின்-துதித்த
உச. கோசிகம்-பட்டு.
உரு. சாறு-திருவிழா.
கூ0. தளி-மழை.